24 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com 416-282-4978



RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

Call: 416.301.1733



FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969



நதி 24 பாலம் 21 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் NOVEMBER 01, 2014


# ஒன்ராறியோ உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிவுகள்

ஒக்ரோபர் 27, 2014 இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் 31 இற்கும் மேற்பட்ட தமிழர் போட்டியிட்டனர். அதில் மூவர் தெரிவு செய்யப்பட்டனர்.

மார்க்கம் நகரசபைக்கு 7ஆம் வட்டார உறுப்பினராக லோகன் கணபதி அவர்கள் மூன்றாம் முறை தெரிவு செய்யப்







பட்டுள்ளார். இவருக்கு 48% இற்கு மேற்பட்ட வாக்குகள் (5673) கிடைத்தன. யோக் பிராந்திய ஆங்கில பாடசாலை சபைக்கு மார்க்கம் 7ஆம் 8ஆம் வட்டார உறுப்பினராக யுனிற்றா நாதன் இரண்டாம் முறையாக தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு 59% இற்கு மேற்பட்ட வாக்குகள் (9361) கிடைத்தன. ரொரன்றோ மாநகர சபையின் ஆங்கில பாடசலைக்கு 18ஆம் வட்டார உறுப்பினராக பார்த்தி கந்தவேள் முதன் முறை தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருக்கு 23% இற்கு மேற்பட்ட வாக்குகள் (6983) கிடைத்தன. பார்த்தி கந்தவேள் இதுவரை காலமும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட தமிழரில் நான்காவது தமிழராக இருந்தாலும் இவரே ரொறொன்ரோ மாநகரசபைக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது தமிழர் என்ற பெருமையை பெறுகிறார். மற்றைய மூவரும் மார்க்கம் நகரசபை மற்றும் யோர்க் பிராந்திய கல்விசபைகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

போட்டியிட்ட 31 தமிழரும் வெவ்வேறு வட்டாரங்களில் தனித்தனியே போட்டியிட வில்லை. பல வட்டாரங்களில் ஒன்றிற்கு மேற்பட்ட தமிழர் போட்டியிட்டிருந்தனர். இதனால் போட்டியிட்ட எல்லா இடத்திலும் தமிழர் வென்றிருந்தால் கூட 21 பேரே தெரிவு செய்யப்பட்டிருக்க முடியும். இந்த 21 இடங்களிலும் போட்டியிட்டு மூவர் தெரிவு செய்யப்பட்டும் எண்மர் இரண்டாம் இடத்திற்கு வந்தும் உள்ளனர். இது தமிழ்மக்களின் அரசியல் பிரவேசத்திற்கு நல்ல சமிக்ஞையாக காணப்படுகிறது.

ரொறொன்ரோ மாநகரசபை தலைவருக்கான தேர்தலில் 65 பேர் போட்டியிட்டிருந்தனர். முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் வாக்கு எண்ணிக்கை பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| John Tory | 394,775 | 40.28% |
| Doug Ford | 330,610 | 33.73% |
| Olivia Chow | 226,879 | 23.15% |

இம்முறை நடந்த ரொறொன்ரோ மாநகர-சபைத் தலைவருக்கான தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுள்ளோரில் 61% இற்கு மேற்பட்ட மக்கள் வாக்களித்து ஒரு சாதனையை ஏற்படுத்தியுள்ளனர். இதுவரை காலமும் நடைபெற்ற தேர்தலில் 50% ஆனோர் வாக்களித்ததே சாதனையாக இருந்தது.

ரொறொன்ரோ மாநகரசபை தலைவராக பதவியேற்க இருக்கும் 60 வயது John H. Tory ரொறொன்ரோ ஒன்ராறியோவில் மே 28, 1954இல் பிறந்தவர். இவர் Rogers Communications இல் இயக்குனரும் Thomson Investments LTD. இன் அதிபருமான John A. Tory இக்கும் Elizabeth இக்கும் மூத்த மகனாக பிறந்தவர். இவருக்கு இரு சகோதரரும் ஒரு சகோரதரியும் இருக்கிறார்கள். John H. Tory இன் பூட்டனர் (Great-Grand Father) Sun Life of Canada நிறுவனத்தை ஆரம்பித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

John H. Tory உம் தனது தகப்பன் மற்றும் பேரனைப்போல் ரொறொன்ரோ பல்கலைக் கழகத்தின் பட்டதாரியும் சட்டத்தரணியும்


தொடர்ச்சி 08ஆம் பக்கம்



Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently Owned and Operated

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
11583 Yonge Street
Richmond Hill, Ontario L4E 3N7
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099
Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd.
Company#10214

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

MORTGAGE ALLIANCE
The Guardian
SAVE YOUR MONEY
SAVE YOUR HOME
- 2nd Mortgage - Purchase & Refinance
- Renewal & Switch - Home Equity Loan
- Residential & Commercial Mortgage
We're Hiring Experienced & New Agents
Gini Annarasa
Mortgage Broker Lic: #M08005550
Cell: 416.830.3241
Tel:416.556.7002 Fax: 416.556.5116
Toll Free: 1 877.336.3487
Franchise Of The Mortgage Alliance Network
Lic # 12521
*Independently Owned & Operated



VLAMBARAM, GTA SQUARE, 5215 FINCH AVENUE EAST, #201, TORONTO, ON M1S 0C2, CANADA TEL: 416-282-8059, FAX: 416-282-4978, e-mail: vlambaram@sympatico.ca, Web: www.Vlambaram.com








# 25 ஆவது ஆண்டில் விளம்பரம் நடத்தும் உலகளாவிய போட்டி

ரொறொன்ரோவில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் விளம்பரம் பத்திரிகை 25வது வருடத்தை (1991 - 2015) முன்னிட்டு நடத்தும் தமிழ் சமூக-இலக்கிய-வரலாற்றுப் போட்டி. போட்டிக்கான படைப்புக்கள் பின்வரும் முகவரிக்கு ஜனவரி முதலாம் திகதி 2015க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். அஞ்சல் உறையில் அல்லது மின்னஞ்சல் பொருள் பகுதியில் '25வது ஆண்டு விளம்பரப் போட்டி' என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி
Vlambaram Publication Inc.
GTA Square,
5215 Finch Ave. East, #201
Toronto ON, M1S 0C2
மின்னஞ்சல் முகவரி:vlambaram@sympatico.ca

போட்டியில் வெற்றிபெற்ற மூன்று படைப்புக்களை தவிர ஏனையவற்றிற்கு எவ்வித பணமும் வழங்கப்பட மாட்டாது. ஆனால் சிறந்ததென நடுவர்களால் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் விளம்பரம் பத்திரிகையிலும் விளம்பரம் மற்றும் தமிழ்வணக்கம் இணையத்தளங்களிலும் பிரசுரிக்கப்படலாம்.

படைப்புக்கள் முன்னர் பத்திரிகைகள், இணையங்கள் உட்பட்ட மற்றைய ஊடகங்கள் எதிலும் பிரசுரமாகியிருக்கக் கூடாது. இதனை எழுத்தாளர் படைப்பின் முகப்பகுதியில் உறுதிப்படுத்த வேண்டும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் விளம்பரம் பத்திரிகையில் வெளியிடப்படும்.

<u>போட்டி 1</u>
குறுநாவல் போட்டி

9,000-12,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

<u>போட்டி 2</u>
திரைப்படக் கதைப் போட்டி
(Script Writing)
1500-2000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

<u>போட்டி 3</u>
கவிதைப் போட்டி

60-100 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

<u>போட்டி 4</u>
கட்டுரைப் போட்டி

பின்வரும் தலைப்புக்களில் ஒன்றில் கட்டுரையை எழுதி அனுப்பலாம்.

1. புகலிட பொருளாதாரத்தில் தமிழரின் பங்கு
2. தமிழரின் கலையும் பண்பாடும்
3. தகவல் தொழில்நுட்பத்தில் தமிழரின் பங்கு
4. மருத்துவமும் தமிழரும்

1,500 - 2,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

நன்கொடை: போட்டி 1இன் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 1,000, 500, 300 வழங்கப்படும்.
நன்கொடை: தனித்தனியே போட்டி 2, 3, மற்றும் 4இற்கும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 500, 300, 200 என வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 8.5"-11" (A4) தாளில் 11pt எழுத்துரு அளவில் தமிழ் unicode font இல் தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சல் மூலம் அனுப்புபவர்கள் word ல் ஆக்கத்தை பதிவு செய்து இணைக்கப் பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சலின் முகப்பில் ஆக்கத்தை பதிவு செய்ய வேண்டாம். படைப்பாளியின் முழுப்பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம் உறுதிப்படுத்தலும் படைப்பின் முன் பகுதியில் தனித்தாளில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். போட்டி உலகில் வாழும் தமிழர்கள் அனைவருக்குமானது. விளம்பரம் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களோ விளம்பரத்தின் எழுத்தாளர்களோ இப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது.

# அரசியலாக்கப்படும் நீதிமன்ற தீர்ப்பு!

ஐரோப்பிய ஒன்றியத்தில் தமிழீழ விடுதலை புலிகளுக்கான தடை நீக்கப்படுவதாக ஐரோப்பிய பொது நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்த விடயம் இன்று இலங்கையில் அரசியலுக்காக பாரிய அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதாவது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரச்சாரமாகவே அது பயன்படுத்தப்படுகிறது. ஆளும் மஹிந்த ராஜபக்ஸ அரசாங்கம் இத்தடை நீக்கத்தில் எதிர்க்கட்சியின் சதித்திட்டம் இருக்கின்றதென கூறுகின்றது. ரணில் விக்கிரமசிங்க ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் செய்ததன் நோக்கம் இதுதான் என்றும் அரசதரப்பு கூறுகின்றது.

இதற்கு பதிலாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியும் தற்போது கருத்துக்களை வெளியிடத் தொடங்கியுள்ளது. இத்தடை நீக்கத்தால் மஹிந்த அரசிற்கே இலாபம் ஏற்பட்டுள்ளதாகவும். அதற்காகவே ஐரோப்பிய நீதிமன்றத்தில் இடம்பெற்ற இது குறித்த வழக்கில் மஹிந்த அரசாங்கம் சரியாக எதனையும் செய்யவில்லை எனவும் இத்தடை நீக்கத்திற்கு அரசாங்கமே காரணம் எனவும் அது கூறுகின்றது. இவ்வாறு இரு தரப்பினரும் மாறி மாறி கணைகளை ஏவுவதை அவதானித்த ஐரோப்பிய ஒன்றியம் தங்கள் தரப்பு கருத்தையும், விளக்கத்தையும் கொடுத்திருக்கின்றது. விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம் தொடர்பான தீர்ப்பு ஐரோப்பிய ஒன்றிய அரசாங்கங்களின் அரசியல் முடிவு அல்ல எனவும் அது நீதிமன்றத்தின் சட்டத் தீர்ப்பு எனவும் ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது. கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் செய்தி மற்றும் தகவல் அலுவலகமே இந்த விளக்கத்தை கொடுத்திருக்கின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பொது நீதிமன்றம், கடந்த மாதம் 16 ஆம் திகதி, விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்து, அவர்களின் நிதியை முடக்கிய ஒன்றியத்தின் முடிவை இரத்துச் செய்தது. எனினும், விடுதலைப் புலிகளின் நிதி முடக்கம் தொடர்பான இரத்துச் செய்யும் முடிவானது இன்னும் மூன்று மாதங்கள் பேணப்பட வேண்டும் எனவும் நீதிமன்றம் கூறியிருந்தது. இந்த தீர்ப்பானது நீதிமன்றத்தின் சட்ட முடிவு என்பதையும், அது ஐரோப்பிய ஒன்றிய அரசாங்கங்களின் அரசியல் தீர்மானம் அல்ல என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும் அதன் தகவலில் அழுத்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலில் இருந்து சட்டத்தை பிரித்து பார்ப்பது ஒரு ஆரோக்கியமான, ஜனநாயகத்தின் முக்கியமான வேறுபாடு எனவும், மேலும் இது சட்டத்தின் தெளிவான நடைமுறையின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஆனால், இதுவெல்லாம் இலங்கை அரச தரப்பினருக்கும், எதிர்க்கட்சியினருக்கும் தெரியாத விடயமல்ல. ஆனால், சாதாரண பொதுமக்களை குழப்பி அரசியல் இலாபம் அடைவதே இவர்களது இப்பிரச்சாரங்களின் முக்கிய நோக்கமாகும். எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவது உறுதியாகிவிட்டது. இந்நிலையில் தற்போதைய ஜனாதிபதி இத்தேர்தலில் மூன்றாவது தடவையாக போட்டியிடுகின்றார். இவ்வாறு அவர்



போட்டியிடுவது சட்டத்திற்கு புறம்பானது என்ற வாதம் எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்பட்டு வருகின்றது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியை விடவும், ஜே.வி.பி என்றழைக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணி இதில் கடுமையாகவுள்ளது. இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசராகவிருந்த சரத் என். சில்வா போன்றவர்களும் மஹிந்த ராஜபக்ஸ மூன்றாவது தடவையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு சட்டத்தில் இடமில்லை என்று கூறுகின்றனர்.

ஆயினும், போட்டியிடுவதில் பிரச்சினை இல்லை. அதற்கான சட்ட ஏற்பாடுகள் உள்ளன என்று அரசாங்கம் கூறுகின்றது. இந்த சட்டப்பிரச்சினை குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவும் பெரிதாக அலட்டிக் கொள்பவராக காணப்படவில்லை. இப்போது அவர்களின் நோக்கம் எதிரணியை குழப்பியடிப்பதே. இதற்கான ஒரு ஆயுதமாக தற்போது கையில் கிடைத்திருப்பது ஐரோப்பிய ஒன்றியத்தில் விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம் என்கிற விடயம்தான். இத்தடை நீக்கத்திற்கு பின்னால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார் எனவும், புலம்பெயர்ந்து வாழும் டயஸ்போராக்களின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக ரணில் விக்கிரமசிங்க செயற்படுகின்றார் எனவும், டயஸ்போராக்களுக்கு சார்பாகவுள்ள சர்வதேச சக்திகள் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கி புலிகளின் கனவை நனவாக்க முயல்கிறது என்றும் அதி தீவிர பிரச்சாரங்கள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

ஏதிர்வரப்போகின்ற ஜனாதிபதி தேர்தலுக்கான சரியானதொரு முடிவை ஐக்கிய தேசியக் கட்சியும் இன்னமும் தீர்மானிக்கவில்லை. எதிர்கட்சிகள் ஒன்றிணைந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்று கூறப்பட்டாலும், அதற்கான ஒற்றுமை எதிர்க்கட்சிகளிடம் இல்லை. ரணில் விக்கிரமசிங்கவே எதிர்க்கட்சி தரப்பில் போட்டியிடுவார் என்று பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்றது. ரணில் போட்டியிடுகின்ற போது அதற்கான ஆதரவு ஏனைய கட்சிகளிடமிருந்து கிடைக்காது. இந்நிலையில், வரப்போகும் ஜனாதிபதி தேர்தலிலும் மஹிந்த ராஜபக்ஸவே வெற்றி பெறலாம் என்றுதான் எதிர்பார்க்கப்படுகின்றது. சட்டப்படி அவர் மூன்றாவது தடவை போட்டியிடுவதற்கு தடை ஏற்பட்டு, வேறு ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படும் நிலை ஏற்பட்டால் சிலசமயம் மாற்றங்கள் நிகழ வாய்ப்புண்டு. இந்நிலையில்தான், புலிகள் மீதான தடைநீக்கம் என்ற விடயத்தை இரு தரப்பும் தற்போது கைகளில் எடுத்துக்கொண்டு மக்கள் மத்தியில் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன. அரச தரப்பினர் இவ்விடயத்தை வைத்து இயலுமான வரையில் ரணில் மீது பிரசாரக் குண்டுகளை எறிந்து வருகின்ற நிலையில், அதற்கு எதிர்வினையாக ஐக்கிய தேசியக்கட்சியும் செயற்படத் தொடங்கியுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியதன் பிரதான பயன் அரச தரப்பிற்கே கிடைக்கும் என ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் இயலாமை அல்லது அறியாமையினால் இது நடந்துள்ளது எனவும் அவர் சொல்கின்றார். அல்லது திட்டமிட்ட சூழ்ச்சியின் அடிப்படையில் புலிகளின் தடைநீக்கப்பட்டதாக என்ற நியாயமான சந்தேகம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிடுகின்றார். அன்றைய வெளிவிவகார அமைச்சு பெற்றுக்கொடுத்த இந்த தடையை தக்கவைக்க இன்றைய அரசாங்கத்திற்கு முடியாமல் போனதாகவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். தடை நீக்கம் தொடர்பான வழக்கில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் எவரும் ஆஜராகவில்லை எனவும், குறைந்தது தடை நீக்கத்தை எதிர்த்து இலங்கையின் தூதுவர் கூட சத்திய கடிதத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றும் அவர் குறிப்பிடுகின்றார். புலிகளுக்கு எதிரான தடை நீக்கப்பட்டுள்ளதை அடுத்து, ஐரோப்பிய நாடுகளில் அவர்கள் 2006 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை முடக்கப்பட்டிருந்த சகல சொத்துக்களும் விடுவிக்கப்படும். விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்கள் அனைவரும் 2009 ஆம் ஆண்டு கொல்லப்பட்டுவிட்ட நிலையில், தற்போது இந்த சொத்துக்களுக்கு உரிமை கோரக் கூடிய உயிருடன் இருக்கும் ஒரே தலைவர் அந்த அமைப்பின் சர்வதேச பொறுப்பாளராக செயற்பட்டவரும் 2009 ஆம் ஆண்டு தன்னை புலிகளின் தலைவராக அறிவித்து கொண்டவருமான கே.பி. என்ற பத்மநாதன் மாத்திரமே.

அவர் ஊடாக புலிகளுக்கு சொந்தமான தங்கம், கப்பல்கள் உட்பட ஏனைய சொத்துக்கள் பற்றிய தகவல்களை அரசாங்கம் அறிந்து கொண்டுள்ளது என்பது இரகசியமான விடயமல்ல. கே.பி ஊடாக இந்த சொத்துக்களை அரசாங்கத்தில் உள்ள சிலர் பெற்றுக்கொள்ளும் தேவை காரணமாகவே ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் தடை நீக்கம் தொடர்பான வழக்கில் அரசாங்கத்தின் தரப்பில் இருந்து எவரும் ஆஜராகவில்லையோ என்ற நியாயமான சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், ராஜபக்ஸ அரசாங்கம் தனது சூழ்ச்சியான வேலைத்திட்டத்தை மறைப்பதற்காக வழமைப் போல் ஐக்கிய தேசியக் கட்சியின் மீது புலி முத்திரையை குத்தும் முட்டாள்தனமாக முயற்சியில் ஈடுபட்டுள்ளது என இவ்வாறு அவர் மேலும் குறிப்பிடுகின்றார். இவ்வாறு, இலங்கையின் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை முன்னிறுத்தி, தங்கள் அரசியல் இலாபத்திற்காக பொதுமக்களை முட்டாள்களாக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

**- விகிர்தன் -**

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6


# பெண்கள் அலங்காரம் செய்வது ஆண்களைக் கவர்வதற்காகவா?

கேள்வி: ‘அலங்காரச் சாதனங்களுக்காகப் பெண்கள் செலவு செய்யும் தொகையைக் கண்டு மிரண்டு போகிறேன். பெண்கள் தங்கள் அழகுக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்? ஆண்களைக் கவர்வதற்காக அவர்கள் இதைச் செய்வது ஒருவிதத்தில் தங்களையே தாழ்த்திக் கொள்ளும் செயல் அல்லவா?’

சத்குரு: ஒரு பெண் தன்னை அழகாகக் காட்டிக் கொள்ள விரும்புவது அவளுடன் பிறந்த குணம். அவளுடைய அந்தச் சுதந்திரமான ஆசை, கலாச்சாரத்தின் ஓர் அம்சமாகி விட்டது. செல்வம் படைத்த ஆணையே பெண் விரும்பி மதிக்கிறாள். எழில் மிகுந்த பெண்ணையே ஆண் விரும்பி ரசிக்கிறான். இனப்பெருக்கம் நிகழ்வதற்காக இயற்கை சில தந்திரங்களைச் செய்திருக் கிறது. பூக்கள்கூட தங்களை வண்ணமயமாக அழகுபடுத்திக் கொள்வதால்தான் தேனீக்களைக் கவர்ந்திழுக்கின்றன. மிருக இனத்திலும் பறவை இனத்திலும் கூட இது பரவலாகக் காணப்படுகிறது.

மனிதர்கள் இந்த விடயத்தில் வேறுபட்டவர்கள்.

ஓர் ஆண் தன்னை வீரியம் மிக்கவனாகக் காட்டிக் கொள்ள விரும்புகிறான். அந்தச் சக்தி உடல் பலமாகவும் இருக்கலாம் பண பலமாகவும் இருக்கலாம்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**:
www.innerengineering.org

ஆண்களுக்குப் பணம் என்னவெல்லாம் செய்யுமோ, அதைப் பெண்களுக்கு அழகு செய்து தரும். பணம் படைத்த ஆணிற்கு தடை என்பது பெரும்பான்மையாக இருப்பதில்லை. எங்கு வேண்டுமானாலும் அவனால் தடையின்றிப் போக முடியும். அழகுமிக்க பெண்ணிற்கோ, பணம் தேவையில்லை. அந்த அழகே போதுமானது. உலகில் பெரும்பான்மையான கதவுகள் அவளுக்காகத் திறந்து நிற்கும்.

செல்வம் படைத்த ஆணையே பெண் விரும்பி மதிக்கிறாள். எழில் மிகுந்த பெண்ணையே ஆண் விரும்பி ரசிக்கிறான்.

அன்றாட வாழ்வியலில் இதுவே நடைமுறை என்பதால், பெண்கள் தங்களை அழகாகக் காண்பிக்கப் பிரயத்தனப்படுகிறார்கள். இது இயல்பானதுதான்!

‘பணத்தை விட அழகு வேகமாக அழியக் கூடியது அல்லவா? அதை முன்னிலைப் படுத்துவது பரிதாபம் அல்லவா?’

பணம், அழகு இரண்டுமே நிலையானவை அல்ல! அவற்றை வைத்து இறுதியான தீர்ப்புகள் வழங்க முடியாது.



காலம்காலமாக இப்புவியின் சனத்தொகை யில், ஆண்களை விட பெண்களின் விகிதம் கூடுதலாகவே இருந்து வந்திருக்கிறது. பழங்காலத்தில், ஆண்களின் எண்ணிக்கை போர் காரணமாக மேலும் குறைந்தது. குறைவான ஆண்களுக்கு அதிகம் பெண்கள் போட்டி போட வேண்டியிருந்ததால், அழகு முன்னிலை பெற்றது. மாறாக, ஆண்களை விடப் பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருந்திருந்தால், நிலைமை தலைகீழாகி விடும்.

இன்றைக்குச் செயற்கைக் கருத்தடை காரணமாக ஆண்-பெண் விகிதநிலை மாறிவிட்டது. கருத்தடை என்று ஒன்று இல்லாதிருந்தால், ஒவ்வொரு பெண்ணும் சராசரியாகப் பன்னிரண்டிலிருந்து பதினெட்டு குழந்தைகளுக்குத் தாயாக முடியும். அப்படிப் பிறக்கும் குழந்தைகளில் பெண்களின் விகிதம்தான் கூடுதலாக இருக்கும்.

தங்கள் தோற்றத்தைப் பற்றிப் பொருட்படுத்தாது, விருப்பப்படி மேம்பட்ட வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் பெண்கள் சரித்திர காலத்திலும் சரி, இன்றைக்கும் சரி, மிகச்சிலரே!

ஆன்மீகப் பாதை ஆண், பெண், அழகு, அழகின்மை எல்லாவற்றையும் கடந்தது என்பதால், அங்கே வேண்டுமானால் அழகாக இருக்க வேண்டும் என்ற அவசியம் பெண்களுக்கு இல்லாது போகும்.

‘ஆண்களின் அழகைக் கூட்டுவதற்கும் இன்று சில சாதனங்கள் விற்பனைக்கு வந்து விட்டனவே?’

ஆண்கள் தங்கள் தோற்றம் பற்றி கவலை கொள்ள வேண்டாம் என்று யார் சொன்னது? தோற்றத்தில் ஆணுக்குரிய கம்பீர அழகு இல்லாதவனாய் இருந்தாலும், பணம் மிகுந்திருந்தால் அவனிடம் ஓர் அதிகாரம் கூடுகிறது. பெண்கள் அதனால் ஈர்க்கப்படுகிறார்கள்.

ஒற்றை ரூபாய் நோட்டு ஒன்றும், ஐந்நூறு ரூபாய் நோட்டு ஒன்றும் பல நாட்கள் கழித்துச் சந்தித்தன.

‘எப்படி இருக்கிறாய்?’ என்று கேட்டது ஒற்றை ரூபாய்.

‘மிகச் சந்தோஷமாக இருக்கிறேன். அழகான



## சத்குரு வாசுதேவ்

பெண்களின் பர்ஸ், விமானம், கப்பல், கிரிக்கெட் மைதானம், கடற்கரை விடுதி, வெளிநாடு என்று சுகமாக சுற்றிக் கொண்டு இருக்கிறேன். அது சரி, நீ எங்கெங்கு போனாய்?’ என்றது ஐநூறு ரூபாய்.

ஒற்றை ரூபாய் பெருமூச்சுவிட்டுச் சொன்னது... பிச்சைத் தட்டு, இல்லை யென்றால் கோயில் உண்டியல்!

ஆண்களிடம் பெண்கள் எதிர்பார்ப்பது கம்பீரமான, அதிகார பலம்தான். அதை அவனுக்கு முன்பு உடல் பலம் தந்தது. இன்று செல்வம் தருகிறது.

அறிவாற்றலில் குறைபட்டிருந்தாலும், அழகு மிக்கவளாக இருந்தால், ஆண்களுக் கிடையில் ஒரு பெண் சக்தி மிக்கவளாகி விடுகிறாள். இயல்பு வாழ்க்கையில் இதுதான் நிதர்சனம்.

‘அப்படியானால், ஒரு பெண் அழகானவளாகத்தான் இருக்க வேண்டும் என்று சொல்கிறீர்களா? அழகற்ற பெண்கள் எங்கே போவது?’

தவறாகப் புரிந்து கொண்டு விட்டீர்கள். பெண்கள் தங்களை அழகாகக் காட்டிக் கொள்ள விரும்புவது அப்படியொன்றும் கவலைக்குரிய விடயமல்ல என்றுதான் சொன்னேன்.

**தொடர்ச்சி 08ஆம் பக்கம்**

***4 Day Inner Engineering Program***
led by an Isha teacher trained by Sadhguru
Coming to Toronto
***November 13th to 16th, 2014***

***TIMINGS:*** Thursday November 13: 6:30pm – 9:30pm
Friday November 14: 6:30pm – 9:30pm
Saturday November 15: 8:30am – 7:00pm
Sunday November 16: 7:30am – 7:00pm
Vegetarian lunch provided on Saturday; Vegetarian breakfast & lunch on Sunday.
Attendance for all sessions is required.
***VENUE:*** The Princess Banquet, 3330 Pharmacy Ave., Scarborough, ON M1W 3V8
***CONTACT:*** Email: toronto@ishafoundation.org Phone: 416-300-3010
On line registration: www.innerengineering.com/live/toronto



# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

உங்கள் மாதாந்த மோட்கேஜ் கொடுப்பனவுடன் Credit Card, Car Loan, Personal Loan, Line of Credit மற்றும் ஏனைய அதிகளவு வட்டி செலுத்தும் கடன்களை ஒன்று படுத்தி எவ்வாறு உங்களது மாதாந்த கடன் சுமையை குறைப்பது???

| Current Loan | Current Balance | Current Payment | New Loan | New Balance | New Payment |
|---|---|---|---|---|---|
| Mortgage 5 % | 500,000.00 | 2,668.45 | Mortgage @ 2.89% | 548,000.00 | 2,070.26 |
| Car Loan | 17,000.00 | 315.00 | Car Loan | Paid | Paid |
| Credit Card balance | 25,000.00 | 750.00 | Credit Card balance | Paid | Paid |
| Penalty ( Assume) | 6,000.00 | - | Penalty | Paid | Paid |
| **Current Total** | **548,000.00** | **3,733.45** | **New Total** | **548,000.00** | **2,070.26** |

உங்களின் மாதாந்த சேமிப்பு

**$ 1,663.19**

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?




மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

**"மோட்கேஜ் கிளினிக்"**

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

அத்துடன் உங்கள் வீடு விற்பனைக் கொமிசனை நீங்களே தீர்மானியுங்கள். எமது மிகக் குறைந்த விற்பனைக் கொமிசன் $1000* மட்டுமே!

**வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00**

5 Yrs Fixed Rate : 2.79 % *OAC

5 Yrs Variable : Prime - .70% (2.3 %)

உங்கள் வீடு விற்பனைக் கொமிசனை நீங்களே தீர்மானியுங்கள் எமது மிகக் குறைந்த விற்பனைக் கொமிசன் $1000* மட்டுமே!!!

எமது முகவரி

**1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9**

(Markham & HWY 401)



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**



ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001426
**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Corporate Office : Lic # 10530
2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto
Corporate Office :
112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC
Office Phone : 416-391-3232

# பரவி வரும் சீர்கேடுகளை தடுப்பது யார்?

## தாயகமடல்

போரின் பின்னர், இலங்கையில் வெளிவரும் ஊடகங்களில் அதிகளவு இடங்களைப் பிடித்திருப்பவை குற்றச் செயல்களும் கலாசார சீரழிவுகளும் பற்றிய செய்திகள்தான். ஹெரோயின் - கஞ்சா முதலான போதைப்பொருள் கடத்தல், பாலியல் வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம் முதலான செய்திகள் வெளிவராத நாட்களே இல்லை என்று கூறலாம். தென்னிலங்கை பகுதிகளிலேயே இக்குற்றச் செயல்கள் அதிகம் இடம்பெறுகின்றன. ஹெரோயின் போன்ற போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுகின்றவர்கள் வேறும் பல குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பாதாள உலக கும்பலைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். இவர்களில் பலருக்கு அரசியல் செல்வாக்கும் உள்ளது. பல சமயங்களில் இந்த பாதாள உலகத்தவர்கள் அரசியல் வாதிகளுக்கு தேவைப்படுகின்றனர். எனவே, இருதரப்பினருக்குமான இந்த உறவுகள் காரணமாக குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ள வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

பாதுகாப்புத் தரப்பினர் எவ்வளவு சுற்றி வளைப்புக்களை மேற்கொண்டு இவர்களைப் பிடித்தாலும், இவர்கள் தப்பிவிடுகின்றனர். பாதுகாப்பு தரப்பினர் மீது தாக்குதல்களை மேற்கொள்ளும் நிலையிலும் அவர்கள் காணப்படுகின்றனர். போர் முடிவுற்றதன் பின்னர் பாதுகாப்புத் தரப்பினரைத் தவிர, ஆயுதங்களை வைத்திருப்பவர்களாக போதைப்பொருள் கடத்தல்காரர்களான இந்த பாதாள உலகக் குழுவினரே காணப்படுகின்றனர்.

பாலியல் துஷ்பிரயோகம்: இதில் அதிகம் சிறுமிகளே பலிக்கடாக்களாக்கப்படுகின்றமைதான் மிகவும் வேதனைக்குரியது. நான்கு வயதே நிரம்பிய பச்சிளம் பாலகிகளான சிறுமிகள் கூட இவ்வாறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அதிகமான சிறுமிகள் அவர்களது உறவினர்களாலேயே துஷ்பிரயோகப்படுத்தப்படுகின்றனர். இவ்வாறான குற்றச்செயல்களுக்கும் போதைப் பொருள் பாவனைக்கும் நிறைய தொடர்புகள் இருக்கின்றன.

தமிழ் பிரதேசங்களில்: தென்னிலங்கையில் காணப்படுகின்ற அளவு குற்றச் செயல்கள் தமிழ் பிரதேசங்களில் இடம்பெறுவதில்லை எனினும், கடந்த ஐந்தாண்டுகளின் பின்னர் தமிழ் பிரதேசங்களில் குற்றச் செயல்களும் கலாசார சீரழிவுகளும் அதிகரித்தே உள்ளன. இளைஞர்கள் மத்தியில் குடிப்பழக்கம் மிகவும் அதிகரித்து வருகின்றது. இளைஞர்கள் என்று குறிப்பிடுகையில் பாடசாலை மாணவர்களும் இதில் அடங்குகின்றனர் என்பதுதான் வேதனையான விடயம். இலங்கையில் அதிகளவு மதுபானம் விற்பனையாகும் மாவட்டங்களில் யாழ்ப்பாணமும் ஒன்றாகும்.




யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் மத்தியில் பியர் கலாச்சாரம் அதிகரித்து வருவதாக அண்மையில் யாழ்ப்பாணத்தில் சர்வமதக் குழுவினர் தெரிவித்திருந்தனர். அது உண்மையே. இதில் ஆச்சரியமான விடயம் என்னவென்றால், யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது கிளிநொச்சி போன்ற வன்னியின் பிரதான பிரதேசங்களிலும் இந்த மதுப் பழக்கம் இளைஞர்கள் மத்தியில் வேகமாக பரவி வருகின்றது என்பதுதான். மதுக்கடைகளில் இளைஞர்கள் அதிகம் அலைமோதுகின்றனர். ஒன்பதாம், பத்தாம் ஆண்டு படிக்கின்ற மாணவர்களும் இப்பழக்கத்திற்குள்ளாகி வருகின்றனர். இப்பழக்கமானது மற்றுமொரு குற்றச் செயலுக்கும் வழி வகுத்துள்ளது. யாழ்ப்பாணத்தைப் போல போரால் பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதிகளிலுள்ள இளைஞர்கள், மாணவர்களிடம் பணப்புழக்கம் இல்லை. இதனால் மதுவிற்காக களவுகளிலும் அவர்கள் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். மது பாவனைக்கான பணத்தை பெற திருடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. இவ்வாறு திருட்டு வேலைகளில் ஈடுபட்ட மாணவர்கள் அண்மைய நாட்களில் பொலிஸாரிடம் பிடிபட்டும் உள்ளனர். இவர்களை பெற்றோரும் கட்டுப்படுத்த முடியாமலுள்ளது. அவர்களின் ஆசிரியர்களாலும் கட்டுப்படுத்த முடியாமலுள்ளது. மதுபானசாலைகளில், சில வேளைகளில் இந்த இளைஞர்கள், மாணவர்களை அவர்களின் பெற்றோரும், ஆசிரியர்களும் கூட சந்தித்துக் கொள்ளும் நிலையும் ஏற்படுகின்றது. இந்நிலையில் யார் யாரை கட்டுப்படுத்துவது?

வன்னிப் பிரதேசங்களில் முன்னர் இருந்த மதுபான சாலைகளுக்கான வர்த்தக உரிமை புதுப்பிக்கப்படவில்லை. மக்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ள நிலையில் மதுபான சாலைகளுக்கு அனுமதியளித்தால் அம் மக்களின் புனர்வாழ்விற்கு அது பாதகமாக அமையும் என காரணம் கூறப்பட்டது. ஆனால் வன்னியில் இன்று பல பகுதிகளில் புதிய மதுபானசாலைகள் உருவாகிவிட்டன. எல்லாவற்றிற்கும் அரசியல் செல்வாக்கும் இலஞ்ச ஊழலுமே காரணம். எனவே, தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமல்லாது, வன்னியிலும் மது கலாச்சாரம் வேகமாக இளைஞர்கள்- மாணவர்கள் மத்தியில் பரவி வருகின்றது. இந்த மதுப்பழக்கமானது நாளடைவில், தென்னிலங்கையில் காணப்படுவது போன்ற குற்றச் செயல்களை தமிழ் பிரதேசங்களிலும் ஏற்படுத்திவிடுமோ என்கிறன்ற அச்சம் தவிர்க்க முடியாமல் ஏற்படுகின்றது.

சீரழிவுகள்: கலாசார சீரழிவுகளுக்கு பெரும்பாலும் துணைபோவது கையடக்கத் தொலைபேசிகள். செல்லுமிடங்களில் இருந்தெல்லாம் அவசரத் தேவைகளுக்கு தொடர்பு கொள்ளக்கூடிய சாதனமான இந்த கையடக்கத் தொலைபேசி தமிழ் பிரதேசங்களில் முழுவதுமாக பொழுது போக்கிற்காகவே பயன்படுத்தப்படுகின்றது. இந்த பொழுதுபோக்கில் இளம் பெண்களும் கணிசமாக இடம்பிடித்துள்ளனர். கலாசார சீரழிவுகளுக்கான பிரதான காரணிகளில் ஒன்றாக தற்போது தமிழ் இளைஞர் மத்தியில் காணப்படுவது இந்த கையடக்கத் தொலைபேசிகளே என்றால் அது மிகையாகாது. இந்த விடயத்திலும் பெற்றோரின் வழிகாட்டல், கட்டுப்பாடு இளைஞர்களுக்கு இல்லை. முன்னர் வெளிநாடுகளிலிருந்து வருகின்ற உறவினர் பிரயோசனமான பொருட்களை கொண்டு வந்து நாட்டிலுள்ள குடும்பத்தினருக்கு வழங்குவர். இப்போதெல்லாம் நவீன கைத்தொலை பேசிகளையே பெரும்பாலும் கொண்டு வந்து கொடுக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வறுமை: போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பெண்கள் சீரழிவு நடவடிக்கைகளில் அதிகம் ஈடுபடுகின்றனர் என்கின்ற கருத்து பரவலாக வெளியிடப்படுகின்றபோதும் அது மிகைப்படுத்தப்பட்டதொன்று என்றே கூறவேண்டும். ஆனால், வறுமை காரணமாக சிலர் இவ்வாறான சீரழிவுகளுக்குள் இட்டுச் செல்லப்படுகின்றனர்.

தமிழ் பிரதேசங்களிலில் முன்பிருந்த கட்டுக்கோப்பு குலைந்துள்ளமைக்கு அந்நியர் வருகை அதிகரித்துள்ள சூழ்நிலையும் முக்கிய காரணம் எனலாம். இவ்வாறான நிலையில், காலப்போக்கில் தமிழ் பிரதேசங்களும் தென்னிலங்கையைப் போல உருமாறிவிடுமோ என சமூக அக்கறையாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இதனைத் தடுப்பதற்கு என்ன செய்யலாம் என்று சந்தித்து அதற்கான பொறிமுறைகளை இப்பொழுதே அமைக்க வேண்டும். அதனை யார் செய்வதென்பதுதான் கேள்வி. போரின் பின்னர் வடக்கிலும் கிழக்கிலும் அரசியல் பற்றி மட்டுமே அதிகம் பேசப்பட்டு வருகின்றது. அது தொடர்பில் மட்டுமே அக்கறை காட்டப்பட்டு வருகின்றது. சமூகம் குறித்தும், அதன் ஒழுங்கமைப்பு பற்றியும் எவரும் பேசுவதில்லை. மதங்கள் சார்ந்த மற்றும், பொது நிறுவனங்கள் இதற்கு முன்வர வேண்டும். அரசியல்வாதிகள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் இதற்கு வழிசெய்ய வேண்டும். இவற்றினூடாக பரவலான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். மதுபான சாலைகளில் இளைஞர்கள் மாணவர்கள் செல்வதையும், மது கொள்வனவு செய்வதையும் தடுக்கும் விதமான கட்டுப்பாடுகள் இறுக்கமாக பேணப்படல் வேண்டும். பெற்றோர் மற்றும், ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது குறித்து வழிகாட்டல்கள் இப்போது தேவைப்படுகின்றது. பாடசாலைகள் தோறும் கருத்தரங்குகளை நடத்த வேண்டும். கலாசார சீரழிவுகளை தடுக்கும் விதமான விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

இவ்வாறான பல்வேறு திட்டங்கள் குறித்தும் சிந்தித்து, ஆராய்ந்து அவற்றை நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும். இது குறித்து தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகள் முதலில் சிந்தித்தால் இதனை விரைவு படுத்துவது சாத்தியமானதாகும்.

**- ஆதித்தன் -**

விளம்பரம்
VLAMBARAM

| | |
|---|---|
| பதிப்பாளர்: | ராஜா மகேந்திரன் |
| பத்திரிகை ஆசிரியர்: | சத்தியா மகேந்திரன் |
| ஊடகப்பொறுப்பாளர்: | விஜயபாலன் |
| தட்டச்சு: | கலா |
| அலுவலக முகாமையாளர்: | நிலானி |
| பதிப்பு: | Canyon Press Inc. |

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.
**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**
**இலவச ஆலோசனை வழங்கப்படும்**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: **647.456.9796**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)

# நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 426

பலராலும் எதிர்பார்த்திருந்த மாநகரசபை, நகரசபை, உள்ளூராட்சி தேர்தல் ஒக்ரோபர் 27, 2014 நடந்து முடிந்து விட்டது. முடிவுகளும் வந்துவிட்டன. 30 இற்கு மேற்பட்ட தமிழ்பேசும் மக்களும் இதில் போட்டியிட்டு இருந்தார்கள். இவர்களில் மூவர் (3) வெற்றி பெற்றிருந்தார்கள். அவர்களிற்கு எமது வாழ்த்துக்கள். மற்றையவர்கள் தமது தோல்விக்குரிய காரணத்தைக் கண்டுபிடித்து எதிர்காலத்தில் வெற்றிபெற வாழ்த்துகிறோம்.

ரொறொன்ரோ நகரத்தில் ஜோன் ரோறி (John Tory) வெற்றி பெற்று ரொறொன்ரோ வின் நகரபிதாவாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளார். இது ஒரு சிறந்த தெரிவாகத்தான் நான் நம்புகிறேன். மக்களாலும், அரசியல் தலைவர்களாலும் ஏனைய கட்சிகளாலும் மதிக்கப்படும் ஒரு தலைவராகக் கொள்ளலாம். இதற்குமுன் பலமுறை இவர் தோல்விகளைக் கண்டிருந்தாலும் சரியான தருணத்தில் நகரபிதாவாக தெரிவு செய்யப்பட்டது ரொறொன்ரோவின் பெயரை மீண்டும் நிலை நாட்ட கிடைத்த வாய்ப்பாக கொள்ளலாம். பொருளாதார ரீதியில் ரொறொன்ரோவின் வளர்ச்சிக்கும், புதிய தொழில்களை உருவாக்க கூடிய சூழலை உருவாக்கக் கூடியவர் என்பது இவரின் பழைய வாழ்க்கைமுறையில் இருந்து அறியலாம். தனது அரசியல் விஞ்ஞாபனத்தில் 53 கி.மீ தூரத்திற்கான புதிய போக்குவரத்து சேவையை (Smart Track) அடுத்த ஏழு வருடங்களில் நிறைவேற்றுவதாக தெரிவித்திருந்தார். வெற்றியின் பின்னரும் இதனை உறுதிப்படுத்தியிருந்தார்.

44 கவுண்சிலர்களில் பெரும்பான்மையோரின் உதவியுடன் இந்த சேவை நிறைவேற்றப் பட்டால், ரொறொன்ரோவில் மேலதிக தொழில்வாய்ப்புக்குள் நிச்சயம் உருவாகும் என நம்பலாம். புதிய நிலத்திற்கு கீழான ரயில்பாதை அமைக்கப்பட்டு புதிய subway station களை உருவாக்கினால் இதனைச் சுற்றி புதிய அடுக்குமாடி கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படும், புதிய தொழில்கள்



உருவாக்கப்படலாம். எதிர்வரும் நாலு வருடங்கள் பொதுவாக வியாபாரத்திற்கு உகந்த சூழல் உருவாகும் என எதிர்பார்க்கலாம். மத்திய அரசுடனும், மாகாண அரசுடனும் சினேகபூர்வமான நகரபிதாவாக இருப்பதால் ரொறொன்ரோவிற்கு இது சாதகமாகலாம்.

ஆதன வியாபாரத்திலும், ஆதன நிர்மாணத்திலும் இவ்வாறான ஏற்பாடு, சாதகமான சூழலையே ஏற்படுத்தும். ஜோன் ரோறி அவர்களின் தலைமையில் ரொறொன்ரோவின் ஆதன வளர்ச்சி விலையிலும் வியாபாரத்திலும் சிறப்பாக இருக்கும் என எதிர்பார்ப்போம். ஏற்கெனவே பல ஆண்டுகளாக வெற்றிநடைபோடும் ஆதனவியாபாரம் அடுத்த வருடம் இறங்கு பாதையில் தொடங்கலாம் என பலர் கூறிய சந்தர்ப்பத்தில் இவரின் தலைமை ஓரளவு ஊக்கத்தை ஆதனம் வாங்குபவர்களுக்கு கொடுக்கலாம்.

சில தகவல்கள் -

-> ஒக்ரோபர் மாதக் கடைசி கிழமையில் கூடிய மத்திய வங்கி வட்டிவீதத்தை மாற்றாமல் 1% ஆகவே விட்டுள்ளனர். இதனால் முதன்மை வட்டிவீதம் 3% ஆகவே உள்ளது. (4 வருடத்திற்கு மேலாக மத்தியவங்கியின் வட்டிவீதம் மாறாமல் உள்ளது.) அடுத்த வருட மத்தியகாலம் வரை இந்த வட்டிவீதத்தில் மாற்றம் ஏற்படாது என மறைமுகமாக ஆளுனர் தமது அறிக்கையில் கூறியுள்ளார். 2015 இன் இறுதியில் ½வீதம் வரை அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

-> பொதுவாக குளிர்காலம் வீடு வாங்குவதற்கு சிறந்த காலமாக இருக்கலாம். சில சந்தர்ப்பங்களில் வாடகைக்கு இருப்பது, வாங்குவதை விட சிறந்ததாக இருக்கலாம்.

-> வீடு வாங்கும்போது ஆரம்ப முதலீட்டை விட மேலதிக மாக ஏறக்குறைய 2% மேலதிகமான செலவு தேவைப்பட லாம் என்பதனை மனதில் கொள்ளவும். (Closing cost)

-> மோட்கேஜ் காப்புறுதி வாங்குவதை விட அனேகமான சந்தர்ப்பங்களில் Term Life Insurance சிறந்ததாகலாம்.

-> 20% இற்கு குறைவாக ஆரம்ப முதலீடு செய்தால் Mortgage Default Insuracne செலுத்த வேண்டி ஏற்படும்.

-> ஒரு மில்லியனிற்கு மேற்பட்ட ஆதன விலையில் ஆதனங்கள் வாங்கும் போது Mortgage Default Insuracne பெற முடியாது. எனவே குறைந்தது 20% ஆரம்பமுதலீடு தேவைப்படும்.

-> தகுந்த அடமானக்கடன் வட்டிவீதத்தை தெரிவுசெய்வ தன் மூலம் மேலதிகமாக செலுத்தப்படும் வட்டியின் பெரும் பகுதியை குறைக்கலாம் என்பதனை கவனத்தில் கொள்க.

இக்காலத்தில் வட்டிவீதம் குறைவாக இருப்பதால் எமது மாதாந்த கொடுப்பனவில் கூடிய பகுதி முதலை நோக்கி செல்கின்றது. இது குறைந்த வட்டி வீதத்தினால் ஏற்படும் நன்மைகளில் ஒன்று.


# HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



Raja Mahendran, P.Eng.
Broker / Owner

5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

* INDEPENDENTLY OWNED AND OPERATED

## HOUSE FOR SALE
**KENNEDY & SHEPPARD**
'50 X 250' land. Builders choice. Detached house. Asking price $650k

## HOUSE FOR SALE
Semi detached. 3 Bedrooms 3 washrooms. Attached garage. Finished bsmt. hard-wood floor milton special. Asking price $439,900

## CONDO. FOR RENT
**YONG & FINCH**
1 Bedroom condo for rent. 1 Parking. Available in mid November 2014. Asking $1,400.

## CONDO FOR RENT
**Tridel Condo.**
Brand new never lived. 2 Bedrooms and 2 wash-rooms. Avail. immediately. Rent $1,450

## BRAND NEW DETACHED HOUSE FOR SALE
To be Built. 3800sq.ft. + 4800sq.ft Asking price $1.3 Million.

## CONDO FOR RENT
Brand new condo. with rental guarantee. Only certain units available in Downtown Toronto. Close to CN Tower, Rogers center. From $270k

## New Condo. projects By Tridel Special price
i. Islington & Bloor
ii. Kennedy & HWY 401
iii. AQUAVISTA Project lakeview

# ஒன்ராறியோ உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் - தமிழ் வேட்பாளர்கள்

| No. | Candidate Name | Municipal | Position | Ward | Votes | % | Place/Total |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Balachandran Niranjan | Toronto | Councillor | Ward 37 | 2440 | 12.07 | 2/3 |
| 2 | David Thomas | Toronto | Councillor | Ward 38 | 1552 | 7.92 | 2/11 |
| 3 | Sivavathani Prabaharan | Toronto | Councillor | Ward 41 | 2069 | 10.83 | 3/5 |
| 4 | Neethan Sabaratnam | Toronto | Councillor | Ward 42 | 911 | 3.83 | 5/11 |
| 5 | Neethan Shan | Toronto | Councillor | Ward 42 | 7393 | 31.07 | 2/11 |
| 6 | Venthan Ramana | Toronto | Councillor | Ward 42 | 96 | 0.43 | 11/11 |
| 7 | Ganesh Kulasekarampillai | Toronto | Councillor | Ward 42 | 107 | 0.45 | 10/11 |
| 8 | Ragu Thanabalasingam | Toronto | Councillor | Ward 44 | 353 | 1.42 | 8/15 |
| 9 | Neethra Vipulananthan | Toronto | Councillor | Ward 44 | 202 | 0.81 | 11/15 |
| 10 | Raj Subramaniam | Markam | Councillor | Ward 5 | 1313 | 20.55 | 2/5 |
| 11 | Siva Sivagnanam | Markam | Councillor | Ward 5 | 126 | 1.97 | 5/5 |
| ***12*** | ***Logan Kanapathy*** | ***Markam*** | ***Councillor*** | ***Ward 7*** | ***5673*** | ***48.25*** | ***1/5*** |
| 13 | Sothy Sella | Markam | Councillor | Ward 7 | 1078 | 9.17 | 4/5 |
| 14 | Vasu Murugesu | Markam | Councillor | Ward 7 | 160 | 1.36 | 5/5 |
| 15 | Joseph (Mohan) Remisiar | Markam | Councillor | Ward 8 | 2238 | 24.17 | 3/5 |
| 16 | Susie Nadarajah | Whitchurch S | Councillor | Ward 6 | 325 | 8.42 | 5/7 |
| 17 | Senthuran Paramasamy | Whitchurch S | Councillor | Ward 6 | 320 | 8.29 | 6/7 |
| 18 | Cassiam Joseph | Brampton | Councillor | Ward 2 & 6 | 805 | 4.1 | 9/15 |
| 19 | Kiru Kulendiren | Mississauga | Councillor | Ward 10 | 1592 | 10.7 | 2/5 |
| 20 | Waran Vaithilingam | Ajax | Mayor | Town | 2171 | 10 | 2/3 |
| 21 | Eli Sivalingam | Toronto Eng. | SB Trustee | Ward 1 | 666 | 2.77 | 8/8 |
| 22 | Pushpa Mathanalingam | Toronto Eng. | SB Trustee | Ward 13 | 5522 | 16.13 | 3/3 |
| ***23*** | ***Parthi Kandavel*** | ***Toronto Eng.*** | ***SB Trustee*** | ***Ward 18*** | ***6983*** | ***23.45*** | ***1/10*** |
| 24 | Shopana Pannerselvan | Toronto Eng. | SB Trustee | Ward 20 | 1763 | 6.52 | 4/4 |
| 25 | Jeevitha Deborah Lieberman | Toronto Eng. | SB Trustee | Ward 21 | 4133 | 12.77 | 3/7 |
| 26 | Praveena Sathiyanatham | Toronto Eng. | SB Trustee | Ward 21 | 3418 | 10.56 | 4/7 |
| 27 | Krishanthy Sarojkumar | Toronto Eng. | SB Trustee | Ward 21 | 5279 | 16.31 | 2/7 |
| 28 | Mario Gunanayagam | Toronto F Cath. | SB Trustee | Ward 4 | 112 | 5.94 | 3/3 |
| 29 | Rukshan Para | York Reg. Eng. | SB Trustee | Markam Ward 4 & 5 | 3115 | 25.4 | 2/3 |
| ***30*** | ***Juanitha Nathan*** | ***York Reg. Eng.*** | ***SB Trustee*** | ***Markam Ward 7 & 8*** | ***9361*** | ***59.18*** | ***1/3*** |
| 31 | Sathiyanithi Sadagopan | Peel Reg. Eng. | SB Trustee | Mississauga Ward 6 & 11 | 591 | 3.2 | 10/10 |

# ஒன்ராறியோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆவார். இவர் ஒரு தொழில் அதிபர், ஊடகவியலாளர், மற்றும் ஒன்ராறியோ பழமைவாதக்கட்சியின் முன்னாள் தலைவர் போன்ற பல தொழில்களில் இருந்தவர். 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற ரொறொன்ரோ மாநகரசபை தலைவர் பதவிக்கும் போட்டியிட்டு David Miller இடம் தோல்வியடைந்தார்.




John H. Tory தற்போது குவிபெக்கை சேர்ந்த Metro & Food Basic என்னும் நிறுவனத்தின் இயக்குனராக உள்ளார்.

# பெண்கள்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

இதுதான் அழகு என்று யாரும் அறுதியிட்டுச் சொல்லிவிட முடியாது. ஒருவர் அழகா, இல்லையா என்பது பார்ப்பவர் மனதில்தான் இருக்கிறது.

ஐம்புலன்களைத் தாண்டி யோசிக்க முடியாதவர்களுக்குத் தான் அழகு, அசிங்கம் என்பதெல்லாம் முக்கியமானதாக இருக்கிறது.

அகத்திலா, முகத்திலா.. எங்கே அழகாக இருக்க வேண்டும் என்பது அவரவர் தேர்வு. வாழ்க்கையில் எதற்கு முக்கியத்துவம் தரப் போகிறீர்கள் என்பது உங்கள் கையில்தான் இருக்கிறது.

உள்ளே எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிய அக்கறை இருப்பவர்கள், தங்கள் வெளித்தோற்றம் பற்றி அலட்டிக் கொள்வது இல்லை. உங்கள் கவனம் வெளியிலிருந்து உள்நோக்கித் திரும்ப வேண்டும் என்பதே என் அவா! ஐம்புலன்களைத் தாண்டியதொரு அனுபவத்தின் அழகு அபரிமிதமானது. அதை நீங்கள் உணர வேண்டும்.

அந்த அமுதம் வெளியில் இல்லை, உங்களிடம்தான் இருக்கிறது. அதை சுவைப்பதும் சுவைக்காமல் புறக்கணிப்பதும் அவரவர் விருப்பம்..

# தமிழக மீனவர்களுக்கு தூக்கு தண்டனை!

இலங்கையில் தமிழக மீனவர்களுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டதை கண்டித்து சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பினர் முற்றுகையிட்டனர். போதை பொருள் கடத்தியதாக கூறி தமிழக மீனவர்கள் 5 பேருக்கு இலங்கை நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்தது. இதற்கு தமிழக அரசியல் கட்சிகள், தமிழ் அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஐந்து மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில், சென்னையில் உள்ள இலங்கை சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் மீது தமிழ் அமைப்புகள் தாக்குதல் நடத்த வாய்ப்பு இருப்பதாக உளவுத்துறை பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதனால் நுங்கம்பாக்கம் ஸ்டெர்லிங் சாலையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம், எழும்பூரில் உள்ள புத்த மகா போதி சொசைட்டி, இலங்கை வங்கி, நுங்கம்பாக்கத்தில் உள்ள இலங்கை ஏயார் லைன்ஸ் ஆகியவற்றிற்கு 24 மணிநேர பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பினர் 150க்கும் மேற்பட்டோர் இலங்கை தூதரகத்தை முற்றுகையிட்டனர். அவர்கள் அனைவரையும் பொலிசார் கைது செய்ததாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.


Brock Rd/ Dersan St.
$514,900
3 Bedrooms, 3 W Rooms
Gorgeous Home With 9 Foot Ceilings
On The Main Flr Open Concept Living Space
10th Line/Main St
$559,800
4 Bedrooms, 4 W Rooms
Great Rm W/Gas Fireplace.
Dir Access To 2 Car Grge.
Thickson & Carnwith
$599,900
5 Bedrooms, 4 W Rooms
Rich Hardwood Stairs,Fireplace,
Cathedral Ceiling In Living Rm,
10th Line & Hoover Park
$609,900
4 Bedrooms, 3 W Rooms
Glass/Stone Mosaic Backsplash,
Stainless Steel Appliances
Williamson & Westney
$649,900
4 Bedrooms, 3 W Rooms
9Ft Ceilings,Upgraded Kitchen
Cabinets, Boasts Dark Hdwood Floor
Hwy 7/Concession 4
$3,250,000
4+4 Bedrooms, 9 W Rooms
An Unbelievably Serene Setting
Nestled On A Quiet Court Location
Bellamy/Lawrence
$439,000
3+1 Bedrooms, 2 W Rooms
Fully Renovated Home Featuring
Modern Open Concept Kitchen
Brimley/Denison
$539,000
3+1 Bedrooms, 4 W Rooms
Extra Large Main Floor Family Room.
Updated Kitchen, Furnace, A/C
Mccowan & Highglen
$589,000
3 Bedrooms, 3 W Rooms
Open Concept Kitchen, Granite
Countertop & Under Mount Sink
Finch Ave/Neilson Rd.
$591,000
3 Bedrooms, 3 W Rooms
Paradise Home In Convenient
Location, Backs On Green Ravine
Middlefield/ 14th Ave.
$599,000
3 Bedrooms, 3 W Rooms
Finished Basement, Big Backyard,
New Air Conditioner
Markham Rd/Denison
$699,900
4+2 Bedrooms, 4 W Rooms
Custom Made Kitchen On The
Main Flr.Hardwood Flooring On Main
14th Ave/ Middlefield
$725,000
4 Bedrooms, 4 W Rooms
Walk-Out Basement, Lots
Of Potential, Extra Window Installed
9th Line/Buroak
$799,000
4 Bedrooms, 3 W Rooms
W/O To Interlocked Back Patio
Huge Landscaped Backyard
Mccowan/16th Ave
$829,000
4+1 Bedrooms, 3 W Rooms
Gourmet Kitchen W/Upgraded Cabinet,
Bright & Spacious Bedrooms
Sell your home
FASTER
and more MONEY
#1 RE/MAX
Elaguppillai Srinathan (Mike) B.Sc
Direct 416 - 276-1225
Your home sold in 30 days or we buy it
Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Office: 905-470-9800
Fax: 905-470-7770
Email: esrinathan@yahoo.com
KZG 647-200-5833
I can also assist your Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# சர்வதேச ரெஸ்ட் தரவரிசை!

## விளையாட்டுத் தகவல்கள் 355

சர்வதேச ரெஸ்ட் போட்டியின் துடுப்பாட்ட தரவரிசையில் இலங்கை அணியின் நட்சத்திர வீரர் சங்கக்காரா தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இரண்டு இன்னிங்ஸ்களிலும் சதம் கண்ட பாகிஸ்தான் வீரர் யூனிஸ் கான் 4 இடங்கள் முன்னேறி 7வது இடம் பிடித்துள்ளார். தோல்வி கண்ட அவுஸ்திரேலிய அணியின் ஒரே சிறந்த துடுப்பாட்டக்காரர் டேவிட் வார்னர் 4வது இடத்திற்கு முதல் முறையாக முன்னேறியுள்ளார்.



டிவிலியர்ஸ், சந்தர்பால், வார்னர், மேத்யூஸ், ஹசிம் ஆம்லா, யூனிஸ் கான், ராஸ் டெய்லர், ஜோ ரூட், மைக்கேல் கிளார்க் ஆகிய துடுப்பாட்டக்காரர்கள் முதல் 10 இடத்தை பிடித்துள்ளனர். பந்து வீச்சுத் தரவரிசையில், டேல் ஸ்டெய்ன், ரயான் ஹேரிஸ், ரங்கனா ஹெராத், மிட்செல் ஜான்சன், ஜேம்ஸ் ஆண்டர்சன், வெர்னன் பிலாண்டர், டிம் சவுதி, பிராட், கிமார் ரோச், சயீத் அஜ்மல் ஆகியோர் முதல் 10 இடங்களில் உள்ளனர். அதேபோல் சகலதுறை வீரர்கள் தரவரிசையில் மிட்செல் ஜான்சன் 4வது இடத்திற்கு முன்னேறியுள்ளார். இவர் ஸ்டுவேர்ட் பிராடை பின்னுக்குத் தள்ளினார். இந்தியாவின் அஸ்வின் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார்.

### 19 ஆண்டுகளுக்கு பிறகு அவுஸ்திரேலியாவை விழிபிதுங்க வைத்த பாகிஸ்தான்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் ரெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 221 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த இரு அணிகளுக்கு இடையிலான முதலாவது ரெஸ்ட் போட்டி துபாயில் கடந்த 22 ஆம் திகதி தொடங்கியது. முதல் இன்னிங்ஸில் முறையே பாகிஸ்தான் 454 ஓட்டங்களும், அவுஸ்திரேலியா 303 ஓட்டங்களும் எடுத்தன. இதனையடுத்து 151 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2வது இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான் 2 விக்கெட்டுக்கு 286 ஓட்டங்களுடன் டிக்ளேர் செய்து, அவுஸ்திரேலிய அணிக்கு 438 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது. இந்த இமாலய இலக்கை நோக்கி தனது 2வது இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலியா 4வது நாள் முடிவில் 4 விக்கெட்டுக்கு 59 ஓட்டங்களுடன் திணறிக் கொண்டிருந்தது. இந்த நிலையில் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. இதில் நிதானமாக ஆடிய தொடக்க வீரர் கிறிஸ் ரோஜர்ஸ் 43 ஓட்டங்களில் வெளியேறினார். அதைத் தொடர்ந்து சுழற்பந்து வீச்சாளர்களின் பிடியில் சிக்கி அவுஸ்திரேலிய துடுப்பாட்டக்காரர்கள் திணறினர்.

இதன்பிறகு அவுஸ்திரேலிய அணி 2வது இன்னிங்ஸில் 91.1 ஓவர்களில் 216 ஓட்டங்களுக்கு தோல்வி கண்டது. இதன்மூலம் 221 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அபார வெற்றி பெற்றது. பாகிஸ்தான் தரப்பில் சுழற்பந்து வீச்சாளர்கள் 35 வயதான ஜூல்பிகர் பாபர் 5 விக்கெட்டுகளும், அறிமுக வீரர் யாசிர் ஷா 4 விக்கெட்டுகளும் சாய்த்தனர். இரண்டு இன்னிங்ஸிலும் சதம் விளாசிய பாகிஸ்தானின் மூத்த வீரர் யூனிஸ்கான் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். ஓட்டங்கள் வித்தியாசத்தை எடுத்துக் கொண்டால், அவுஸ்ரேலியாவுக்கு எதிராக பாகிஸ்தானின் மிகப்பெரிய வெற்றி இதுதான். இதற்கு முன்பு 1995ம் ஆண்டு சிட்னியில் 74 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெற்ற வெற்றியே இந்த வகையில் சிறப்பானதாக இருந்தது.

### அதிர வைக்கும் அப்ரிடி: வான வேடிக்கை காட்டிய சனத் ஜெசூர்யா

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிக சிக்சர் அடித்தவர்கள் வரிசையில் பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரர் அப்ரிடி முதலிடத்தில் இருக்கிறார். இவர் 384 போட்டிகளில் விளையாடி 333 சிக்சர்களை விளாசி தள்ளியுள்ளார். இவருக்கு அடுத்த இடத்தில் இலங்கை அணியின் முன்னாள் வீரர் சனத் ஜெயசூரியா 445 போட்டிகளில் விளையாடி 270 சிக்சர்களை அடித்துள்ளார். கெய்ல் (209 சிக்சர்), சச்சின்



(195 சிக்சர்), கங்குலி (190 சிக்சர்), டோனி (177 சிக்சர்), பொண்டிங் (162 சிக்சர்), மெக்குல்லம் (153 சிக்சர்), கில்கிறிஸ்ட் (149 சிக்சர்) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் இருக்கின்றனர்.

### இந்தியா - இலங்கை ஒருநாள் தொடருக்கு அட்டவணை அறிப்பு

இந்தியா - இலங்கை கிரிக்கெட் அணிகள் மோதும் ஒருநாள் போட்டி தொடருக்கான அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணி இந்திய பயணத்தை பாதியில் ரத்து செய்ததால் அதற்கு பதிலாக இலங்கை அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்து 5 போட்டி கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. அனைத்து ஆட்டங்களும் பகல் - இரவு மோதலாகும். தொடருக்கு முன்னதாக ஒக்ரோபர் 30ம் திகதி மும்பை பிராபோர்ன் மைதானத்தில் இந்திய ஏ அணியுடன் இலங்கை பயிற்சி ஆட்டத்தில் விளையாடுகிறது. இந்த ஒருநாள் தொடருக்கான போட்டி அட்டவணையை இலங்கை கிரிக்கெட் வாரியம் வெளியிட்டது.

போட்டிகள் விவரம்:-

நவம்பர் 2 - முதலாவது ஒரு நாள் போட்டி, கட்டாக்
நவம்பர் 6 - 2வது ஒரு நாள் போட்டி, ஆமதாபாத்
நவம்பர் 9 - 3வது ஒரு நாள் போட்டி, ஐதராபாத்
நவம்பர் 13 - 4வது ஒரு நாள் போட்டி, கொல்கத்தா
நவம்பர் 16 - 5வது ஒரு நாள் போட்டி, ராஞ்சி

### பிரேசில் அணியின் புதிய அணித்தலைவரான நெய்மர்



பிரேசில் கால்பந்து அணியில் வரலாற்றிலேயே குறைந்த வயதுள்ள அணித்தலைவராக நட்சத்திர வீரர் நெய்மர் பொறுப்பேற்றுள்ளார். சமீபத்தில் நடந்து முடிந்த உலகக்கிண்ண கால்பந்து தொடரில் பிரேசிலுக்கு சில்வா அணித்தலைவராகவும், பயிற்சியாளராக லூயிஸ் பெலிப் ஸ்கோலரியும் பதவி வகித்தனர். பின்னர் அரையிறுதியில் அடைந்த படுதோல்வியை தொடர்ந்து பயிற்சியாளர் மாற்றப்பட்டு துங்கா அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் அணியின் புதிய அணித்தலைவராக 22 வயதேயான நெய்மர் நியமிக்கப்பட்டுள்ளார். பயிற்சியாளர் துங்காவின் சிபாரிசை ஏற்று அந்த நாட்டு கால்பந்து சங்கம் இம்முடிவை எடுத்துள்ளது. அருமையான வீரர்களை அணித்தலைவராக கொண்டிருந்த போது பிரேசில் உலகக்கிண்ணத்தை வென்று காண்பித்துள்ளது. எனவே 2018ம் ஆண்டு உலகக்கிண்ணத்தை நெய்மர் தலைமையில் பிரேசில் வெல்லும் என்று கூறியுள்ளார்.

### நிறைவேறிய கனவு: நெகிழ்ச்சியில் நெய்மர்

ஒரு போட்டியில் 4 கோல்கள் அடிக்க வேண்டும் என்ற தனது கனவு நிறைவேறிவிட்டதாக பிரேசில் அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் தெரிவித்துள்ளார். சிங்கப்பூரில் நடைபெற்ற நட்பு ரீதியிலான கால்பந்து போட்டியில் பிரேசில் அணி 4-0 என்ற கோல் கணக்கில் ஜப்பானை தோற்கடித்தது. இதில் பிரேசிலின் 4 கோல்களையுமே நெய்மர் தான் அடித்தார். இதன்மூலம் பிரேசிலுக்காக ஒரு போட்டியில் 4 கோல்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் நெய்மரும் இடம் பிடித்துள்ளார். இவர் 40 கோல்களுடன் (58 போட்டிகளில்) அதிக கோல் அடித்த பிரேசில் வீரர்கள் வரிசையில் 5வது இடத்தில் உள்ளார். பீலே (77 கோல்), ரொனால்டோ (62 கோல்), ரொமாரியோ (55 கோல்), ஜிகோ (48 கோல்) ஆகியோர் அதிக கோல் அடித்த பிரேசில் வீரர்கள் வரிசையில் முதல் 4 இடங்களில் உள்ளனர்.



எஸ். கணேஷ்

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# 2014 தேர்தல் மழை ஓய்ந்தது!

ஒன்ராரியோ உள்ளூராட்சி மன்ற சபைகளுக்கான தேர்தல்கள் வெற்றிகரமாக ஐப்பசி 27 முடிவுக்கு வந்தது. உலக ஊடகங்கள் பி.பி.சி போன்ற பிரசித்தி பெற்ற ஊடகங்கள் உட்பட்ட அனைத்தும் பிரசுரித்த, அறிவித்த செய்தி 'ரொரண்ரோ ரொப் போர்ட்டின் ஆதிக்கத்துக்கு முடிவு வந்துள்ளது' என்பதே. தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் டக் போர்ட் அதிகளவு வாக்குகளை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இது தமிழ் மக்கள் டக் போர்ட்க்கு வாக்களித்துள்ளார்கள் என்பதல்ல. இத்தருணத்தில் ஒரு விடயத்தை கூறவேண்டும், ஜோன் ரொரி தனது தேர்தல் வாக்குறுதியாக தமிழ்மக்களுக்கு ஒரு சனசமூக நிலையம் கட்டித்தருவேன் எனக் கூறியிருந்தார். இது நிறைவேற்றப்பட வேண்டும். தேர்தல் வாக்குறுதிகளை எப்போதும் மனதில் நினைவிற்கொள்ளல் அவசியம். இவ்வாறு அமைக்கப்படும் சனசமூக நிலையத்தில் அனைத்துத் தரப்பினரும் அதன் நிர்வாகக் குழுவில் இடம்பெறவேண்டும். 28ம் திகதி காலை சி.பி.சி வானொலி யின் 'மெற்றோ காலை' நிகழ்ச்சிக்கு அளித்த பேட்டியில் ஜோன் ரொரி தமிழ் மக்களை புகழ்ந்துள்ளார். தேர்தல் காலங்களில் இந்துக் கோவில் ஒன்றிற்கு சென்றதாகவும், எதுவுமற்று போர் நிலமொன்றில் இருந்து வலிகளை சுமந்து வந்த தமிழ் மக்களின் வளர்ச்சியை பார்க்கும் பொழுது தான் பெருமைப்படுவதாக கூறியுள்ளார். இவர் முன்னால் பல சவால்கள் உள்ளன. புதிய பொலிஸ் அத்தியட்சகர் நியமனம், போக்குவரத்து சேவை புனரமைத்தல், வீடமைப்புத்திட்டம், பன்ஆம் விளையாட்டுப் போட்டிகள், பல உடைவுகளாக பிரிந்துள்ள ரொரண்ரோ நகர கவுன்சிலர்கள் ஒன்றிணைத்தல் போன்ற பல விடயங்களை எவ்வாறு இவர் கையாளப் போகின்றார் என்பதனை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். ரொரண்ரோ மாநகரத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 44 கவுன்சிலர்கள் ஐவர் மட்டுமே புதியவர்கள். 39 கவுன்சிலர்கள் ரொப் போர்ட்டை ஆட்டுவித்த பழைய கவுன்சிலர்கள்.

தமிழ் மக்கள் ஆவலுடன் இத்தேர்தல் முடிவுகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். மொத்தமாக 31 போட்டியாளர்கள் போட்டியிட்டிருந்தார்கள். ரொரண்ரோவிற் கான அனைத்து பதவிகளிலும் போட்டியிட்டிருந்தார்கள். கவுன்சிலர், கல்விச்சபை தர்மகத்தா, கத்தோலிக்க கல்விச்சபை, பிரெஞ்ச் கல்விச் சபை அனைத்திலும் போட்டியிட்டிருந்தார்கள். ஆனால் துரதிர்ஸ்டவசமாக மூவர் மட்டுமே வெற்றிபெற்றிருந்தார்கள். ஏன் பலரால் வெற்றி பெற முடியவில்லை? இலகுவாக கூறுவதானால் ஒரு வட்டாரத்தில் பல தமிழர்கள் போட்டியிட்டார்கள் என்பது. ஆனால் கல்விச்சபை வட்டாரம் 21ல் மூன்று தமிழர்கள் போட்டியிட்டார்கள். இதில் மட்டுமே ஒருவர் போட்டியிட்டிருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம், அல்லது வெற்றிக் கனிக்கு கிட்டே நெருங்கியிருக்கலாம். மற்றைய வட்டாரங்களில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்களின் வாக்குகளை கூட்டினாலும் வெற்றி பெற்ற வாக்காளர்களின் மொத்த வாக்குகளை நெருங்க முடியாதுள்ளது. லோகன் கணபதிக்கு எதிராக இரு தமிழர்கள் போட்டியிட்டிருந்தார்கள். லோகனுக்கு எதிராக முஸ்லீம் வேட்பாளர் ஒருவர் போட்டியிட்டார். இவர் லோகனுக்கு முன்பு கவுன்சிலராகவும் இருந்துள்ளார். அவ்வட்டார தமிழ் மக்கள் தமிழரை கவிழ்க்க தமிழரே போட்டியிடு கின்றார்கள் என்ற கோபத்தில் அதிகளவு லோகனுக்கு வாக்களித்துள்ளதாக தெரிகின்றது. அது மட்டுமல்ல கடந்த எட்டு வருடங்களில் லோகன் அனைத்து சமூகத்தினருக்கும் பாரபட்சமன்றி தனது சேவைகளை வழங்கியுள்ளார். இதுவும் அவருக்கு இலகுவாக வெற்றி பெற காரணமாக அமைந்துள்ளது.




பார்த்தி கந்தவேள் அப்பகுதி மக்களுக்கு நன்கு அறிமுகமானவர். உயர் பாடசாலையில் ஆசிரியராக கடமைபுரிந்த அனுபவமும் உண்டு. இளைஞர்களுக்கான பல திட்டங்களில் ஈடுபட்டுள்ளார். கல்வியில் முதுமானிப்பட்டம் பெற்றுள்ளார். பிரதான மொழியில் நன்கு தேர்ச்சி பெற்றவர். அப்பகுதியில் நீண்ட காலமாக வாழ்ந்தும் வருகின்றார். தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மிகத் தெளிவாக தனது திட்டங்களை வெளிப்படுத்தியுள்ளார். ரொரண்ரோ ஸ்ரார் கல்விச்சபைக்கு சிபார்சு செய்தவர்கள் பட்டியலில் இடம்பெற்ற ஒரு தமிழர் இவராவார். இவர் தமிழர் என்பதற்காக தேர்வாகவில்லை. அவரது திறமைக்கும் வெளிப்பாட்டுக்கும் கிடைத்த வெற்றியே இது.

பல வேட்பாளர்கள் தேர்தல் காலத்து காளான்கள் போல அவ்வப்போது தோன்றுவார்கள். பின்னர் மறைந்து போவார்கள். ஒரு வேட்பாளர் தேர்தலுக்கு பல மாதங்களுக்கு முன்பே தன்னை ஒரு கவுன்சிலராகவே முகநூலிலும் சமூகத்திலும் காட்டிக் கொண்டார். முகநூல் போன்ற சமூக ஊடகங்களில் தவறான கருத்துக்களை முன்வைத்தல், தேர்தல் பட்டிமன்றங்களில் முறையான தயாரிப்பின்றி கண்டபடி உளறுதல், போட்டியிடும் சமூகத்திலிருந்து அந்நியப்பட்டுவிட்டு தேர்தல் சமயங்களில் மாத்திரம் தோன்றுதல், பிரதான மொழித் தேர்ச்சியின்மை, வட்டாரத்தின் முக்கிய விடயங்கள் பற்றிய தெளிவின்மை, மற்றைய சமூகங்களுடன் உறவை வளர்த்துக் கொள்ளாமை, முறையான தகுதியின்மை போன்ற பல விடயங்கள் இம்முறை தமிழ் வேட்பாளர்கள் தோல்வியுற்றமைக்கு பிரதான காரணங்கள். இங்கு தகுதி என்பது கல்வித் தகுதியல்ல. சமூக விடயங்கள் பற்றிய தெளிவு. வட்டாரத்தில் வாழும் அனைத்து சமூகங்களின் பிரச்சினைகளைப் பற்றிய புரிதல் இவை முக்கியம். மிக முக்கியமாக தமிழர்கள் தமிழர்களுக்கு வாக்களிக்க வேண்டும் எனக் கூறுதல் கவலைக்குரியது. சமூக ஊடகங்களில் இதற்கு எதிராக கருத்துக் கூறுபவர்கள் துரோகிகளாகவே சித்தரிக்கப்பட்டார்கள். தோல்விக்கான காரணங்களுள் முக்கியமானது தமிழ் வாக்குகளையே நம்பியிருந்தமை. போட்டி அதிகரித்து சக வேட்பாளர்களின் விளம்பரப் பலகைகளை துஷ்பிரயோகம் செய்தல். அவருக்கு எதிராக தனிப்பட்ட தாக்குதல்களை சமூக ஊடகங்களில் செய்தல் போன்றவையும் மற்றைய சமூகங்களில் இருந்து எம்மை அந்நியப்படுத்தியுள்ளது. சுனாமிக்கு காசு சேர்த்தேன் போன்ற விளம்பரங்களும் வட்டாரத்தின் பிரச்சினைகளில் இருந்து வேட்பாளர்களை அந்நியப்படுத்தி அவர்களது அறியாமையை வெளிப்படுத்துகின்றது. சில விடயங்கள் வேட்பாளர்களை சட்டச் சிக்கல்களிலும் மாட்டிவிடும்.

**- வினோதன் -**

2018 கார்த்திகை தேர்தலில் போட்டியிட விரும்புவர்கள் இப்போதிருந்தே அந்தந்த வட்டாரத்தின் சமூக வேலைகளில் ஈடுபட்டு தங்களை சமூகத்துக்கு அறிமுகப்படுத்திக் கொள்ளவேண்டும். தேர்தல் விஞ்ஞாபனத்தை அவதானத்துடன் தெளிவாகவும் இப்போதிருந்தே தயாரிக்கத் தொடங்கவும். உங்களது தேர்தல் முகவராக நன்கு விடயம் தெரிந்த திறமையானவரை தேர்வு செய்யவும். பொருளாதார நிலைமைகள் அரசியல் மாற்றங்கள் இவை நீங்கள் போட்டியிடும் சமூகத்தில் ஏற்படுத்த போகும் மாற்றங்கள் என்னவற்றை நன்கு அறிந்து கொள்ளுங்கள். பிரதான மொழியில் நன்கு புலமை பெறுங்கள். அனைத்து சமூகங்களுடனும் உறவை வளர்த்துக் கொள்ளுங்கள். இப்படியான திட்டமிடல்கள் உங்களுக்கு பல மாற்றங்களையும் வெற்றி களையும் கொண்டுவரும். 2015ல் கனடிய நாடாளுமன்ற தேர்தல்கள் வருகின்றது. பல தமிழர்கள் போட்டியிடுகின்றார்கள். நம்பிக்கையுடன் காத்திருப்போம்.

மாற்றங்கள் எமக்கானவை.

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

யாவீஸ் விளையாட்டு கழகம் நடத்தும்
சிறுவர்களுக்கான உள்ளக (Indoor) உதைபந்தாட்ட
பயிற்சிகள் ஆரம்பமாகியுள்ளன.

5 வயதுக்குட்பட்டவர்களிலிருந்து 12 வயது பிரிவுகள் வரை அனுபவம் வாய்ந்த
(OSA Certified Coaches)
பயிற்சியாளர்களினால் திங்கட்கிழமை, புதன்கிழமை, சனிக்கிழமை
ஆகிய நாட்களில் மாலை 6:00 மணி முதல் 8:00 மணிவரை பயிற்சிகள்
வழங்கப்படுகின்றன.
Albert Camplell High School Indoor Gym
(Sandhurst Circle & Finch)
Contact: 416.450.5473 / 416.846.4403

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➤ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➤ FUNCTIONS, ADV. FUNCTIONS
➤ CALCULUS & VECTORS, DATA MGT
➤ SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ M CAT Classes
✓ EQAO GR 3 & 6
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

# SPECIAL DEAL FOR BUYERS & SELLERS

என் மூலம் வீடு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை அல்லது இந்தியா சென்று வர இலவச விமானச்சீட்டுகள் எந்தவொரு குலுக்கலும் இன்றி வழங்கப்படும். அல்லது வேண்டுமானால் அதற்கு சமமான பணம் வழங்கப்படும்.

| Purchase Price | Number of free tickets |
|---|---|
| 400,000 - 674,999 | 1 |
| 675,000 - 849,999 | 2 |
| 850,000 - 999,000 | 3 |
| 1,000,000+ | 4 |

**Also Free Moving**

## March Special For Sellers

My listing Commission is Flate Rate of - $2,999 + HST
My listing Commission For Condo. is Flate Rate of - $999 + HST

**Services Offered:**

- Open Houses
- Professional Photography
- Flyer Distribution for Your Property
- Home Staging
- Free Moving

**Get More $$$ For Your House By Calling Me!**

என்னை அழைப்பதன் மூலம் உங்கள் கட்டணங்களை எவ்வாறு குறைப்பது உங்களின் வருமானத்துக்கு ஏற்ப வீடுகளை எவ்வாறு தெரிவு செய்வது போன்ற பல்வேறு விடயங்களுக்கான ஆலோசனைகளை வழங்கி உங்கள் முதலீட்டுக்கான உச்ச பயனை அடைய என்னை அழையுங்கள்.

**(This Deal Start From March 01st to November 30th)**



## Lourdson Antonipillai
(Sales Representative)

**Dir: 416.738.8824**
**Offi: 905.201.9977**

HomeLife / Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, #205, Markham ON, L3S 4N8

*Independently Owned & Operated

# இலங்கை மலையக பகுதியில் நிலச்சரிவு

இலங்கையில் மலையகப் பகுதியான பதுளை மாவட்டத்தில் ஒக்ரோபர் 29, 2014 காலை ஏற்பட்ட மிகப் பெரிய நிலச்சரிவில் 300 க்கும் மேற்பட்ட தமிழர் புதையுண்டனர். இலங்கையில் பருவமழை தீவிரமானதால் தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் மலையகப் பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டு வருகிறது. இந்திய வம்சாவளித் தமிழர் அதிகம் வாழும் மலையகமான ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் கொஸ்லாந்த, மீரியபெத்தையில் இந்த மிகப் பெரிய நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் மொத்தம் 70 வீடுகள் அப்படியே மண்ணில் புதையுண்டன. இந்த 70 வீடுகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர்



உயிருடன் புதைந்தனர். இவர்கள் அனைவரும் இந்திய வம்சாவளித் தமிழர். அனைவரையும் மீட்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் ஒக்ரோபர் 29, 2014 மாலை வரை 20 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் தொடர் மழை பெய்து வந்ததால் நிலச்சரிவு அபாயம் இருப்பதாக ஏற்கெனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த தால் பல குடும்பங்கள் வெளியேறிவிட்டன. எஞ்சியிருந்தோரே நிலச்சரிவில் சிக்கி யுள்ளனர். மண்ணில் புதையுண்டவர்களை மீட்கும் பணியில் இலங்கை ராணுவமும் விமானப்படையும் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி யில் முகாமிட்டிருந்த இலங்கை ராணுவத்தின் கமாண்டோ படை வீரர்கள் ஹெலிகொப்டர் மூலம் பதுளைக்கு சென்றுள்ளனர்.

மொத்தம் 200 ஏக்கர் பரப்பளவில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும் மீரியபெந்த என்ற தோட்டப் பகுதியையே காணவில்லை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் இப்பகுதியில் தமிழர் அமைத்திருந்த கோயில் ஒன்றும் நிலச்சரிவில் புதைந்து போய்விட்டது. இந்த பகுதியில் இயங்கி வந்த 10 கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இதனிடையே நிலச்சரிவு மீட்புப் பணிகளை துரிதப்படுத்த உத்தரவிட்டுள்ளதாக இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்சே தமது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். இந்நிலையில் இலங்கை இந்திய வம்சாவளித் தமிழ் அமைச்சரான ஆறுமுகம் தொண்டமான் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளைப் பார்வையிட்டு வருகிறார். இந்த பயங்கர நிலச்சரிவில் உயிர் தப்பியவர்களில் ஒருவரான மகேந்திரன் என்பவர், ஒக்ரோபர் 29, 2014 காலை 7 மணியளவில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. நாங்கள் தப்பியோட முயற்சித்தும் பலனில்லை. எப்படியாவது தப்பியோடிவிடலாம் என்று நினைத்தோம் முடியாமல் போய்விட்டது. சுமார் 500 பேர் இதில் சிக்கியிருக்கலாம். எனது குடும்பத்தைச் சேர்ந்த 9 பேரின் கதி என்ன என்று தெரியவில்லை என்றார். இதேபோல் ராதா என்ற பெண் கூறுகையில், காலையில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. அந்த ஒரு சத்தத்தை மட்டுமே எங்களால் கேட்க முடிந்தது. இடுப்புக்கு கீழே முழுவதும் மண் மூடிவிட்டது. சிலர் மண்ணை வெட்டி அகற்றி என்னை உயிரோடு காப்பாற்றினர் என்றார்.

## மீரியபெத்த மக்களுக்கு உதவப் போவதாக இந்தியா அறிவிப்பு

பதுளை கொஸ்லாந்தை மீரியபெத்தையில் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ இந்தியா முன்வந்துள்ளது. இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சிங்ஹா, இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் தொடர்புக்கொண்டு இந்த தகவலை வழங்கியுள்ளார். இதன்போது இந்தியாவின் உதவி அறிவிப்புக்கு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நன்றி தெரிவித்துள்ளார். இந்நிலையில் பெரும்பாலும் இந்திய உயர்ஸ் தானிக அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு செல்வர் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## பேதமின்றி மீரியபெத்த மக்களுக்கு உதவுங்கள்: ரணில்

இன மதபேதமின்றி மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள கொஸ்லாந்தை மீரிய பெத்த மக்களுக்கு உதவ இலங்கையர்கள் அனைவரும் முன்வரவேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார். அனைவரும் ஒன்றிணைந்து எமது சகோதர சகோதரிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுள்ளார். உதவியற்ற மக்களுக்கு உதவ வேண்டியது அனைவரின் கடமை என்றும் ரணில் குறிப்பிட்டுள்ளார்.


Computek College
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY
Registered as a private career college under the Private Career Colleges Act, 2005

Enroll in a Diploma Course and receive a




(Offer valid until Dec 31, 2014)




Markham Campus Computek Students receiving Free Laptops!

Food Handler Certification
Saturday, Nov 15th

Food Service Worker
Saturday, Nov 1st

Personal Support Worker (Weekend Class)
Saturday, Nov 29th

Network Engineering
Monday, Nov 3rd

DIPLOMA COURSES

| | |
|---|---|
| Enterprise Network Engineering | 50 wks |
| Community Services Worker | 50 wks |
| Int. Application Development | 50 wks |
| Early Childcare Assistant | 38 wks |
| Personal Support Worker | 32 wks |
| Accounting & Payroll Admin | 35 wks |
| Medical Office Admin | 28 wks |
| Network Engineering | 28 wks |
| Computerized Accounting | 26 wks |
| Business Administration | 26 wks |

PART-TIME COURSES (WEEKEND / EVENING)
Bank Teller, MS Office
Food Handler, Food Service Worker
AccPac, Simply Accounting, Quick books
Exam Prep: A+, MCSA, MCSE
ICDN 1, ICDN 2, Canadian Securities Course
C/C++, C#, Java, VB.net, HTML, SQL
Medical Coding & Billing
CPR & First Aid

WWW.COMPUTEK.EDU

Financial assistance may be available for those who qualify

Toronto Campus
301-2347, Kennedy Rd.
(Kennedy/Sheppard)
416-321-9911

Markham Campus
202 - 7 Eastvale Drive.
(Markham / Steeles)
905-471-3344

Scarborough Campus
248-2390 Eglinton Ave E
Kennedy/Eglinton)
416-285-9941

# தோள்பட்டைவலி - காரணமும் தீர்வும்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

## Shoulder pain

மனிதர்களின் இயக்கம் அனைத்திற்கும் முக்கிய காரணமாகச் செயல்படுவது தலைப்பகுதிதான். பிரபஞ்ச சக்திகளை உணரும் தன்மை அனைத்தும் தலைப் பகுதியின் வழியேதான் நடைபெறுகிறது. இங்குதான் எம்மை இயக்கும் ஐம்புலன் களும் அமைந்துள்ளன. இந்த தலைப் பகுதியை உடலோடு இணைக்கும் பாலம் தான் கழுத்து. இந்தப் பகுதியினூடாகத்தான் உடலுக்கும் தலைக்கும் இரத்த நாளங்கள், நரம்புகள் செல்கின்றன. கழுத்தின் மையப்பகுதியில் 7 தண்டுவட எலும்புகள் உள்ளன. இவற்றைச் சுற்றி தசைகளும் தசை நார்களும் இணைந்து உள்ளன. கழுத்து எலும்பிலிருந்துதான் கைகளுக்குப் போகும் நரம்புகள் வெளிவருகின்றன. இந்த நரம்புகளில் பாதிப்பு ஏற்பட்டால் நமது அன்றாட செயல்கள் அனைத்தும் கடின மாகிவிடுகின்றன. இது பெரும்பாலும் 40 வயதை தாண்டியவர்களுக்கே ஏற்படுகிறது.

### தோள்பட்டை வலிகள் வரக் காரணங்கள்

மலச்சிக்கல், செரியாமை, வாயுக் கோளாறுகள், குடல்சூடு, மூலச்சூடு, அதிகசிந்தனை, மன அழுத்தம், தூக்க மின்மை, கோபம், ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்தல், அதிகநேரம் தொலைக் காட்சி பார்த்தல், சீரற்ற உணவுமுறை, போதிய உடற்பயிற்சியின்மை போன்ற காரணங்களால் இத்தகைய வலி உருவாகின்றது. அத்துடன் நேரம் கடந்த உணவு, எளிதில் சீரணமாகாத உணவு, நீண்டநாள் பதப்படுத்தப்பட்டதும், வாயுவை உருவாக்கும் உணவுகள், நீண்டநேரம் பட்டினி இருத்தல் போன்றவற்றாலும் வலிகள் உருவாகலாம்.

குடலில் வாயுத் தொல்லை அதிகரித்து மலச்சிக்கலை உருவாக்கி மேல் தள்ளப் பட்டுத் தலைப்பகுதியை சென்றடைந்து நீர் கோர்த்து பின்பு தலையின் பின்பகுதி நரம்புகள் வழியாக கீழ் இறங்கி கழுத்து பகுதிக்கு வரும்போது அங்கு தசைகளையும் நரம்புகளையும் சுற்றி கோர்த்துக் கொள்கின்றது. பின் பசைத்தன்மையடைந்து கழுத்து தசை எலும்புகளையும் நரம்புகளையும் பந்து போல் இறுகச் செய்கின்றது. இதனால் கழுத்து பகுதி திருப்பமுடியாது போகின்றது. மேலும் அங்கு கைகளின் நரம்புகள் இறுகி தோள்பட்டைப் பகுதியில் வலியை உருவாக்கின்றது.

### குணம் குறிகள்

தலைவலி, மண்டைக்குத்து, மூக்கில் நீர் வடிதல், பின்கழுத்துப் பகுதியில் பிடிப்பு போன்றவை உண்டாகும். குளிந்து நிமிரும் போது தலை சுற்றி கண்ணில் மின்னல்போல் தோன்றும். சிலருக்கு எழுந்து நடக்கும் போது தலைசுற்று, மயக்கம் உண்டாகும். கைகளின் நரம்புகள் கழுத்தில் ஆரம்பிப்பதால் கைகள் மரத்துப்போகும். சுண்டு விரல்பகுதிகள் செயலிழந்து காணப்படும். எழுதும் போதோ கம்பியூட்டரின் வேலை செய்யும் போதோ கைவிரல்களில் வலி உண்டாகும்.

### தோள்பட்டை வலியைப் போக்க நிவாரணங்கள்



மேலைத்தேய மருத்துவத்தில் கழுத்துப் பட்டையை படம்பிடித்து பார்த்து அறுவை சிகிச்சைக்கு பரிந்துரைக்கின்றனர். ஆனால் இந்திய மருத்துவமுறைகளில் வர்ம பரிகார முறைப்படி சிலி மூலிகை மருந்துகள் கொடுத்தும் சில தைலங்கள் கொண்டு கழுத்துப் பகுதியை அழுத்தி தடவியும் வந்தால் கழுத்துப்பகுதியிலுள்ள எலும்புகளை சுற்றியுள்ள தசைகள் இளகி சீரான இரத்த ஓட்டத்தை ஏற்படுத்தும். நாளடைவில் வலியும் நீங்கும்.

### உணவுமுறை

தினமும் மதிய உணவில் ஏதேனும் ஒரு கீரை வகையைச் சேர்க்கவேண்டும். முடிந்த வரை பச்சைக் காய்கறிகள் பழங்களை தினமும் உணவில் சேர்க்க வேண்டும். அதிக குளிரூட்டப்பட்ட உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும். இரவுநேர உணவு மென்மையானதாகவும் எளிதில் செரிமானமாகக்கூடியதாகவும் இருக்க வேண்டும். பாதி வயிற்றுக்கு சாப்பிடுவது நல்லது. படுக்கைக்கு செல்லு முன் 2 மணிநேரத்திற்கு முன் இரவு உணவை முடித்துவிட வேண்டும். குறிப்பாக காலை உணவை தவிர்க்கக் கூடாது. இரவு முழுவதும் காலியாகவுள்ள வயிற்றில் காலை உணவு சாப்பிடாதிருந்தால் வயிற்றில் வாயு உருவாகும்.

### உடல் உழைப்பும் யோகா பயிற்சியும்

உடல் உழைப்பு என்பது பலருக்கு இல்லாது போய்விட்டது. காரணம் கணினி முன்னிருந்து வேலை செய்பவர்களே அதிகம் உள்ளனர். இவர்கள் தினமும் அரைநேரமாவது யோகாசன பயிற்சி செய்வது சிறந்தது. யோகாவில் கழுத்து தோள்பட்டை போன்றவற்றிற்கான பல பயிற்சிகள் உள்ளன. அத்துடன் மன அழுத்தம் படபடப்பு போன்றவற்றை போக்குவதற்கு பிராணாயாமம், தியானம் போன்றவை அதிக பலனளிக்கின்றன. அத்துடன் தோள் பகுதியிலுள்ள நரம்புகளுக்கு சீரான இரத்த ஓட்டம் கிடைக்க ஏதுவாகின்றது.

### படுக்கை

தலையணை அதிக உயரமில்லாதிருக்க வேண்டும். பள்ளம் மேடு இல்லாத படுக்கையிலேயே தூங்க வேண்டும். அதிக குளிர்காற்று உடலில் படும்படியாக தூங்கக் கூடாது. தோள்பட்டை வலிக்கு கழுத்திலும் தோள்களின் உட்புறமாகவும் மையப்பகுதி யிலுள்ள வர்மப்புள்ளிகளை கண்டறிந்து வலியின் தன்மைக்குத் தகுந்தபடி வலது புறமாகவும் பின் வட்டவடிவமாக மாறி மாறி அழுத்தம் கொடுக்கும்போது அங்குள்ள இறுக்கம் தளர்ந்து அந்த தோள்முட்டுப் பகுதியில் சீராக இரத்த ஓட்டம் உண்டாக அது இயல்பு நிலைக்கு நாளடைவில் திரும்பும். இதனை ஒரு வர்மக்கலை நிபுணர்களால் தான் சரிவர செய்ய முடியும். இதனைவிடுத்து அறுவை சிகிச்சை செய்து எவரும் பூரண குணமடைந்ததற்கு சான்றுகள் இல்லை.


AUM WELLNESS CLINIC IN

Healing Massage, Suffering From Pain?

Get Relief From:

முதுகுவலி கழுத்துவலி தோள்பட்டைவலி
முழங்கால் வலிகள் தீராததலைவலி நரம்புப்பிடிப்பு
நீரிழிவு தூக்கமின்மை கொலஸ்ரோல்
உடல் எடை குறைத்தல் இரத்த ஓட்டத்தை சீராக்குதல்
**போன்றவற்றிற்கு இவரை நாடுங்கள்**

Dr. Lata

Based on Appointment



Cell: 416.890.9217 Office: 647.304.6046
5215 Finch Ave. E. #220, Toronto, ON





ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721



YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# அன்புடைமை - 5

திருவள்ளுவரின் 75வது குறளில் இருந்தே இந்த இதழின் தொடர் கட்டுரையை ஆரம்பிப்போம்.

'அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு'

இந்தக் குறளிற்குப் பரிமேலழகர் 'அன்புடையராய் இல்லறத்தோடு பொருந்திய நெறியின் பயன் என்று சொல்லுவர் அறிந்தோர். இவ்வுலகத்து இல்வாழ்க்கைக் கண் நின்று, இன்பம் நுகர்ந்து, அதன்மேல் துறக்கத்துச் சென்று எய்தும் பேரின்பத்தினை' என்றவாறு பொருள் உரைத்துள்ளார். 'உலகில் இன்புற்று வாழ்கின்றவர்க்கு வாய்க்கும் சிறப்பு, அவர் அன்புள்ளம் கொண்டவராக விளங்குவதன் பயனே' என்று கலைஞர் இதற்கு விளக்கம் கொடுத்துள்ளார். 'உலகத்தில் இன்பம் உற்று வாழ்கின்றவர் அடையும் சிறப்பு, அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று கூறுவர் என்று மு.வ விளக்கம் கொடுத்துள்ளார். 'அன்புடன் வாழும் வாழ்வின் பயனே, உலகில் இன்புற்று வாழ்வோர் அடையும் சிறப்பாகும்' என்று சாமி சிதம்பரனார் விளக்கம் கொடுத்துள்ளார். இந்தக் குறளின் மூலம் இன்புற்று வாழ்வதற்கு அன்புடைமை அவசியம் என்பது தெரிகின்றது.

'மக்களோடு அன்பில் நட்புடன் வாழ்ந்தாலே, அன்பாகக் கருமமாற்றி இன்பமாக வாழலாம். நட்பை எவ்வாறு ஏற்படுத்தலாம் என்பது ஒரு கலை. அக்கலை அறிந்து நட்பில் வாழ்பவன் மனிதக்காந்தம் ஆவான்' என்று 'வெற்றிபெற' என்ற நூலில் நூலாசிரியர் பண்டிதர் ம.செ.அலெக்சாந்தர் குறிப்பிட்டுள்ளார். உண்மையான அன்புடன் நட்பைப் பேணுவது வாழ்க்கையின் வெற்றிக்கு மிகவும் அவசியமானது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மற்றவர்களுடன் இசைவுபெறப் பழகுவதும், மற்றவர்களை மதித்து நடத்தலும், உண்மையான அன்புடன் பழகுதலும் நமக்கு நல்ல நண்பர்களைத் தேடித் தரும். நல்ல நணபர்களைப் பெற்றுக் கொள்வதும், அந்த நட்பைப் பேணிப் பாதுகாப்பதும் நமது வாழ்க்கையில் பெரும் பலத்தைக் கொடுக்கும் என்று கூறலாம். மற்றவர்களுடன் உரையாடும்பொழுது மிகவும் மென்மையாகவும், கனிவாகவும் பேசுவது நல்லது. மற்றவர்களை புண்படுத்தாது பேச வேண்டும் என்பதும் முக்கியமானது. நண்பர்களிற்கிடையே உள்ள நல்ல உறவிற்கு அன்புடைமை என்பது மிகவும் அவசியம் என்பதை நன்குணர்ந்து கொண்டு அகத்திலும், புறத்திலும் அன்பு நண்பர்களிற்கிடையே நல்ல முறையில் பரிமாறப்பட வேண்டும்.

'இருண்டு சாரமற்று வறண்டு போன இதயங்களில் அன்பெனும் விதைகளைத் தூவுங்கள். அங்கே, அவை முளைவிட்டு அந்தப் பாலைவன வெளிகளின் பரப்புக்களைப் பச்சைப் பசேல் என்று ஆக்கும். அங்கே அன்பென்ற பூக்கள் அழகாக மலர்ந்து அதன் நறுமணம் காற்றில் இதமாகப் பரவும். அன்பெனும் வெள்ளம் ஆறாகப் பெருகி அந்த வெளியில் சலசலத்து ஓடும். ஒவ்வொரு பறவையும் ஒவ்வொரு குழந்தையும் அன்பென்ற பாட்டை அழகான குரலெடுத்து ஒயிலாகப் பாடும்' என்று பகவான் சாயிபாபா தனது பிரசங்கத்தில் குறிப்பிட்டுள்ளார். உலகில் பல கோடி பக்தர்களைக் கொண்ட சாயிபாபா எல்லோரிடமும் அன்புடன் இருங்கள் என்று தனது பக்தர்களுக்கு எடுத்துக் கூறி வந்த ஆன்மீக வழிகாட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

எது உண்மையான அன்பு என்று நாம்




அறிந்து கொள்ள வேண்டும். நாங்கள் விரும்புவதை அன்பு என்று நினைக்கின்றோம் என்று ஆன்மீகவாதிகள் கருத்து தெரிவித்துள்ளார்கள். அன்பிற்கு விருப்பு, வெறுப்புக்கள் இல்லை. அன்பு தன்னலமற்றது. அது அகங்காரமற்றது. அது நட்பு, பகைமை எல்லாவற்றையும் கடந்தது. ஆன்மீக அன்பிற்கும், உலகியல் அன்பிற்கும் தொடர்பில்லை என்றும் கூறப்படுகின்றது. உலகியல் அன்பு உடல், புத்தி, மனம் இவற்றுடன் சம்பந்தப்பட்டது. மனிதர்களிடம் காணப்படும் தீய நடத்தைகள், தீய சிந்தனைகள், விலக வேண்டுமென்றால் அவர்களின் இதயம் அன்பால் நிறைந்திருக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. அப்பொழுது மனிதர்களின் மனம் அன்பு மயமாக மாறிவிடும். மனிதர்களிடம் அன்புடைமை இருக்கும் பொழுது அவர்களிடம் நேரான சிந்தைகள் ஏற்படும். அன்புடைமை இருக்கும்பொழுது உள்ளத்தில் பயத்திற்கும், கவலைக்கும் இடம் இருக்காது. உள்ளத்தில் பயமும், கவலையும் இல்லையென்றால் அமைதி ஏற்படும்.

'மனித வாழ்க்கை என்ற மரத்தில் அன்பென்பது ஒரு பழம். இந்தப் பழத்தின் இனிய சுவையை அனுபவிக்க முதலில் தோல் நீக்கப்பட வேண்டும். அதன் பின்னர் அதனுள் இருக்கும் விதைகள் எடுக்கப்பட வேண்டும். அதற்குப் பிறகுதான் பழத்தின் சாரத்தைச் சுவைக்க இயலும். இந்த மனித வாழ்க்கை மரத்தின் பழமான அன்பை மூடியுள்ள அகங்காரம் (Ego). பழத்தின் உள்ளே காணப்படும் விதை சுயநலம் (Selfish). அகங்காரம், சுயநலம் என்கின்ற இரண்டையும் நீக்கினால் மதுரமான பழச்சாற்றை அதாவது அன்பைச் சுவைக்க இயலும் என்றவாறு ஒரு அருமையான விளக்கத்தை சனத்தன சாரதி என்ற ஆன்மீகச் சஞ்சிகையில் வாசித்தேன்.

அன்பு என்பது ஆன்மீகத்திலும், உளவியலிலும் அதிகமாகப் பேசப்படும் ஒரு பொருளாகக் காணப்படுகின்றது. அன்பு பற்றி ஆய்வுரீதியாகவும் பேசப்படும் விடயங்களையும் இந்தத் தொடர்கட்டுரையில் நாங்கள் கவனிப்பது பயனுள்ளதாக இருக்கும் என நினைக்கின்றேன். இதயம் அன்பு மற்றும் கருணை போன்ற நேர்மறையான விடயங்களால் மகிழ்ச்சியடையும். நாங்கள் நிறைந்த அன்புடைமை கொண்டிருக்கும் பொழுது தியானத்தில் உள்ளது போன்ற அமைதி நிலை ஏற்படும் என்றும் கூறப்படுகின்றது. அன்புடைமை பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com

**MOHAN**
**HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC**

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

**HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING**

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

முதறிஞர் தமிழ்ஒளி வித்துவான் க.செபரத்தினம்
ஓராண்டு நினைவு விழாவும், நினைவுப்பேருரையும், நினைவு மலர்வெளியீடும்



கல்வித்துறை பேராசிரியருமான மா.செல்வராஜா அவர்கள்
பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு
நினைவுப் பேருரை ஆற்ற உள்ளனர்.
காலம்: 01 கார்த்திகை (November) சனிக்கிழமை 2014
நேரம் : பிற்பகல் 5.00 மணி
இடம் : டொன் பொஸ்கோ கத்தோலிக்க பாடசாலை விழா மண்டபம்
Don Bosco Catholic Secondary School (Auditorium)
2 Antrews Blvd, M9R 1V8
அனைவரையும் அன்புடன் எதிர்பார்க்கிறோம்.
தொடர்புகளுக்கு:
416 998 2284 | 647 224 8871 | 647 342 8687

# ஒட்டாவா தேசிய போர் நினைவகத்தில் கொல்லப்பட்ட வீரரின் உடல் இராணுவ மரியாதையுடன் ஹமில்ரனில் அடக்கம் செய்யப்பட்டது



ஒட்டாவா தேசிய போர் நினைவகத்தில் கடமையில் இருந்த போது ஒக்ரோபர் 22, 2014 புதன்கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட Cpl. Nathan Cirillo வீரரின் உடல் தாயார் கதி கிறிலோ அருகாமையில் வர படை உறுப்பினர்கள் உடன் வர ஒட்டாவாவிலிருந்து ஹமில்டன் நோக்கி புறப்பட்டது. நெடுஞ்சாலைகள் மற்றும் நகரத்தெருக்கள் நெடுகிலும் கூடிநின்று கொல்லப்பட்ட Cpl. Nathan Cirillo ற்கு ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் இறுதி அஞ்சலியை செலுத்தினர். ஒக்ரோபர் 24, 2014 வெள்ளிக்கிழமை இரவு 8-மணிக்கு சிறிது முன்னதாக இவரது உடல் ஹமில்டனை வந்தடைந்தது

ஆயிரக்கணக்கான மக்கள் ஒட்டாவாவிலிருந்து ஹமில்டன் வரையிலுமான 600-கிலோமீற்றர் தூர நெடுஞ்சாலையில் கனடிய கொடியை அசைத்த வண்ணம் "O Canada"வை இசைத்தவாறு அவரது உடல் ஊர்வலமாக வீடு வந்து சேரும்வரை காணப்பட்டனர். மக்களின் உணர்வுகளையும் துக்கத்தையும் வழிநெடுகலும் காணக்கூடியதாக இருந்தது. ஊர்வலம் ஹமில்டனை வந்தடைந்த சமயம் இருள் பரவத்தொடங்கிவிட்டது. Cirillo இன் குடும்பத்தினர் மக்களின் ஆதரவிற்கு நன்றி தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். அதில் தங்கள் மகனை 'கனடாவின் மகன்' என தெரிவித்துள்ளனர். Cirillo இன் செல்லப்பிராணியான நாயும் தனது நண்பனின் வரவிற்காக துக்கத்துடன் காத்திருந்த காட்சியும் சோகமானதாக இருந்தது.

Cpl. Nathan Cirillo இன் மரணச்சடங்கு அவரது சொந்த இடமான ஹமில்ரனில் ஒக்ரோபர் 28, 2014 செவ்வாய்கிழமை இராணுவ மரியாதையுடன் நடத்தப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள், பிரதம மந்திரி உட்பட்ட அரசியல் பிரமுகர்கள் இந்த இறுதிச்சடங்கில் கலந்து கொண்டனர். நாட்டின் தலைநகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட இந்த வீரரின் 5-வயது மகன் ஒரு கறுப்பு நிற லிமோசினுக்குள் இருந்து தனது தந்தைக்கு வழங்கப்பட்ட கௌரவத்தை பார்த்துக் கொண்டிருந்தான். இவரது இறுதி ஊர்வலம் இராணுவ வாகனத்தின் பின்னால் ஹமில்ரன் வீதி வழியாக வீரர்களின் மெதுவான



அணிவகுப்பு நடையுடனும் வாத்தியத்துடனும் சென்றது. ஹமில்ரன் ரவுன் முழுவதிலும் இராணுவ அதிகாரிகள் எல்லா இடங்களிலும் காணப்பட்டனர். பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.


Train to be a ...
Community Service Worker With CO-OP



Other Diploma Programs:
Computerized Accounting
THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE
Network Engineering
Microsoft | IT Academy Program
Business Administration
Medical Office Assistant
EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome
Customized Corporate Training available for:
MS-Office 2003, 2007, 2010
Upgrade MS-Office 2003 to 2007 or 2010
Microsoft server 2003 and 2008 Subjects
A+ Certification / Cisco CCNA
OACC PROUD MEMBER
You may qualify for
SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179
Call Now: (416) 840-9179
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005
citi COLLEGE
www.CitiCollege.ca
Financial Assistance may be available to those who qualify

# ஆறுமுகனின் வீறுமிக்க விரதம்

சூலம் பிடித்து எம பாசம் சுழற்றி தொடர்ந்து வரும்
காலன் தனக்கு ஒருகாலும் அஞ்சேன் கூடல் மீது எழுந்த
ஆலம் குடித்த பெருமான் குமாரன் ஆறுமுகன்
வேலும் திருக்கையும் உண்டே நமக்கு ஒரு மெய் துணையே

கலியுகவரதனாம் கந்தப்பெருமானை நினைந்து அநுட்டிக்கப்படும் விரதங்களில் மிகவும் சிறந்தது கந்த ஷஷ்டி விரதமாகும். இந்துக்கள் இவ்விரதத்தை மிகவும் புனிதமாகவும் பக்தி சிரத்தையுடனும் அநுட்டித்து வருகின்றார்கள். இவ்விரதம் ஐப்பசி மாத தீபாவளி அமாவாசையை அடுத்து வளர்பிறை பிரதமை முதல் ஷஷ்டி ஈறாகவுள்ள ஆறுநாட்கள் அநுட்டிகப்படுகின்றது. இது மிகவும் கஷ்டமான விரதம். ஆறு ஆண்டுகள் தொடர்ச்சியாக அநுட்டித்தால் உரிய பலன் கிட்டும். ஷஷ்டி அன்று தான் முருகப்பெருமான் சூரனை சங்காரம் செய்தார்.

மூவிரண்டு அதாவது ஆறு எண்ணிற்கும் முருகனுக்கும் அதிக தொடர்புண்டு. அவனது முகங்கள் ஆறு. அவன் ஆறுமுகன். அவனது வீடுகள் ஆறு. ஆறு வீட்டிற்கு அதிபன். அவை படைவீடுகள் எனப்படும். அவனது மந்திரம் 'சரவண-பவ' என்று ஆறெழுத்து மந்திரம் அவனது விரதம் கந்தஷஷ்டி. ஆறு நாட்களைக் கொண்டது. ஷஷ்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்பர். இது கந்தனின் வீறு மிக்க விரதமாகும். எனவே மாறுபாடின்றி ஆறுமுகனை அனுதினமும் ஆராதனை செய்தால் எமக்கு தேறுதல் அளித்து எதிரிகளை கூறு செய்து காப்பாற்றுவான்.

கந்தஷஷ்டியில் ஆறு நாட்களும் விரதம் இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் விடியற்காலை நித்திரை விட்டெழுந்து காலைக் கடன்களை முடித்து நீராடியபின் பூரண கும்பம் வைத்து குங்குமம் அட்சதையிட்டு முருகனை அதில்



ஆவாகணம் செய்து மலர் தூவி தூப தீபம் காட்டி அர்ச்சித்து வழிபட வேண்டும். கந்தஷஷ்டி கவசம், கந்தரநுபூதி, கந்தரலங்காரம், திருப்புகழ். திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தரந்தாதி, வேல் விருத்தம், சேவல் விருத்தம் கந்தரந்தாதி வேல்விருத்தம் முதலியவற்றை பாராயணம் செய்ய வேண்டும். ஏழாம் நாட் காலை பாரணை செய்ய வேண்டும்.

தெய்வ நம்பிக்கை உயர்ந்த ஒழுக்க நெறியில் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் கட்டுப்பாடான வாழ்க்கை வாழ வேண்டும் என்ற துடிப்பு, நல்ல ஆரோக்கியம் இவை எல்லாம் ஏற்படுத்தற்கு விரதங்கள் பெரிதும் உதவுகின்றன. 'காப்பது விரதம்' என்பதனால் அநுட்டானங்கள், பூசைகள், விரதங்கள் நம்மை நல்லவர்களாக வாழ வழி சமைக்கின்றன.

சண்முகக் கடவுள் போற்றி
சரவணத் துதியாய் போற்றி
கண்மணி முருகா போற்றி
கார்த்திகை பாலா போற்றி
தன்மலர் கடம்பா மாலை
தாங்கிய தோளா போற்றி
விண்மதி வதன வள்ளி
வேலவா போற்றி! போற்றி!



**நா. க. சிவராமலிங்கம்**



# விருட்சங்கள்

## ராஜம் கிருஸ்ணன்
(1925 - 2014)

நாங்கள் வாழுந்து கொண்டிருக்கும் காலத்தில் வாழ்ந்து விருட்சமாகியுள்ள எழுத்தாளர்களுள் முக்கியமானவர் ராஜம் கிருஸ்ணன். முசிறியில் 1925ல் பிறந்த இவருக்கு சிறு வயதிலேயே திருமணமாகி விட்டது. கணவர் வேலை செய்யும் இடங்களில் எல்லாம் வாழ்ந்ததனால் பல வேறு அனுபவங்களை பெற்றுக் கொண்டார். உத்தரகாண்டம் என்ற இவரது நாவல் இடதுசாரி இயக்கங்களின் வீழ்ச்சியை ஆராயமுற்படுகின்றது. இது இவரது நாவல்களில் குறிப்பிடத்தக்க நாவல். இடதுசாரி கருத்தியலுடன் ஈடுபாடு கொண்டிருந்தமையால் இவரது நாவல்களில் பெரும்பாலும் சமத்துவ கருத்துக்களை காணலாம். இவர் பெண்கள் ஒடுக்கப்படு வதற்கு எதிராக துணிந்து எழுதியது மட்டுமல்லாமல் அவர்களுக்காக குரலும் கொடுத்தார். இவர் பல நாவல்களை எழுதியுள்ளார். பல சமூகங்கள் பற்றிய நூல்களையும் எழுதியுள்ளார். இறுதிக் காலத்தில் முதியோர் இல்லத்தில் முதியோருடன் ஒருவராக வாழ்ந்து தனது வாழ்க்கையை வித்தாக்கியுள்ளார். இவரைப் பற்றி சமூகத்தின் முக்கியஸ்தர்கள் எழுதிய குறிப்புக்கள் இவை.

மனுஸ்ய புத்திரன் - கவிஞர், எழுத்தாளர், உயிர்மை சஞ்சிகை



ஆசிரியர்

ராஜம் கிருஷ்ணனின் மறைவு அவரைப் பற்றிய சில நினைவுகளை எழுப்பிக் கொண்டிருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு அவர் அபிராமபுரத்தில் வாழ்ந்தார். ஒரு நாள் காலை ஒரு மூதாட்டி வீட்டிற்கு வந்தார் 'நான் ராஜம் கிருஷ்ணன், பக்கத்து தெருவில் வாழ்கிறேன். வாக்கிங் வந்தேன். உயிர்மை போர்டு பார்த்தேன். நீங்க இங்கதான் இருக்கீங்கன்னு சொன்னாங்க' என்றார். நான் பதட்டத்துடன் அவரை அமரச் சொன்னேன். நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தோம். அவர் மிகவும் வசதியான ஒரு குடும்பத்திலிருந்து வந்தவர். ஆனால் ஒரு சிறிய வாடகை வீட்டில் உதவிக்குக் கூட யாருமில்லாமல் வாழ்ந்து கொண்டிருந்தார். மனிதர்கள் வேலைக்காரர் கள் பற்றி அவருக்கு கடுமையான புகார்கள் இருந்தன. தனியாக வீட்டில் பாத்ரூமில் பலமணி நேரம் கீழே விழுந்து கிடந்தது பற்றி சொல்லிக்கொண்டிருந்தார். முதுமையில் யாருமில்லாமல் போவதன் அவலத்தை நான் ராஜம் கிருஷ்ணனிடம் முழுமையாக கண்டேன். பின்னும் பலமுறை வீட்டிற்கு வந்திருக்கிறார். 'என்ன உதவி வேண்டும் என்றாலும் எப்போது வேண்டும் என்றாலும் ஃபோன் பண்ணுங்கள் என்று ஒவ்வொரு முறையும் கூறுவேன். ஒரு உதவியும் ஒருபோதும் அவர் கேட்டதில்லை. சுத்தம் பற்றிய அதீதமான பிரக்ஞை கொண்டவராக இருந்தார். பின்னர் அவர் அபிராம புரத்திலிருந்து இடம் பெயர்ந்து சென்று விட்டார். அவர் ஒரு முதியோர் இல்லத்தில் புகலிடம் தேடிக்கொண்டதாக பின்னர் கேள்விப்பட்டேன். போய்ப்பார்க்க நினைத்தும் அது நடக்கவில்லை. அரவணைக்க யாரும் இல்லாத ஒரு மூதாட்டிக்கு எத்தகைய ஒரு முதுமை இந்தியாவில் கிடைக்கும், அதுதான் ராஜம் கிருஷ்ணனுக்கும் கிடைத்தது. அவர் நாடறிந்த எழுத்தாளராக இருந்தால் என்ன!

## விருதுகள்

கடந்த தலைமுறை தமிழ் இலக்கியத்தின் முக்கியமான முகங்களுள் ஒன்றான திருமதி. கிருஷ்ணன் பல்வேறு பாராட்டுகளையும், விருதுகளையும் பெற்றவர். அவற்றுள் சில:

- 1950—நியூயோர்க் ஹெரால்ட் ட்ரைப்யூன் சர்வதேச விருது
- 1953—கலைமகள் விருது
- 1973— சாகித்திய அகாதமி விருது
- 1975—சோவியத் லாண்ட் நேரு விருது
- 1991—திரு.வி.க. விருது

## அசோக்குமார்
*(25 June 1941 – 22 October 2014)*



நெஞ்சத்தைக் கிள்ளாதே படம் பார்த்தவர்கள் அதன் ஒளிப்பதிவாளர் யார் எனக் கேட்டார்கள். தமிழில் ஒளிப்பதிவில் பல மாற்றங்கள் ஏற்பட காரணமாக விருந்தவர்களுள் அசோக்குமாரும் ஒருவர். மகேந்திரனின் பல படங்களுக்கு ஒளிப்பதிவாளராக கடமையாற்றியுள்ளார். உதிரிப்பூக்கள், ஜானி, ஜீன்ஸ் போன்றன படங்கள் குறிப்பிடத்தக்கவை. மலையாளத்தில் பல படங்களுக்கு ஒளிப்பதிவாளராக கடமையாற்றியுள்ளார். அன்று பெய்த மழையில் என்ற தமிழ்ப்படத்தையும் இயக்கியுள்ளார். ஹொலிவூட் படமொன்றின் தழுவலாக இருந்த போதும், இவரது ஒளிப்பதிவும் இயக்கமும் விமர்சகர்களால் பாராட்டப்பட்டது. ஹிந்தி, தெலுங்கு மொழிகள் உட்பட ஆறு படங்களையே இயக்கியுள்ளார். தமிழில் புதிய அலை ஒளிப்பதிவை உருவாக்கிய வர்களுள் அசோக்குமார் குறிப்பிடத்தக்கவர். இவரது காலத்தில் ஒளிப்பதிவாளராகவும், இயக்குனராகவும் இருந்து மறைந்த பாலுமகேந்திரா மற்றையவர்.

## எஸ்.எஸ். இராஜேந்திரன்
*(1928 - 2014)*



இலட்சிய நடிகர் என அழைக்கப்படும் எஸ்.எஸ் இராஜேந்திரன் காலமானார். 1950-1960 களில் பல படங்களில் நடித்தார். சிவாஜி, எம்.ஜி.ஆர், ஜெமினி போன்ற நடிகர்களுடன் இணைந்து பல படங்களில் நடித்துள்ளார். பூம்புகார், மறக்கமுடியுமா போன்ற படங்கள் இவரது திறமையை வெளிப்படுத்தின. 1962ல் தி.மு.க சார்பாக போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினரானார். மேல்சபை உறுப்பினராகவும் கடமை யாற்றியுள்ளார். எம்.ஜி.ஆருடன் தி.மு.கவில் இருந்து வெளியேறி அ.தி.மு.க சார்பாக ஆண்டிப்பட்டி சட்டமன்ற சபையில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினரானார். எம்.ஜி.ஆரைவிட அதிகளவு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். திராவிடக் கொள்கைகளால் கவரப்பட்டு புராணப் படங்களில் நடிக்க மறுத்தார். இறுதிவரை நடிக்கவில்லை. தனது 18 வயதில் பங்கஜம் என்ற பெண்ணை அறிஞர் அண்ணா முன்னிலையில் திருமணம் செய்து கொண்டார். தன்னுடன் பல படங்களில் நடித்த விஜயகுமாரியை (30 படங்கள்) பின்னர் இரண்டாந் திருமணம் செய்து கொண்டார். 1974ல் தாமரைச் செல்வியை மூன்றாவதாக மணந்து கொண்டார். மூன்றாவது திருமணம் முதல் மனைவி பங்கஜம் இறந்த பின்னரே நடைபெற்றது. இவர் மூன்று படங்களையும் இயக்கியுள்ளார். இவர் இயக்கிய மணிமகுடம் படத்தில் இவருக்கு நாயகியாக மக்கள் முதல்வர் ஜெயலலிதா நடித்துள்ளார். இவர் ஒரு சிறந்த வில்லிசைக் கலைஞராவார்.

# முதுமையின் முறுக்கு!



கண்கள் மங்கியதால்
பாம்புகள்
கயிறுகளில் நெளிகின்றன!

பற்கள் விழுந்ததால்
சொற்கள்
துப்பலிற் குழைகின்றன!

மயிர்கள்
தலையைத் துறந்து
ஆண்டுகள் அதிகம் ஆகிவிட்டன!

தோல்கள்
வற்றல் முந்திரிகைகளைப்போல்
வயதில் என்றோ வேகிவிட்டன!

கால்கள்
நிதானத்தை யாசிக்கின்றன!

கைகள்
மிருதங்கம் வாசிக்கின்றன!

மூளை
அடிக்கடி யோசிக்கின்றது!

மூக்கு
மூச்சைக் குறைத்துவிட்டது!

நாக்கு
சுவையை வெறுத்துவிட்டது!

கழுத்து வாங்கிவிட்டது!
முதுகு தூங்கிவிட்டது!

ஆசைகூடத் தனது சுமைகளை
இறக்கிக்கொண்டது!

ஆயினும் -

இந்த ஆணவம் மட்டும்
இன்னமும்
மீசையை
முறுக்கிக்கொண்டுதான்
இருக்கிறது!



- தமிழ்வேள் விநாயகர் கந்தவனம் -

**COMMERCIAL UNITS FOR SALE**

Main Floor. Retail commercial. Units for quick sale in a reputable. Indoor mall. Tenented. Vacant position Possible. Price included one parking. Heart of scarborough. Close to all amenities. Only a few units available for your business. Only $148,888. (Don't miss)

**Pl. call: 416.315.9397**

Home Line of Credit
upto $100,000
NO APPRAISAL FEE — FUNDED WITHIN 4-5 DAYS
YOU'RE APPROVED WITHIN 24 HOURS

Need 2nd MORTGAGE?
YOU DECIDE HOW MUCH YOU NEED!
BAD CREDIT? NO PROBLEM!
NO INCOME VERIFICATION — NO CREDIT CHECK
416.298.2777

| 2nd MORTGAGE | YOU PAY BACK |
|---|---|
| $20,000 | $133/mo |
| $30,000 | $200/mo |
| $40,000 | $267/mo |
| $50,000 | $333/mo |
| $75,000 | $500/mo |
| $100,000 | $667/mo |

ULTIMATE MORTGAGE AND FINANCE SOLUTIONS INC.
LIC#11995. 305-5200 Finch Ave E. Scarborough, ON M1S 4Z5

# திரைவிமர்சனம் - கத்தி

இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் விவசாயிகள் வாழ்வாதாரப் பிரச்சினைகளில் அடிப்படையானது வேளாண்மைக்கான தண்ணீர். பொய்த்துப்போன மழை காரணமாக ஆறு, குளங்கள் தண்ணீர் இல்லாமல் வறண்டுவிட்டன. இதனால், பெருமளவு தமிழக விவசாயம் நிலத்தடி நீரையே நம்பி இருக்கிறது. இந்நிலையில், பெரும் முதலீட்டுடன் வரும் 'கோகோ கோலா' போன்ற கார்ப்பரேட் நிறுவனங்கள் குளிர்பான நீர் தேவைக்காக மிக ஆழம் வரைக்கும் ஆழ்குழாய் கிணறு அமைத்து நிலத்தடி நீரை எடுக்கிறன. விவசாயிகளின் கிணறுகளைவிட இந்த ஆழ்குழாய் கிணறுகள் அதிக ஆழம் கீழே சென்று தண்ணீரை எடுப்பதால் வேளாண்மை கிணறுகள் தண்ணீர் இல்லாமல் வறண்டு போகின்றன. கார்ப்பரேட் நிறுவனம் மாதிரி ஆழமாக ஆழ்குழாய் கிணறு அமைக்க விவசாயியிடம் முதலீடு இல்லை. இப்பிரச்சினை காரணமாக கேரளா மாநிலத்தில் கோகொகோலா ஆலை அமைக்க முயன்றபோது அங்குள்ள மக்கள் போராட்டங்கள் நடத்தி அதனைத் தடுத்துவிட்டார்கள். பிறகு, அந்த ஆலை தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி நதிக்கரையோரமாக அமைந்தது. இதற்கு எதிரான போராட்டம் நீண்ட நாட்களாக நடைபெற்றுவருகிறது. இந்த உண்மைப் பின்னணியை கதைக் களமாக கொண்டு வந்திருக்கிறது கத்தி!

விஜய் இரண்டு வேடங்களில் நடித்திருக்கிறார். ஒருவர் ஜீவானந்தம்,



- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -

எம்.எஸ்.ஸி. ஹைட்ராலஜி படித்த சமூகப் போராளி. இன்னொருவர் கதிரேசன், வழிப்பறி திருடன். கொல்கத்தா சிறையில் இருக்கிறார் கதிரேசன். அந்தச் சிறையிலிருந்து ஒரு கைதி தப்பிக்கிறான். அவனைப் பிடிக்க, சிறையிலிருந்து தப்பித்துச் செல்வதில் தேர்ந்தவரான கதிரேசன் உதவியை நாடுகிறது காவல்துறை. 'இதான் வாய்ப்பு' என்று அதனைப் பயன்படுத்தி தப்பிக்கிறார் கதிரேசன். போலி கடவு சீட்டில் வெளிநாட்டுக்கு தப்பிச்செல்ல முடிவு செய்து விமான நிலையம் வரும் கதிரேசன், அங்கு சமந்தாவைப் பார்த்து அவர் அழகில் மயங்கி கண்டதும் காதலில் விழுகிறார். வெளிநாடு பயணம் ரத்தாகிறது. இந்நிலையில் ஒரு கும்பல் ஒருவரை துப்பாக்கியால் சுடுவதைப் பார்க்கிறார். ஓடிப்போய் பார்த்தால் சுடப்பட்டவர் தன்னைப் போலவே இருக்கிறார்.

அவரை மருத்துவமனையில் சேர்க்கிறார், கதிரேசன். சுடப்பட்டவர் பெயர் ஜீவானந்தம் என்று தெரிகிறது. ஆனால், மருத்துவமனையில் கதிரேசன் என்ற தன் பெயரை பதிவு செய்கிறார். இப்படி கதிரேசனைத் துரத்தி வரும் கொல்கத்தா காவல்துறையிடம் ஜீவானந்தத்தை சிக்கவைத்துவிட்டு தப்பிக்கும் கதிரேசன், ஜீவானந்தம் நடத்தும் முதியோர் இல்லத்துக்கு வந்து சேர்கிறார். அங்குள்ள முதியவர்கள் ஜீவானந்தம் என நினைத்து அவர் மேல் அன்பை பொழிகிறார்கள். அடுத்தடுத்து எதற்கென்று தெரியாமலேயே லட்சம், கோடி என்று எக்கச்சக்கமான பணம் கதிரேசன் கைக்குக் கிடைக்க அதையெல்லாம் சுருட்டிவிட்டு ஓடிப் போக திட்டமிடுகிறார். அப்போதுதான் ஜீவானந்தத்தின் உண்மை முகம் கதிரேசனுக்குத் தெரிய வருகிறது. தன்னூத்து என்ற கிராமம். அருமையான நீரூற்று ஓடும் வளமான அந்த கிராமத்தில், நீரை உறிஞ்சி குளிர்பான ஆலை அமைக்கப் பார்க்கிறது ஒரு பன்னாட்டு குளிர்பான நிறுவனம். இதற்காக விவசாயிகளின் விளைநிலங்களை ரவுடிகள் மூலமாக அபகரிக்கிறது. விவசாயிகளை கொலை செய்து அவர்கள் கட்டைவிரல் பதிவின் மூலம் போலி ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதற்கு எதிராக ஜீவானந்தம் விவசாயிகளை திரட்டிப் போராடுகிறார். இதற்காகத்தான் பன்னாட்டு நிறுவனத்தின் அடியாட்கள் ஜீவானந்தத்தை சுட்டிருக்கிறார்கள்.

வெளிநாட்டுக்கு தப்பிச் செல்லும் எண்ணத்திலிருக்கும் கதிரேசன் ஒரு

தொடர்ச்சி 28ஆம் பக்கம்

# Parkway Mall Mobilicity !!!

$50 OFF COUPON

# $25/mo

Life Time Deal. No Contract.

Exclusive Special

## Talk, Text & DATA(+$10)

UNLIMITED Local Calling
UNLIMITED Ontario Long Distance
UNLIMITED Text messaging
UNLIMITED Internet & Mobile-Hotspot(+$10)
FREE Caller ID, Voice Mail, Call Waiting and more



| Alcatel Flip | Samsung T199 | Alcatel Evolve | Alcatel Fierce 4G | LG G2x | LG L70 | Samsung Galaxy S4 |
|---|---|---|---|---|---|---|
| ~~$79.99~~ | $79.99 | ~~$169.99~~ | ~~$249.99~~ | ~~$199.99~~ | ~~$249.99~~ | ~~$649.99~~ |
| $0 | $0 | $59.99 | $79.99 | $79.99 | $129.99 | $349.99 |

No Contract !!
No Credit Check !!

PHONES $50 OFF

You can bring in your own phone

ONLY at

Mobilicity @ Parkway Mall (Kiosk beside Metro Supermarket)
Parkway Mall (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough (தமிழ்/English/Chinese)
M1R4B8, 416-999-9229

mobilicity
Now that's smart.™




# நூல் வெளியீடு



மார்க்கம் சந்திரன் அவர்களால் எழுதப்பட்ட, 'சுமைதாங்கி' என்ற கவிதைத் தொகுப்பு நூல், 1160 Birchmount Road Unit 2A இல் அமைந்துள்ள மண்டபத்தில் 19.10.2014 இல் வெளியிட்டு வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.





விளம்பரம் பத்திரிகையை இணையத்தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**

# NEW PROJECT

TRIDEL
BUILT FOR LIFE

AQUAVISTA
AT BAYSIDE TORONTO



HomeLife/GTA Realty Inc. Brokerage*

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

**5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969**

*Independently Owned & Operated

# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும்

நியாண்டரல்கள் பற்றிய விபரங்கள் சில சென்ற தடவையிற் பார்த்தோம். சில வேளைகளில் மனதிலே ஒரு ஆதங்கம் கூட உங்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். நியாண்டல் கள் பற்றி பற்பல விடயங்களை ஆய்வாளர்கள் நாளுக்கு நாள் புதிது புதிதாகத் தருகின்றார்கள். ஆர்வமுள்ளவர்கள் அத்துறையிலும் ஈடுபடலாம். இனி வித்தியாசமான இன்னொரு பார்வையைக் கூறுகின்றேன். கடவுட் கொள்கையாளர்களும் பரிமாணக் கொள்கையாளர்களும் தவறிய இணைப்பினையிட்டு மோதிக் கொண்டு இருக்க, இன்னொரு சாரார் தவறிய இணைப் பென்று ஒன்றுமே இல்லை என்கின்றார்கள். எவ்வளவுதான் முயற்சித்தா லும் இல்லாத ஒன்றினை எங்ஙனம் தேடிப் பிடிப்பது என்கின்றார்கள். அதற்காக கடவுள் கொள்கையை இவர்கள் முற்றாக ஆதரிக்கின்றார்கள் என்று மட்டும் எண்ணிவிடாதீர்கள். மாறாக, பரிணாமக் கொள்கையை முற்றாகவே ஏற்றுக்கொள்ளும் இவர்கள் மனிதக் குரங்குகளுக்கும் மனிதருக்குமிடையே ஒரு பரிணாம வளர்ச்சிப் படியே இல்லை என்றுமட்டும்தான் கூறுகின்றார்கள். அடடா! இது என்ன புதுக்கதை ஒன்று வருகின்றது எனப் பார்க்கின்றீர்களா? அப்படியாயின் மில்லியன் வருடங்களின் முன்னர் எவ்விதம் பூமியில் மனிதர்கள் தோன்றினார்கள் என்று கேட்கின்றீர்களா? இனம் தெரியாத பறக்கும் பொருட்களுக்கான விளக்கத்தினைத் தரக்கூடியதான இவர்களது சுவாரசியமான விளக்கத்தினை இனிப் பார்ப்போம்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சுமாராக மில்லியன் வருடங்களுக்கு முன்னராக வேற்றுக் கிரக மனிதர்கள் எமது பூமிக்கு வந்திருக்கின்றார்கள். கதிரவக் குடும்பத்திற்கு அப்பால் எங்கேயோ வெகுதூரத்தில் உள்ள கலக்சி ஒன்றின் விண்மீனின் கோள் ஒன்றில் இருந்து அவர்கள் வந்திருக்கவேண்டும். பூமிக்கு வருவதற்கு முன்னராக செவ்வாயில் தங்கியிருக்கலாம் என்றும் இவர்கள் சந்தேகிக்கின்றார்கள். செவ்வாயில் உயிரி னங்கள் இருந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் சாயல் இவர்களினாலேயே விடப்பட்டிருக்கலாம் என்பதும் இக்கொள்கை யாளர்களின் ஐயம். எப்படியோ, மில்லியன் வருடங்களுக்கு முன்னராக பூமிக்கு வந்த இந்த வேற்றுக்கிரக மனிதர்கள் பூமியின் இயற்கைச் சூழலினாலும், அதன் உயிரி னங்களின் வகைகளினாலும் கவரப்பட்டார் கள். இந்நிலையில்தான் பூமியில் வாழ்ந்த உயிரினங்களில் கொஞ்சம் வித்தியாசமான தும் சற்று புத்திக்கூர்மையானதுமான சிலவகை மனிதக் குரங்குகள் அந்த வேற்றுக்கிரகங்களின் பார்வையிற் பட்டன. அதிபுத்திசீவிகளான அந்த வேற்றுக்கிரகிகள் இந்தக் குரங்கு களில் சில பரிசோதனைகள் செய்து பார்த்தார்கள். அதன் விளைவாகப் புத்திக் கூர்மையான மனித இனம் பூமியில் தோன்றியது. இப்படியாக மில்லியன் வருடங்களின் முன்னராகப் பூமியில் தோன்றிய இனம் வேற்றுக் கிரகிகளின் தொடர்ச்சியான பரிசோதனைகளால் புத்திச் செழிப்பான உயிரினமாப் புவியிலே ஊசாடத் தொடங்கியது. அந்தப் பரிசோதனைகளின் விளைவாகவே இன்று நானும் நீங்களும் காட்சியளிக்கின்றோம் என்கிறார்கள். இவ்விடயம் இப்படியிருக்க, இன்னமும் சிலர் ஒருபடி மேலே சென்று, வேற்றுக் கிரகிகளின் மரபணுப் பொறிமுறைப் பரிசோதனைக்கு உள்ளானவை மனிதக் குரங்குகள் அல்ல, அக்காலத்தில் வாழ்ந்த ஹோமோ சேபியன் களான ஆதிமனிதர்கள்தான் என்கிறார்கள். கிட்டத்தட்ட 55 ஆயிரம் வருடங்களின் முன்னராக இந்தப் பரிசோதனை முயற்சி நடந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் நம்புகின்றார்கள். இதன் விளைவாகத்தான், அக்காலத்தில் மனிதர்களினால் புவியை ஆட்சி கொள்ள முடிந்தது என்கிறார்கள், எது எப்படியிருப்பினும் பூமியில் இன்று பல்கிப் பெருகியிருக்கும் மனித இனமானது புவிக்கு வந்த வேற்றுக்கிரக மனிதர்களின் மரபணுப் பொறியியல் ஆய்வின் விளைவே என்பது சில இனம் தெரியாத பறக்கும் பொருள்கள் பற்றிய ஆய்வாளர்களின் கருத்து. "சரி, எல்லாம் நன்றாகத்தான் இருக்கின்றது. இதனை நம்புவதற்கு என்ன ஆதாரம் இருக்கின்றது" எனக் கேட்டால் எந்தவொரு உறுதியான ஆதாரத்தையும் இவர்களால் முன்வைக்க முடியாதுள்ளது. சிந்தனை ஒன்றுதான் இவர்களினது உறுதியான ஆதாரம். அத்துடன் 'வேற்றுக் கிரக மனிதர்களினால் கடத்தப்பட்டோம்' எனக் கூறும் சிலரும் மனோவசியச் சிகிச்சையின் போது (அறிதுயில் நிலையில்) இதுபோன்று கூறியுள்ளார்கள். எனவேதான் தவறிய அல்லது விடுபட்ட இணைப்பென்று ஒன்று இல்லை என்றும் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் கூட அப்படியொன்றினை யாரும் கண்டுபிடிக்கமுடியாது என்றும் இவர்கள் அடித்துக் கூறுகின்றார்கள்.

வேற்றுக் கிரக மனிதர்களின் மரபணுப் பொறிமுறைப் பரிசோதனை நடந்திருக்கலாம் என எண்ணுவதற்காக வாய்ப்பும் உண்டு. நியாண்டரல்களின் அழிவு இதனை உண்மை தான் எனக்கூறுவது போல இருக்கின்றது. ஹோமோ சேபியன்கள் எனப் பொதுவாகக் கூறப்படும் ஆதிமனிதர்களும், நியாண்டரல் களும் ஒன்றாகத்தான் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால் 55,000 ஆண்டு முன்னர் ஹோமோ சேபியன்களின் மூளையில் 'மூளை விகாரம்' (Brain Mutation) எற்பட்டு அவர்களது அறிவியல் நிலையானது சடுதியில் மாற்றம் அடைந்து விட்டது என்பது ஆய்வாளர்களின் கூற்று. இவ்வறிவியல் மாற்றத்தின் விளைவாகவே, அக்காலத்தில் தங்களுடன் (போட்டியாக) இருந்த சகோதர இனமான நியாண்டரல்களை முற்றாகவே அழிக்கக் கூடியதாக இருந்தது என்கிறார்கள் நியாண்டரல்கள் பற்றி ஆய்வு செய்கிறவர்கள்.

இதன்படி பார்த்தால் பூமியில் மனித இனமென்பது இயற்கையின் முற்று முழுதான தெரிவல்ல என்றாகின்றது. வேற்றுக் கிரக மனிதர்களின் மரபணுப் பொறிமுறைப் பரிசோதனையின் காரணமாகத்தான் ஹோமோ சேபியன்கள் என்கிற மனித இனம் பக்குவம் அடைந்ததாக இருப்பின், இன்னமும் சில மில்லியன் ஆண்டில், ஒருவேளை குரங்கில் இருந்து பரிணாம வளர்ச்சியில் இன்னொரு இனம் தோன்றலாம். அவ்விதம் இயற்கையின் தேர்வின் அடிப்படையில் தோன்றக் கூடிய அவ்வுயிரினம் மனிதரை ஒத்ததாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. இயற்கை எவ்விதம் தெரிவு செய்கின்றதோ அப்படியான உயிரின-மாக அது இருக்கும். பூமியில் முழுமையான மனித இனம் வேற்றுக் கிரக மனிதர்களின் மரபணுப் பொறியியல் ஆய்வின் பலாபலன் என்பது சரியானதாக இருக்குமாயின், பூமியிற்கு வருங்காலங்களில் எதுவித ஆபத்தும் நிகழாது இருக்குமாயின், எமது எதிர்கால வாரிசுகள் மனிதக் குரங்குகளின் பரிணாம வளர்ச்சியில் வரக்கூடிய உயி-ரினங்களையும் காணக்கூடியதாகவிருக்கும், அதுசரி, பூமியில் மனித இனம் எப்படியாயினும் தோன்றியிருக்கட்டும். அதற்கும் இனம்தெரியாப் பறக்கும் பொருட்களுக்கும் என்ன தொடர்பு என்று கேட்கின்றீர்களா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். விடை தானாகவே கிடைக்கும். எனது உதவி கூட உங்களுக்குத் தேவைப்படாது. என்றாலும் சில விடயங்களை நானும் கூற விரும்புகின்றேன்.

அதனை அடுத்த தடவையில் நான் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன் உங்களின் பங்கிற்கு நீங்களும் சிந்திக்க அவகாசம் கிடைக்குமல்லவா!

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca






Kingsway-Queensway
சந்திக்கருகாமையில்

- எட்டு நிமிடங்களில் ரொரன்ரோ டவுன் ரவுன்
- இரண்டு நிமிடங்களில் கார்டினர் விரைவுப் பாதை
- நிமிடங்களில் பாடசாலை, வணிக மையங்கள்
- 24 மணிநேர பாதுகாவலர்கள் மற்றும் ரெனிஸ் கோர்ட், உடற்பயிற்சியரங்கம், உள்ளக,வெளியக நீச்சல் குளங்கள்
- குறைந்த விலையில் சகல வசதிகளும் உள்ளடங்கிய ஒரு அறை நவீன Condo

Ragunathan Mahesu - Sales Rep - 416-450-6833

VEEDU REALTY INC. BROKERAGE
416-759.6000

AERO COURIER
Fast & Secure World Wide Service
உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது......
கொழும்பு-திருகோணமலை-மட்டக்களப்பு-மன்னார்-வவுனியா
கிளிநொச்சி-யாழ்ப்பாணம் கண்டி மற்றும் இந்தியா-ஐரோப்பிய
நாடுகள் அனைத்து இடங்களுக்கும் உங்கள் பொதிகளை
பாதுகாப்பாக அனுப்ப வேண்டுமா? எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!
Tel: 416.292.0444
5635 Finch Ave East Unit 2&3
Toronto On.M1B 5K9

www.vlambaram.com / www.tamilvanakkam.com


அத்தனை குழம்பும்
அத்தனை ருசி...!
தரத்திலும் No.1
ஆரோக்கியத்திலும் No.1
இப்போது புதுமையிலும் No.1
Niru BRAND ®
வறுத்த மிளகாயத் தூள்
நா நரம்புகள்
சிலிர்த்திடும் ருசி!
Marketing By Tamil Source
நிரு பிராண்ட்
40 Minuk Acres, Scarborough, ON M1E 4Y6.
Tel: (416) 750-1976, Fax: (416) 750-8779
E-mail:info@niru.com

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

கடந்த இதழ் தொடர்ச்சி....

'எங்கடை உடம்பு அதிசயமானது. பொதுவாகவே அது தன்னைத்தானே கவனிச்சுக் கொள்ளும். சுற்றுச் சூழலாலை ஏதேனும் இடைஞ்சல் வந்தால், அது தன்ரைபாட்டிலை தன்னைத் தானே கவனிச்சுக் கொள்ளும். அதுக்கு எங்கடை மூளைதான் உதவி செய்யுது. இப்பிடி எங்கடை உடம்பு தன்னைக் கவனிக்கேக்கை என்ன செய்யுதெண்டால், அந்த இடைஞ்சலை உடம்பு தாங்கிக் கொள்ளும் வல்லமையைக் குடுக்கும். அதுக்காக சிலவேளைகளிலை சில 'ஓமோன்'களையும் சுரக்கச் சொல்லி மூளை எங்கடை உடம்புக்கு அட்வைஸ் பண்ணும்.'

வித்தியாதரன் சாதாரண மொழியில் தெளிவாக்கிக் கொண்டிருந்தார். 'சிலவேளைகளிலை அந்த ஓமோன்களாலையும் இடைஞ்சலை இல்லாமல் பண்ணேலாமல் போயிடும். இந்த நேரத்திலை மூளை களைச்சுப் போயிடும். அப்பதான் இந்தத் தலையிடியளும், நித்திரை இல்லாமல் போறதும், விளங்காத கனவுகளும் வந்து தொல்லைப்படுத்தும். சிலசமயம் அந்த இடைஞ்சலையே மூளை மறந்து போயிடும்.'

வித்தியாதரன் இடையில் நிறுத்தி 'நான் சொல்லுறது விளங்குதானே' எனக் கேட்டக, சிவா 'ஓமோம் விளங்குது' எனக் கூறினான். நீலவேணி அதிசயமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'பொதுவாயே இதுகளெல்லாம் ஒரு கொஞ்சக் காலத்துக்குத்தான் இருக்கும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக குறைஞ்சு கொண்டு வந்து கடைசியிலை எல்லாம் மாறிவிடும். இப்பிடித்தான் எங்கடை உடம்பு எங்களைப் பக்குவம் பாக்கிறது' என்ற வித்தியாதரன் 'ஆனால்,' எனக் கூறிவிட்டுத் தொடர்ந்தார். சிவாவும் நீலவேணியும் சுவாரசியமான கதையைக் கேட்பது போலக் கேட்டுக் கொண்டு இருந்தார்கள்.

சில அதிர்ச்சியான சம்பவங்களை மூளை இலேசிலை மறக்காது. மூளையிலை நல்லாய்ப் பதிஞ்சிருக்கும். என்னெண்டு சரியாய் ஒண்டும் தெரியாது. மூளை என்னெண்டால், அதைத் தேடும். இப்பிடி வரேக்கைதான் உப்பிடித் தலையிடியள் நெடுகலுமாய் வரும்.'

சிவாவுக்குத் தனது தீராத தலையிடியின் காரணம் மெதுவாக விளங்குவது போல இருந்தது. நீலவேணி இன்னமும் ஆச்சரியமாகவே கேட்டுக் கொண்டிருந்தாள்.

வித்தியாதரன் தொடர்ந்தார் 'இப்பிடியான கேசுகளுக்குதான் கிப்னரைஸ் கிளினிக் வேலைசெய்யும்' என்றவர் ஹிப்னரைஸ் கிளினிக்கைப் பற்றிய விளக்கமும் கொடுக்கத் தொடங்கினார்.

'கிப்னரைஸ் கிளினிக்கிலை, வருத்தம் வந்தவரை கிப்னரைஸ் பண்ணி, கிப்னரைஸ் உறக்கநிலை என்ற நிலைக்கு டொக்டர் கொண்டு வருவர். இதை இப்ப தமிழிலை அறிதுயில் நிலை எண்டு சொல்லினம். அந்த கிப்னரைஸ் உறக்கநிலையில் வருத்தமானவரின்ரை மூளை அதிலை ஆழமாய் பதிஞ்சிருக்கு விசயங்களையும் கண்டு கொள்ளும். அந்த நிலையிலை, டொக்டர் கேள்விகளைக் கேட்டு, பதிஞ்சு போன நினைவுகளை வெளியிலை கொண்டு வருவர். அதுதான் இந்தக் கிளினிக்கின்ரை வேலை. அப்பிடி எல்லாம் வெளியிலை வந்தாப் பிறகு அவருக்கு பொதுவாய் தலையிடி, குழப்பமான கனவுகள் எல்லாம் நிண்டு போயிடும்.. இதுதான் உங்களுக்கான அடுத்த றீட்மென்ட்'

'அதுசரி டொக்டர், ஒருக்காச் செய்தால் காணுமோ, இல்லாட்டி....'

'சில சமயத்திலை மூண்டு நாலு முறையும் செய்ய வேண்டி வரலாம். இது மூளையிலை அந்த விசயம் எவ்வளவு சிக்கலாய் பதிஞ்சிருக்கு எண்டதைப் பொறுத்தது.'

◊ கனி ◊

'டொக்டர், பயப்பிட ஒண்டுமில்லையே' சிவா பயந்தபடி கேட்டான்.

'நீங்கள் ஒண்டுக்கும் பயப்பிடத் தேவையில்லை. இதிலையும் இரண்டு முறை இருக்குது. ஒண்டு உங்கடை அனுமதியோடை செய்யிறது. அது உங்களுக்குத் தெரியும் நீங்கள் ஹிப்னரைஸ் பண்ணப்படப் போறியள் எண்டு. இப்பிடிச் செய்யேக்கை உங்கடை முழு ஒத்துழைப்பும் இருக்கும். இப்பிடிச் செய்யேக்கை உங்களுக்குத் தேவையில்லை எண்டால் நீங்கள் நிப்பாட்டலாம். மற்றது, உங்களுக்குத் தெரியாமல் செய்யிறது. அது கொஞ்சம் சிக்கலானது. உங்கடை அனுமதி இல்லாமல் உங்களைக் கிப்னரைஸ் பண்ணி விபரங்களை அறிய முயற்சிக்கிறது. அப்பிடிச் செய்யேக்கை உங்களாலை ஒண்டும் பண்ணேலாது. இப்பிடியான கிப்னரைஸ் வேலையளை சில இரகசிய வேலை செய்யிறவை, இரகசியமாகச் செய்யிறவை. ஆனால் நான் உங்களுக்கு றெக்கமண்ட் பண்ணி இருக்கிறது முதலாவது முறை. உங்கடை விருப்பப்படி, உங்கடை ஒத்துழைப்போடு செய்யிறது. இதிலை ஒரு பிரச்சனையும் வராது.'

'இப்ப இந்த கிப்னரைஸ் வைத்தியமுறை கொஞ்சம் கொஞ்சமாய் பெரிசாகிக் கொண்டு வருகுது. ஒப்பரேசனுக்கு முதல், ஒப்பரேசன்ரை நோவு தெரியாமல் இருக்கிறதுக்கும் கிப்னரைசைப் பாவிக்கினம். கான்சர் காரருக்கும் நோவு தெரியாமல் இருக்க கிப்னரைசைப் பாவிக்கினம். இப்பிடிக் கனக்க வருத்தங்களுக்கு இப்ப கிப்னரைசை பாவிக்கினம்.'

சிவா இப்பவும் பேசாமல்தான் இருந்தான். நீலவேணி சிவாவையும் வித்தியாதரனையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டு இருந்தாள். ஒன்றுமே கூறவில்லை. குழம்பியிருக்கிறாள் என்றுதான் கூறவேண்டும்.

'இப்ப நான் உங்களுக்கு என்ன நடக்குது எண்டு தெரியப்படுத்தத்தான் இதுகளைச் சொன்னனான். இது என்ரை பீல்டும் இல்லை. நாலஞ்சு பேர் இதாலை வருத்தம் மாறி இருக்கினம். நீங்கள் ஓமெண்டு சொன்னால் ஸ்ரீபன் இன்னமும் விளக்கங்கள் தருவார்'


TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்
Knowledge Is Power



DIPLOMA PROGRAMS
Accounting & Payroll Admin.
35 Weeks
Business Administration
26 Weeks
Computerized Accounting
26 Weeks
Medical Office Admin.(MOA)
32 Weeks
Personal Support Worker(PSW)
26 Weeks (NACC Diploma)

FREE TRAINING
யார் தகுதி உடையவர்கள்?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ உரகம்ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றை இலவசமாகக் கற்கலாம்
Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000
அனைத்தும் இலவசம்

PART TIME COURSES
MS Office 2010, Quick Books 2013
Simply Accounting 2013, Accpac 5.6
Canadian Securities Course
First Aid & CPR
Food Handler Certification

• 100% Instructor Led Training • Small Class Sizes
• Student Friendly Environment • Ample Free Parking
• Professional & Experienced Staff • TTC Accessible
• Career Planning & Counselling

416-291-5155 / 416-451-6680
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# BASEMENT RENT

**BRIMLEY & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**647.344.3384 / 647.829.8384**

**MEADOWVALE & ELLESMERE**
ஒளிப்பதிவுக்கென ஒன்றல்ல இரண்டு கமராக்களை வாடகைக்கு எடுத்திருந்தார்களாம். திரைப்படத்தில் அதற்கான தேவையோ பயன்படுத்தியதான காட்சித் துண்டோ இருக்கவில்லை. பல காட்சிகளில் குவியப் பிறழ்ச்சி தெரிகிறது. காட்சியை இயக்குனராலும் ஒளிப்பதிவாளராலும் உடனேயும் நேரடியாகவும் பார்த்திருக்கவும் கூடியதான கைக்கெட்டும் இப்போதைய தொழில்நுட்ப வசதி கொண்டே இவர்கள் படம்பிடித்ததால், 14 நாட்களில் அவசரத்தில் எடுக்கப்பட்டதால் இவையெல்லாம் நேர்ந்தது என இயக்குனர் சொல்வதை நம்புவதற்கில்லை. இசையும் ஏற்கனவே பதிவாகியிருந்த இசைக்கோர்வைகளில் இருந்தே சேர்க்கப்பட்டதைப் புரிய முடிகிறது. அத்தோடு தற்போதைய ஒலித் தரத்திற்கு இசை இல்லை. தேவையான பிரத்தியேக சத்தங்கள் சேர்க்கப்படவில்லை. நிறச் சீர்மைக்காக செலவு செய்ததாகச் சொல்லிக் கொண்டார்கள். இருந்தும் வெள்ளை, கறுப்பு நிறத் தோல்க்காரர்கள் சம்மந்தப்படும் காட்சிகளில் இருண்மை படர்வதைக் காணமுடிகிறது. இப்படி இன்னும் சொல்லலாம். இவை சில மாதிரிகள் அவ்வளவே. தொழில்நுட்பத்திற்குச் செலவு செய்வதல்ல அதற்கேற்ற பெறுபேறு கிட்டியதைச் சொல்வதிலேயே பெருமை கொள்ள வேண்டும். இதில் தயாரிப்பாளர்கள் சறுக்கியிருக்கிறார்கள். ஓடுகிற குதிரைக்குக் கட்டிய பணத்தை மீளப்பெற்றுக் கொண்டீர்களா என கிருஸ்ணா அவர்களால் கேட்கப்பட்ட போது, சிறிது சிறிதாய் மீள எடுத்துக் கொண்டிருக்கிறோம் என முரளி பதிலளித்திருந்தார். அது உண்மையாயின் லெனினின் அடுத்த திரைப்படத்தையும் இவர்களே தயாரிப்பார்கள் என எதிர்பார்க்கலாம்.

திரைக்கதையும், நடிப்பும் நீங்கலாக படம் பிடிப்பது, படம் காட்டுவது என சினிமாவின் அடிப்படையே தொழில்நுட்பந்தான் என்கிற வகையில் தொழில்நுட்பத்தின் தரத்தையும், கையாள்வதின் தரத்தையும் பொறுத்தே சினிமாவின் தொழில்நுட்பத் தரம் அமைகிறது. ஆனால் எந்தச் சினிமாவானாலும் தொழில்நுட்பம் சாராத திரைக்கதையும், நடிப்பும் எப்போதுமே விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட வேண்டியதே. எந்தக் கனடியத் தமிழ்ச் சினிமாவிற்கும் இது பொருந்தும். அந்தவகையில் ஒரு துப்பாக்கியும் ஒரு மோதிரமும் திரைப்படத்தின் நடிகர்கள் தெரிவும் நடிப்பும் பாராட்டும் வகையில் இருக்கின்றது. ஆனால் திரைக்கதை'? 'ஒரேபாலின விருப்புள்ள இளைஞனின் மரணத்தால் அவதியுறும் இளைஞன், அவனை தன்வழியில் கொண்டுவர முயலும் தந்தை, தன்னை சித்திரவதைக்குள்ளாக்கிய முன்னாள் இயக்கக்காரனைக் கொல்வதற்கு அலையும் பழைய போராளி, கொடியவனால் பாலுறவுக்குள்ளாகி மரணமாகும் சிறுமி, திருமணத்திற்காக கனடாவுக்கு அழைக்கப்பட்டு கைவிடப்படும் பெண், தற்கொலையுண்ட மகனை எண்ணி வருந்தும் பெற்றோர், திருமணம் செய்ய நிர்ப்பந்திக்கும் தாயை வெறுக்கும் இளம்பெண், கடமையை முன்னிலைப்படுத்துவதால் காதலை இழக்கும் இரகசியப் பொலீஸ் என எட்டுவகையான கதைக்களங்களை ஒரே திரைக் கதையாக ஆக்க மோதிரத்தையும் துப்பாக்கியையும் பொதுமைப் படுத்தியிருக்கிறார் லெனின். இதுவரை எந்த ஈழத்துத் திரைப்படமும் செய்திராத திரைக்கதை உத்தி என்பது உண்மைதான். இதற்காகவே பலரும் இவரைப் பாராட்டுகிறார்கள். ஈழத்துத் தமிழ்த்திரைப்பட வரலாற்றில் இது பெரும் பாச்சல் என பாராட்டில் நனைகிறார்கள். ஆனால் பாராட்டுபவர்கள் சில கேள்விகளைக் கேட்க மறந்துவிடுகிறார்கள். இந்தக் கதைக்களங்களுக்கு இத்தகைய உத்தி அவசியந்தானா? இந்த உத்தி சரியாகப் பயன்படுத்தப்பட்டதா? ஏன் இந்தக் கதைக் களங்கள் தெரிசெய்யப்பட்டன? பொதுவான அம்சங்கள் ஏதும் இக்கதைக் களங்களுக்கு இருக்கின்றனவா? இந்த உத்தி மூலமும் இக்கதைக் களங்கள் மூலமும் கதாசிரியரும், இயக்குனரும் பார்வையாளருக்குச் சொல்லவருவதென்ன?

திரைப்பட உத்தி மட்டும் ஒரு திரைக்கதையாகி விடுவதில்லை. திரைக்கதைக்குப் பலம் சேர்ப்பதுதான் திரைக்கதை உத்தி. இதற்கு மாறாக ஒரு துப்பாக்கியும் ஒரு மோதிரமும் திரைப்படத்திற்கான உத்தி திரைக்கதையைப் பலவீனமாக்கி விட்டது. இந்த உத்தி இதற்கு அவசியமானதுமல்ல. இதில் சம்மந்தப்படும் மோதிரமும், துப்பாக்கியும் பல இடங்களில் வலிந்து இணைக்கப்பட்டதாக தெரிகின்றது. சரியான உதாரணமாக இரும்பனைச் சுடுவதற்காக துப்பாக்கி தேடித் திரியும் முன்னாள் போராளிக்குத் துப்பாக்கி கிடைக்கும் இடம். இத்தகைய செருகல்களிலிருந்து திரைக்கதாசிரியர் லெனின் திரைக்கதை உத்தியைத் தெரிவுசெய்துவிட்டு அதற்கான கதைக் களங்களை ஒவ்வொன்றாகச் செருகி இருப்பது புலனாகிறது. முள்ளி வாய்க்கால் படுகொலை தொடர்பான சனல் 4 தொலைக் காட்சி விபரணத்தின் உந்துதலால்தான் இத்திரைக்கதையைத் தான் எழுதியதாக இயக்குனர்-திரைக்கதாசிரியர் லெனின் சொல்லிக்கொண்டார். இருந்தும் அந்த விபரணத்தின் தொடர்பாக திரைக்கதையில் ஏதும் இல்லை. ஆனாலும் அப்படி இருக்க வேண்டுமென்பது மில்லையே! அந்த விபரணம் அவருக்கு ஏதோ பொறியைத் தந்திருக்கலாம் என நம்புவோம். இத்தனை சம்பவங்களையும் எப்படிப் பார்வையாளர்களுக்கு அலுப்பு வராமல் சொல்வது எனச் சிந்தித்தபோது 'பாபிள்' போன்ற திரைப்படங்களிருந்து இந்த உத்தியைத் தெரிவு செய்ததாக லெனின் தெரிவித்திருந்தார். உத்தி மட்டும் சுவாரசியத்தைத் தந்திடாது. இறுக்கமான திரைக்கதை, இறுக்கமான படத்தொகுப்பு, நம்பகமான காட்சிக்கோர்வை, திருப்பங்கள், விறுவிறுப்பான படக்காட்சித் துண்டங்கள் என பலதும் இதற்குக் காரணமாகும். இத்திரைப்படத்தில் இடம்பெறும் காட்சித் துண்டங்கள் நீளமானவை. எதிர்வினைக் காட்சிப்படுத்தல்கள் இல்லை. கதா பாத்திரங்களின் உருவாக்கத்தில் போதிய விபரங்கள் இல்லை. தமிழ்ப் பெண்ணுக்கு சூடானியருடனான காதல் மலர்வதற்கான வலுவான காரணம் காட்டப்படவில்லை. நாலாம் மாடியில் தான் சித்திரவதை அனுபவித்ததைத் தந்தை மகனுக்குச் சொல்லும் இடம் பொருத்தமாயில்லாது, செருகிய உணர்வைத் தந்தது. சிறுமி எப்போதுமே பூங்காவில் தனியாக விளையாடுவதற்கான காரணம் இல்லை. அச்சமுண்டு அச்சமுண்டு திரைப்படத்தை ஒத்த கதைக் களத்தை இதில் தெரிவுசெய்தபோதும் அச்சிறுமியைக்

தொடர்ச்சி 35ஆம் பக்கம்

# அமைதிக்கான நோபல் பரிசு

அமைதிக்கான நோபல் பரிசை இவ்வருடம் பெற்ற இருவரில் ஒருவராக மலாலா யூசப்சாய் இருக்கிறார் என ஒக்ரோபர் 10ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. இவருடைய கதையை பலர் அறிவார்கள், என்றாலும் அவரைப் பற்றி நாமும் பார்ப்போம்.

2012 ஆம் ஆண்டில் இவருக்கு 15 வயதாக இருந்தபோது ஒக்ரோபர் 09ஆம் திகதி வழமை போல் பாகிஸ்தானில் அவர் பள்ளியிலிருந்து தனது வீட்டிற்கு பஸ்ஸில் செல்கையில் தீவிரவாதிகள் அவரது பஸ் ஐ நிறுத்தி அவரை சுட்டனர். அவர் பிரிட்டனில் சிகிச்சை பெற்று 2013 ஆம் ஆண்டு ஜனவரி 03 ஆம் திகிதியில் சுகமாகி வெளியேறினார். அதன் பின்னர் பிரிட்டனில் பள்ளிக்கூடத்திற்கு செல்ல தொடங்கினார்.

## ஏன் அவ்வாறு நடந்தது?

மலாலா சிறிய வயதிலிருந்து படிப்பில் ஆர்வம் கொண்டவர். இவருக்கு Pashto, ஆங்கிலம் மற்றும் உருது மொழிகள் தெரியும். அவர் தனது கல்வியை பள்ளியிலும், தன் தந்தையிடமும் கற்றார். சொந்த பள்ளிக்கூடம் நடத்தி வருபவரும் கவிஞருமான அவரது தந்தை மலாலாவின் கல்வி ஆசையை வளர்த்தார். 2008 இல் BBC பாகிஸ்தானில் உள்ள பெண்களின் படிப்பைப்பற்றியும், தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் நடைபெறும் சம்பவங்களைப்பற்றியும் எழுத நினைத்தபோது அவர்கள் மலாலாவை அணுகினர். கிட்டத்தட்ட ஒரு வருடமாக மலாலா வேறு ஒரு பெயரில் BBC யில் தீவிரவாதிகளின் கொடுமைகள் பற்றி எழுதினர். அதில் பாகிஸ்தானில் பெண்கள் பள்ளிக்கு செல்ல படும் கஷ்டங்களையும், தீவிரவாதிகளின் கொடுமைகளையும் பற்றியும் 12 வயதான


Malala with her father Ziauddin Yousafzai

அவர் எழுதினார். அவர் எழுதின வருடத்தில் தீவிரவாதிகள் எவ்வாறு பெண்கள் பள்ளிகளை மூடியது பற்றியும் பின்பு அதை திறந்தது பற்றியும் எழுதினார்.

மலாலா ஒரு மருத்துவராக வர விரும்பினர். ஆனால் அவர்கள் அகதிகளாக கிராமத்திற்கு அனுப்பப்படும் பொழுது அவரின் தந்தைக்கு தீவிரவாதிகள் கொலை பயமுறுத்தல் விடுத்தபோதுதான் அரசியல்வாதியாக தான் மாற விரும்பினார் என்றார் மலாலா. தான் தான் BBCக்கு எழுதியவர் என்று 2009 இல் மலாலா வெளிப்படையாக கூறிக்கொண்டு பெண்களின் படிப்பிற்கு ஆதரவாக போராட தொடங்கினார். அதன் பின்னர் அவரது போராட்டம் தொடர்ந்தது. புகழும் பரவியது. இதைக்கண்ட தீவிரவாதிகள் அவரை பயமுறுத்த தொடங்கினர். அது பலிக்காததால் தான் அவர்கள் 2012 இல் மலாலாவை சுட்டனர்.

ஆனால் அதுவும் பலனளிக்கவில்லை. மலாலா சுடப்பட்ட பின்னர் அவரது புகழ் உலகெங்கும் பரவியது. அவர் காப்பாற்றப்படுவாரா என தெரிய முன்னரே பலர் அவருக்காகவும் பெண்கள் உரிமைக்காகவும் போராடத் தொடங்கினர். உலகம் முழுவதிலும் பாகிஸ்தானிலும் இத்தாக்குதலை பலர் கண்டித்தனர்.

ஜுலை 12, 2013 இல் தனது 16 ஆவது வயது பிறந்தநாளில் மலாலா ஐக்கிய நாடுகள் சபையில் எல்லோருக்கும் பள்ளிக்கூடம் போகும் உரிமை வேண்டும் என்று பேசினார். அதில் அவர் தன்னைச்சுட்ட தீவிரவாதிகளின் பிள்ளைகளுக்கும் படிப்பு உரிமை கிடைக்க வேண்டும் என்றார். இப்போது நோபல் பரிசு பெற்ற அவர் "I am Malala" என்ற புத்தக்கத்தை எழுதி இருக்கிறார். இது விரைவில் தமிழ், உட்பட பல இந்திய மொழிகளில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



**ஞா. ஆரணி**
அகவை 16

**இளையோர் ஆக்கம்**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.



# Education

## Review Questions14 -20

### ➢ ADVANCED FUNCTIONS 12

Create a function of the form $f_{(x)} = \frac{P(x)}{q(x)}$, where both $P_{(x)}$ is a cubic function and $q_{(x)}$ is a quadratic function. The function $f_{(x)}$ to have a removable discontinuity at $x = +2$, a vertical asymptote at $x = -2$, and an oblique asymptote of $y = 2x + 1$. When $P_{(x)}$ is divided by $q_{(x)}$ $\left[\frac{P(x)}{q(x)}\right]$, the remainder is 1.

Sketch the graph of the function with all key features labelled.

### ➢ PHYSICS 12

A solid iron ball of mass 900 kg is used on a building site. The ball is suspended by a rope from a crane. The distance from the point of suspension to the centre of mass of the ball is 15 m.

(a) Calculate the tension in the rope when the ball hangs vertical and stationary.

(b) The ball is pulled back 20° from the vertical and then released.

(i) Calculate the speed of the ball just before impact.

(ii) Calculate the tension in the rope just before impact

(c) If the ball is brought to rest in 0.2 s., determine the maximum force $F_{max}$ exerted by the ball on the wall.

### CHEMISTRY 12

(i) Explain the differences in boiling points of ethene and hydrazine in terms of the intermolecular forces in each compound

(a) (ii) Balance each of the following redox reactions using half-reaction method (acidic solutions)

(b) $SO_3^{2-} + MnO_4^{-} \rightarrow Mn^{2+} + SO_4^{2-}$

(c) $HN_{O3} + HCl + N_{H4}Cl \rightarrow {}_{N2}O + Cl_2 + HClO_4 + H_2O$

## Answer Key : 14-19

### CHEMISTRY 12

(i) $NO_3^-$ trigonal (ii) $NO_2^-$ bent

(iii) $SO_4^{2-}$ tetrahedral

iv) $CO_3^{2-}$ trigonal (v) $I_3^-$ linear

(vi) $CH_3^+$ trigonal

(B) The emission spectrum of atomic hydrogen is divided into a number of spectral lines. These lines are due to electrons moving between energy levels in the atom. Transition of electron in hydrogen between quantized energy levels with different quantum numbers yields a photon by emission with quantum energy

(C) Third ionization energy magnesium > 3rd ionization energy of Fluorine. Reason – removal of an electron from an octet (3rd) is harder.

### ➢ ADVANCED FUNCTIONS 12

(i) V.A= 5/4 ; HA= 0

(ii)



### ➢ BIOLOGY 12

(i)In the α- helix and β- pleated sheet hydrogen bonds form between carbonyl and amide groups of residues. In the α- helix, H bonds are intra chain, and parallel to the helix axis. In β- pleated sheet H bonds are inter-chain and are nearly perpendicular to the chain axis.

(ii) mRNA

Ans. key 14-20 - next issue
☎ 647 341 3975
K.A.Srikrishnaraj PhD
ask@ keentutoringcentre.com
KEEN TUTORING CENTRE

# நீரிழிவு நோய் மிகவும் தீவிரமடைகிறது!

எவரிடம் பேச்சுக் கொடுத்தாலும் தங்களுக்கு நீரிழிவு இருப்பதாகவோ அல்லது நீரிழிவு வரப்போகிறநிலை (Prediabetes) உள்ளதாகவோ கூறுவதினை அறிய முடிகிறது. உலகிலுள்ள பெரும்பாலான மக்களுக்கு தீவிரமாக இந்நோய் ஏற்படுவதுண்டு. உலக சுகாதார நிறுவனம் (WHO) பல எச்சரிக்கைகளையும் விடுத்துள்ளது. கனடாவில் 9 மில்லியன் மக்கள் நீரிழிவுடன் அல்லது வரப்போகும் நீரிழிவுடன் ஆபத்துடன் வாழ்கின்றனர். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணித்தியாலத்திலும் 20 பேர் நீரிழிவு நோய் உள்ளவர்களாக மாறுகின்றனர். எமக்கு தெரிந்த உறவினர், நண்பர், அயலவர், எம்முடன் வேலை செய்பவர் அல்லது சமூகத்தில் ஒருவர் இதனால் பாதிக்கபட்டிருப்பதனை அறிய முடிகிறது. கனடாவில் 1995-2005 ஆண்டுகளுக்கிடையில் 68 வீதமாக இந்நோய் அதிகரித்துள்ளது. நீரிழிவு 2 என்ற வகையினரே பெருமளவாக உள்ளனர். ஒவ்வொருவருடைய அனுபவங்களும் வேறுபாடானவை.

மிகவும் கடுமையான நீரிழிவுடன் போராடுபவர்கள் தமது உயிருக்கு அஞ்சியே வாழ்கின்றனர். இரத்தத்தில் குளுக்கோஸ் (Glucose) மட்டம் அதிகரிப்பதனால் உடலுறுப்புக்கள், இரத்த நாடிகள், நரம்புகள் என்பன பாதிப்புற்று பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இந்நோய் பல நோய்களின் காரணியாகவும் விளங்கமுடியும். எமது வலுவுக்குரிய சீனியின் அளவு அதிகரித்தால் அதுவே பிரச்சினையாகிறது. உடலின் கணைய சுரப்பியினால் (Pancreatic B cell) சுரக்கப்படும் ஹோர்மோன் இன்சுலின் ஆகும். இது உடலின் உயிர்க்கலங்களுக்கு



தேவையான இரத்தத்திலுள்ள குளுக்கோஸ் அவ் உயிர்கலங்களுக்குள் உட்செலுத்தப் படுவதற்கு உதவி செய்கிறது. இன்சுலின் தொழிற்பாடு குறைவதனாலேயோ அல்லது கணைய சுரப்பியினால் குறைவாக சுரக்கப்படுவதினாலேயோ அல்லது வேறும் காரணங்களினாலேயோ இரத்தத்திலுள்ள குளுக்கோசின் அளவு கூடி இறுதியில் சிறுநீருடன் வெளிச்செல்வதே நீரிழிவாகும். இதனை சலரோகம், பிரமேகம், சர்க்கரை நோய், மதுமேகம் என்றெல்லாம் எழுதி வருகின்றனர். உண்மையில் நீரிழிவு என்பதே பொருத்தமானதாகும். இதில் 3 வகை உள. ஒன்று இன்சுலினில் தங்கியுள்ள நீரிழிவு (Type 1 Diabetes) மற்றையது இன்சுலினில் தங்கியிராத நீரிழிவு (Type 2 Diabetes). கர்ப்பிணித் தாய்மாருக்கு ஏற்படும் நீரிழிவு Type 3. இவற்றில் அதிகம் பாதிக்கப் படுவோர் இரண்டாவது வகையினராவர். பொதுவாக 35 வயதுக்கு மேற்பட்டவர்களையே இந்நோய் பாதிக்கிறது. இந்தவகையான நோயாளிகளின் இன்சுலின் சுரப்பு குறைவடைவதாலும் அல்லது சுரக்கப்பட்ட இன்சுலின் பூரணமாக செயற்பட முடியாமற் போவதாலும் ஏற்படுகிறது. இவர்கள் நீரிழிவு மாத்திரைகளையோ அல்லது இன்சுலின் ஊசிகளையோ பாவிக்க நேரிடுகிறது. பொதுவாக Metformin என்ற குளிசைகளையே கனடாவில் பாவிக்கின்றனர்.

பரம்பரை, மாறுபட்ட உணவு பழக்கங்கள், உடற்பருமன் (Obesity), போசாக்கின்மை, மனஅழுத்தம், சோம்பல், களைப்பு, புகைபிடித்தல், மதுபானம் அருந்துதல், இரத்த அழுத்தம், இருதய நோய்களின் தாக்கம், சிலவகை பக்றீரியாவினால் ஏற்படும் நோய்களின் தாக்கம், உடலில் ஏற்படும் சில கட்டிகள், ஹோர்மோன் சம்பந்தமான நோய்கள் என்பவற்றினால் நீரிழிவு ஏற்படுகிறது.

இந்நோயாளிகள் அடிக்கடி சிறுநீர் கழிப்பர். அதிக பசி, தாகம், களைப்புடன் காணப்படுவர். அதிக கோபமடைவர். இவர்களுக்கு கண்பார்வை சற்று குறையும். இனிப்பில் விருப்பு ஏற்படும். உடற்புண்கள் ஆற நாட்செல்லும். பங்கஸ் போன்ற தோல் நோய்கள் ஏற்படும். திடீர் உடல் நிறை குறைவு அல்லது திடீர் உடல் எடை அதிகரிப்பு ஏற்படும். கை, கால் விறைப்பு ஏற்படும்.

நீரிழிவினால் ஏற்படும் நோய்கள் பலவாகும். கண்பார்வைக் குறைவு, உயர் இரத்த அழுத்தம், மாரடைப்பு, பாரிசவாதம், புற்று நோய், சிறுநீரக செயலிழப்பு, மலட்டுத் தன்மை, ஆண் உறுப்பில் வீரியமின்மை, காயம் ஆறாத நிலையில் அந்த உறுப்புக்களை அகற்ற நேருதல் போன்றவை ஏற்படலாம். உடலின் அனைத்து கலங்களையும், அங்கங்களையும் இந்நோய் பாதித்தாலும் வெளியே தெரிபவை மேற்கூறிய நோய்களே ஆகும்.

டாக்டர் Jan Hux (Chief seience officer for the Canadian diabetes association) நீரிழிவு நோய்க்கான 4 காரணிகளை முன்வைத்துள்ளார். முதலாவது நீண்ட கால வாழ்வு பற்றியது. எமது வாழ்வுக்காலம்

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

# மோதிரமும்...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

கடத்தும் பாதகன் அங்கு வருவதற்கான காரணமோ சூழ்நிலை அமைப்போ இத்திரைக்கதையில் இல்லை. சிறுமியைத் தகப்பனுடன் கனடாவுக்கு அனுப்பிவிட்டு தாய் இலங்கையில் தங்கிவிடுவதற்கு சொல்லும் காரணம் நம்பகமானதாயும் அழுத்தமானதாயும் இல்லை. இப்படிப் பல. இவற்றுக்கான காரணம் நேரம் எனச் சொல்லப்படலாம். ஆனால் இவ்விடத்தில் எழும் கேள்வி, இத்திரைப்படத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட கதைக்களங்கள் எல்லா வற்றுக்குமான பொதுமையம் எதுவும் இல்லை. இத்திரைக்கதை மோதிரம், துப்பாக்கி என இரு புள்ளிகளை நோக்கி வேறாக நகர்கிறது. இரண்டுக்கும் இணைப் பில்லை. இலங்கைப்பெண் சூடன்காரர் சம்பவம், கனடிய இரகசியப் பொலீஸ் சம்பவம் இரண்டும் மோதிரத்தை நோக்கியும், ஒருபாலின இளைஞன், இரும்பனைத் கொல்லத் துடிக்கும் இளைஞன், சிறுமியைப் பாலுறவுக்குள்ளாக்கும் ஆசாமி ஆகிய சம்பவங்கள் மூன்றும் துப்பாக்கியை நோக்கியும் நகர்கின்றது. இடையில் வரும் சம்பவமான தாயால் திருமணத்திற்கு வற்புறுத்தப்படும் பெண்ணின் சம்பவம் மோதிரத்திற்கோ, துப்பாக்கிக்கோ சம்மந்தமில்லாததது. இந்தச் சம்பவத்தை திரைக்கதையில் இருந்து எடுத்துவிட்டால் திரைக்கதைக்கு எந்தப் பாதிப்பும் வரப்போவதில்லை. நேரத்தை மீதப்படுத்திப் பல குறைகளையும் நிவர்த்தித்திருக்கலாமே! தற்கொலையானவர் தன் மரணத்துக்கு எவரும் பொறுப்பில்லை என எழுதிய துண்டு இருந்ததைச் சொல்லியிருந்தால், பொலீஸ் துப்புத்துலக்கவில்லையா, பெற்றோர் தன் மகனின் மரணத்தில் சந்தேகமிருக்கிறது என சொல்லியிருந்தால் என்ன என்ற பார்வையாளரின் கேள்விகளைத் தவிர்த்திருக்கலாம். விடுதலைப் புலிகள் பற்றிய வசனத்தை தவிர்த்திருந்தால், தனது படப்பிடிப்புக் குழுவினர் 100 பேரில் பெரும் பான்மையவர்கள் மாவீரர் குடும்பத்தினர் என்பதால்தான் விடுதலைப் புலிகளை மேன்மைப்படுத்தினார் என இயக்குனர் சொல்லவேண்டியும் வந்திருக்காது, அவரது நாணயமும் காப்பாற்றப்பட்டிருக்கும்.

திரைக்கதையிலுள்ள இன்னொரு பலவீனம் சம்பவங்களின் இணைப்பு. கலந்துரை யாடலில் பங்குபற்றிய தாயகம் மூர்த்தி உட்பட இன்னும் சிலரும் தெரிவித்ததுபோல் ஒரு கதாபாத்திரத்தை பார்வையாளர் உள்வாங்குவதற்குள் சட்டென அடுத்த சம்பவத்திற்கு திரைக்கதை மாறிவிடுவது பெரும் இடைஞ்சலாக இருந்திருக்கிறது. தொழில்நுட்ப படத்தொகுப்பாளரல்லாது, கதை சொல்லத் தெரிந்த படத் தொகுப்பாளரைப் பயன்படுத்தியிருக்கலாம் என மூர்த்தி சொன்னதும் இங்கு பொருத்தமாகிறது. மகனின் பேர்சிலிருந்து ஒரு இளைஞனின் படத்தைக் கண்டுவிட்டு மகனை இழந்த தாய் உடனேயே அவனது வீட்டுக்கு ஓடிவரும் காட்சியைப் பார்த்தவுடன் தாய்க்கு மகன் ஒரு ஓரினச் சேர்க்கையாளன் எனத் தெரிந்துவிட்டது என நான் நினைத்ததுடன் அது ஓரினச் செயற்கையா- ளர் பற்றிய விடயம் என அக்காட்சியால் என் மனது உறுதிப்படுத்தியதாகச் சொல்ல, மறுத்து புகைப்படத்தைப் பார்த்ததும் மகனின் செத்தவீட்டுக்கு மகனின் நண்பன் ஏன் வரவில்லை என்பது ஞாபகத்திற்கு வந்ததால் அதைக்கேட்கவே தாய் ஓடினார் எனவும், சூடான் நாட்டவருடன் இளம் பெண்ணை சேர்த்திருக்காது வேறேதும்



திருப்பமான முடிவை வைத்திருக்கலாமே எனச் சுமதி ரூபன் கேட்டதற்கு ஈழத்துப் போராட்டத்தால் பாதிக்கப்பட்ட அபலை யினதும் இன்னொரு தேசத்தில் அதேபோன்ற போராட்டத்தால் பாதிக்கப்பட்டவரதும் மனதுகள் இணைவது பொருத்தமாக இருக்கும் என நினைத்தே இவ்வாறு அமைக்கப்பட்டது எனவும் திரைக்கதாசிரியர் சொன்னது இந்தத் திரைக்கதை எவ்வளவு மலினமானது என்பதற்கு எடுத்துக்காட்டு. திரைக்கதையெனில் திரைக்கதாசிரியர் என்ன நினைத்துப் படமெடுக்கிறாரோ அவ்வாறு பார்வையாளர் புரிந்துகொள்வதுதான் தரமான திரைக்கதை. அதைவிட்டு நான் இப்படி நினைத்து எடுத்தேன் என ஒவ்வொன்றுக்கும் பொழிப்புரை சொல்வதெனில் திரைக் கதையின் பலவீனமே இது. கனடிய நடைமுறையில் ஒரு பெண்ணையும் வேற்று ஆணையும் ஒரே காப்பகத்தில் இணைத்து வைத்திருப்பார்கள் என்பது கனடிய சட்ட, ஒழுங்கு அணுகுமுறையை உலக அரங்கில் கேள்விக்குரியதாக்குகிறது. இறுதிக் காட்சியில் எப்போதோ எவரோ ஓடும் நீரோடையில் எறிந்த மோதிரத்தை சூடான் நாட்டவர் சட்டென ஓடிச்சென்று எடுத்து தமிழ்ப் பெண்ணுக்கு அணிவது அம்புலிமாமாக் கதைக்கொப்பானதாய் இருக்கிறதே எனக் கேட்டதற்கு அந்த முடிவு ஒருவகையில் மயாயாலத்துடன் இருக்கட்டும் என்பதற்காக அமைக்கப்பட்டது என லெனின் சொன்னபோது நான் மட்டுமல்ல அங்கிருந்த பலரும் அதிர்ச்சிக்குள்ளானோம். சீரியதொரு சினிமா என நினைத்து இவ்வளவுக்கு மினக்கெட்டு கலந்துரையாடல் வரை நேரத்தைச் செலவழித்ததற்கு இதுவும் வேணும் என்பதாகப் போய்விட்டது. அப்போது மூர்த்தி எழுந்து மாயாயாலமாகச் சிந்தித்திருப்பதாக இயக்குனர் சொல்கின்றபோது இனி என்ன கேள்வியைத் தான் நாம் கேட்பது எனச் சொன்னது அங்கிருந்த பலரதும் மனதிலும் இருந்த ஆதங்கமாய்தான் இருந்திருக்கும்.

இத்திரைப்படம் பற்றிய எனது ஆதங்கத்தை இற்றைக்கு ஒரு வருடத்தின் முன்னர் யோக் சினிமாவில் முதன்மைக் (பிறிமியர்) காட்சிப்படுத்தலில் இத்திரைப்படத்தை நான் பார்த்தவுடனேயே எனது இத்தகைய ஆதங்கத்தை தயாரிப்பாளர்கள் தரப்பிற்கும் திரைக்கதை உருவாக்கத்தில் பங்கு பற்றியிருந்த கிறிஷ்ரியிடத்தும் இன்னும் பலருக்கும் தெரிவித்திருந்தேன். எனது விமர்சனத்தைத் தள்ளிப் போடுமாறு தயாரிப்பாளர் தரப்பிலிருந்து கேட்டுக் கொண்டதால் இது வரை பொறுத்திருந்து அவர்களே ஒழுங்கு செய்திருந்த கலந்துரையாடலின் பின் இதனை எழுதுகின்றேன். இந்த விமர்சனம் கொஞ்சம் காரமானதாய்த்தானிருக்கும். ஆனாலும் இதுவரை பலராலும் வெளியிடப்பட்டிருந்த புழுகுகளுக்கெல்லாம் ஈடான மறுப்பாக இருந்தால் அது இனிவரவுள்ள ஈழத்துத் திரைப்படப் படைப்பாளிகளதும், திரைப்படம் தொடர்பான ஆர்வலர்களதும் மனக் கண்ணைத் திறந்துவைக்கும் என்று நம்பிக்கொள்கிறேன்.

• • •

'ஒரு துப்பாக்கியும் ஒரு மோதிரமும்' திரைப்படத்தை பற்றிய பல ஆக்கங்கள் இதற்கு முன்னர் 'விளம்பரம்' பத்திரிகை வெளியிட்டிருந்தது. அனேகமானவை எல்லாம் இப்படம் பற்றிய நல்ல விமர்சனங்களாக இருந்தன. அருண் எழுதிய இவ்விமர்சனம் விளம்பரக்குழுவின் நீண்ட கவனத்திற்கு பின்பு வெளியிடப்படு கின்றது. எனினும் அருண் எழுதிய இவ்விமர்சனத்தின் முழுப்பகுதியும் எமது குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று கூறுவதற்கில்லை. பாரதிராஜா, பாலச்சந்தர், பாலு மகேந்திரா, மணிரத்தினம் போன்ற பல முன்னோடிகளும் தமது கதாபாத்திர அமைப்பில் சில அல்லது பல கதாபாத்திரங்கள் எமது சமூகத்தின் மிகக்குறைவாக நடக்கும் சம்பவங்களின் பிரதிபலிப்பாக எடுத்துக் கொள்வார்கள். இதற்காக இதுதான் எமது சமுதாயம் என யாராவது எடுத்துக்கெ காண்டால் அது எமது தவறல்ல. அதற்கு அவர்களும் பொறுப்பல்ல. ஒரு பேட்டியில் பாலச்சந்தர் கூறியிருந்தார், சில முடிவு களை பார்வையாளர்கள் எடுக்கட்டுமே எனத்தான் விட்டுவிடுவதாக.

மேலும் நல்ல விடயங்களை எங்கிருந்தா லும் எடுத்து பாவிப்பது தவறு என்பதல்ல. காலம்சென்ற ஸ்ரீவ் ஜொப்ஸ் (Steve Jobs) சில நல்ல ஐடியாக்களை தான் மற்றவர்களிடமிருந்து கொப்பி பண்ணியதாக கூறியிருந்தார்.

இப்படம் இதுவரை கனடாவில் இருந்து வெளிவந்த தமிழ்படங்களிலிருந்து முற்றி லும் மாறுபட்டது என்பதனை நாம் மறுப்பதற்கல்ல. படம் மிகவும் மெதுவாக இயங்குகின்றது என்பது உண்மை. ஆனாலும் ஆங்கிலமொழிப்படமோ அல்லது தமிழ்ப்படமோ என்று கூறமுடியாதவாறு படத்தை கொண்டு வந்திருப்பது ஒரு சிறந்த வெளிப்பாடு. திரைப்படங்களைத் தயாரிப்ப வர்களுக்கு, ஆக்கங்களை கொடுப்பவர் களுக்கு என்று ஒரு சமுதாயக்கடமை இருப்பது என்பது உண்மை. இதற்காக எல்லா விடயங்களையும் வெளிப்படுத்தாமல் விடுவதும் சரியா? என்றொரு கேள்வியும் எழுவது தவிர்ப்பதற்கில்லை.

அண்மையில் விஜே ரிவி இல் அமீர்கானின் ஓரினச்சேர்க்கை பற்றிய பார்வை உண்மை தானே? யாராவது வெளிக்கொண்டு வரத்தான் வேண்டும். நியாயமான தர்க்கங்கள் முன்வைப்பது ஒவ்வொருவரின தும் உரிமை என்பதனை மனதில் கொண்டு அருணின் விமர்சனம் எதுவித திருத்தங்களும் இல்லாமல் அவ்வாறே வெளியிடப்படுகிறது.

- விளம்பரக்குழு


**SPACE AVAIL. FOR PROFESSIONAL OFFICES**

1000 - 1800 Sq.ft available for professional offices in GTA Square mall - ***Middlefield & Finch.*** Dedicated underground parking & locker included.

***Pl. call: 416.315.9397***

**LAW OFFICE**

**STEFANO FORTINI**

B.A., LL.B., Barrister & Solicitor

*3 Catherine Avenue,*
*Aurora, Ontario*
*L4G 1K4*

*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*

# நீரிழிவு...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

தற்போது அதிகரிப்பதால் அதற்கிடையில் எப்படியும் இந்நோய் வந்து விடுகிறது எனவும், இரண்டாவது வகை நீரிழிவு பரம்பரை அலகுகளுடன் சம்பந்தப்பட்டதென வும் எமது வாழ்க்கை முறையில் உடல் பருமன் ஏற்பட்டோர் அதிகமெனவும், வறுமை காரணமாக சத்துக்குறைந்த உணவுகளை உண்பவர்கள் உள்ளாரென வும் கூறியதுடன் தெற்கு ஆசிய மக்கள், பழங்குடியினர், ஆபிரிக்க - அமெரிக்கர்கள் போன்றவர்களிடையே இந்நோய் அதிகமெனவும் கூறியுள்ளார்.

நீரிழிவு உள்ளதென்பதனை அறிய பல வழிகள் உள. இரவு முழுவதும் எதனையும் உண்ணாது காலையில் அளவீடு செய்தல். இது fasting blood sugar எனப்படும். அது 7mmoL/L அளவுக்கு மேல் இருந்தால் நீரிழிவு உள்ளதாக அறிய முடியும். கண்ட நேரங்களில் அளவீடு செய்து 11.01mmoL க்கு மேலாக இருந்தால் நீரிழிவு ஏற்படுகிறது. அத்துடன் இரத்தத்திலுள்ள ஹீமோகுளோபினுடன் ஒட்டியுள்ள குளுக்கோசினை அளவீடு செய்வதாகும். இதனை HbAIC என்பர். இதற்கு ஏற்ப மருந்தும் உணவுக்கட்டுப்பாடும் விதிக்கப் படும். இதனை 'Assessing over all diabetic control' எனலாம். அத்துடன் சிறுநீரிலுள்ள அல்புமின், கிறியற்றினைன் (albumin/ creatinine) விகிதாசாரத்தை அறிதல். இதனை ACR எனலாம். இதனால் சிறுநீரகத்தின் செயற்பாட்டினை அளக்கலாம். மூன்றில் இரண்டு பங்கு சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்ட பின்னரே இரத்தத்திலுள்ள கிறியேற்றின் கூடுகிறது. இப்பரிசோதனையின் முடிவில் ஆண் 2.5 mg, பெண் 3.5mg என்ற அளவுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

நீரிழிவுன் முடிவு (The end of diabetes) என்ற நூலை Joel Fuhrman, MD அவர்கள் எழுதியுள்ளார். இவர் 20 வருடங்களாக ஆய்வு செய்து வெளியிட்ட சில முறை களால் பல நோயாளிகள் மகிழ்ச்சி, நீண்ட ஆயுள், மன நிம்மதியுடன் வாழ்கின்றனர். இவரது கோட்பாடு your health future (H) = Nutrients (N) / Caloriess (C) என்பதாகும். இந்த சிறிய முறையால் நல்ல உணவு, நல்ல வேலை, நீண்டவாழ்வு, சிறந்த உணர்வு, நோயற்ற வாழ்வு ஏற்படும் என்கின்றார்.

கனடாவில் உள்ள புள்ளி விபரப்படி 3.3 மில்லியன் மக்கள் நீரிழிவுடனும் 5.7 மில்லியன் மக்கள் நீரிழிவு ஏற்படக்கூடிய நிலையிலும் உள்ளனர். இவர்களுக்கான அரசாங்க செலவு 13.5 பில்லியன் ஆகும். 2024 ஆம் ஆண்டு இது 17 பில்லியன் செலவுக்கு வரும். செலவினங்கள் கடந்த காலங்களில் குறிப்பாக 2000 ஆம் ஆண்டு 1 மில்லியன், 2010இல் 2.7 மில்லியன், 2014 இல் 3.3 மில்லியனாகவிருந்து 2024 4.8 மில்லியனாக அதிகரிக்கும். அதாவது 4.2 வீதத்திலிருந்து 11.8 வீதமாக மாறியுள்ளது. உலக அளவில் 300 மில்லியன் மக்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் மட்டும் 40 மிலலியன் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.



டாக்டர் Joel Fuhrman நீரிழிவு ஏற்பட்டாலும் அதனை குறைப்பதற்கு சில நல்ல ஆலோசனைகளை வழங்கியுள்ளார். முதலில் சிறந்த மரக்கறிகளையும், பழவகை களையும் சமையலறையில் வைத்திருக்க வேண்டும். தவிட்டு அரசி, முழு கோதுமை மா, பார்லி, சோளம், cauli flowr, blackbeans, beets, mushrooms, தக்காளிப்பழம், பீன்ஸ், சிவப்பு வெங்காயம், பெரிப்பழங்கள், மீன்வகைகள், முட்டை, கீரைவகை, collards, almonds, kidneybeans, chickpeas, soya, romain lettuce போன்ற நல்ல சத்துள்ள உணவு வகைகளே அவை. எப்படி உணவு உண்டாலும் குறைவான சீனிச் சத்துள்ள உணவே நல்லது. சிவப்பு திராட்சைப்பழம், கறுப்பு பெரிப்பழம், சிவப்பு செரிப்பழம், பச்சை அப்பிள், plums பழ வகைகளில் சிறந்தது. மாறிமாறி இவ்வுணவு களை உட்கொள்ளல் நன்று. சிலர் வெந்தயப்பவுடர், பாகற்காய் சாறு என்பவற்றினை பயன்படுத்துகின்றனர்.

இரண்டாவது நடவடிக்கை நல்ல உடற்பயிற்சி செய்வதாகும். விரைவான நடை (walk briskly), நல்ல இசையை போட்டு அதற்கேற்ப நடனம் செய்தல், கதிரையிலிருந்து 50-100 தடவை இருந்து எழுதல், படிகளில் ஏறி இறங்குதல், விரல்களில் நின்று பார்த்தல் போன்ற பயிற்சிகளை செய்வதால் மேலதிக கலோரி குறைகிறது. இரத்தத்திலுள்ள சீனி அளவு குறைகிறது. சிலர் சைக்கிள் ஓடுதல், நீச்சல் பயிற்சியும் செய்வர். நல்லதொரு பயிற்சி குழுவில் சேர்வது சிறப்பானது. ஒவ்வொரு நாளிலும் வேறு வேறு பயிற்சிகளை வைத்துக்கொள்ளலாம். உடற்பயிற்சியே மிகவும் முக்கியமாகும்.

மூன்றாவது முறை இரத்தத்திலுள்ள குழுக் கோஸ் அளவினை சரி செய்தல். எமது சமிபாட்டு செயல்களால் சத்துக்களையும், குழுக்கோசினையும் உடல் பெற்றுக் கொள்கிறது. குழுக்கோசினை உடற் கலங்கள் சக்தியாக மாற்றுகின்றன. எனவே தேவையான அளவு குழுக்கோஸ் எந்த வேளையிலும் இருக்க வேண்டும். இந்த அளவு குறைந்தாலும் / கூடினாலும் பிரச்சினையாகிறது. 3 மாதங்களுக்கு ஒரு தடவை இரத்தப் பரிசோதனை அவசியம். இதனை ALC என்பர். இதில் குழுக்கோஸ் மிக கூடுதலாயின் அதனை Hyperglycemia எனலாம். குறைந்தால் Hypoglycemia எனலாம். குழுக்கோஸ் என்பது வாகனத்திலுள்ள பெற்றோல் போன்றது. இந்த பெற்றோல் சக்தியாக மாறும் போதே வாகனம் நகர்கின்றது. வெறும் எரிபொருள் மட்டுமிருந்தால் வாகனம் நகராது. அதனை இயக்க ஒரு திறப்பு வேண்டும். எரிபொருள் வலு (Energy) வாகனத்தில் உள்ள திறப்பு போன்றதே இன்சுலின் (Insulin) ஆகும். இதுவே உடற்கலங்களுக்கு குளுக்கோ சினை கொடுத்து வலுவினை ஏற்படுத்து கிறது. இந்த இன்சுலின் உடலின் எல்லா இயக்கங்களுக்கும் தேவை. இல்லாது விடில் நாம் இறக்கவும் நேரும். உடலில் உள்ள சகல உறுப்புக்களையும் பழுதடைய வைப்பது நீரிழிவேயாகும். உயிர்சத்துக்கள் 13, மூலப்பொருட்கள் (Elements) 8 என்பதனை வைத்தியர் கூறி விளக்குவர்.

1923 இல் பிரடரிக் பான்ரிங், (Frederick Banting) ஆகிய கனடியரே இன்சுலினை கண்டுபிடித்தார். உலகிலுள்ள கோடிக் கணக்கானோர் உயிர் வாழ்வதற்கு இவர்களது கண்டுபிடிப்பே காரணமாகும். கனடாவில் 8 வயோதிபர்களில் ஒருவருக்கு நீரிழிவு வர வாய்ப்பு உள்ளதெனவும் தென்னாசிய மக்களுக்கு மூன்று மடங்கு அதிகம் வர வாய்ப்புண்டு எனவும் கருதப்படுகிறது. இது ஒரு சிக்கலான நோய் என ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தின் துணைப்பேராசிரியாரான டாக்டர் ரெட்ணாகரன் கூறியுள்ளார். இந்தியாவில் மட்டும் 40 மில்லியன் நோயாளிகள் உள்ளதாகவும், பரம்பரையே இதில் செல்வாக்கு செலுத்துவதாகவும் கூறியுள்ள அவர் (Sweat news for diabetics) என்ற கட்டுரையில் தான் செய்துவரும் ஆய்வு பற்றி குறிப்பிட்டுள்ளார். மவுன்ட் சினாய் வைத்தியசாலையில் பல நோயாளிகளுக்கு 3 வாரத்திற்கு 1 தடவை மட்டுமே இன்சுலினை ஏற்றி வெற்றி கண்டுள்ளார். இதனை eset it (remission studies evaluating type 22 diabetics under mittens insulin therapy) என கூறியுள்ளாார்.

அமெரிக்காவின் FDA (Food and Drug Administration) ஒரு புதிய முறையை அறிமுகம் செய்துள்ளது. இதன்படி வாயில் வைத்து உறிஞ்சும் inhaler என்ற உபகரணத்தை பாவித்து அதனுள் Afrezza என்ற பவுடரை போட்டு உணவுக்கு முன்போ அல்லது உணவு உண்ட பின்போ உறிஞ்சினால் அது உடனடியாக நுரையீரலுக்கும் கணையத்துக்கும் சென்று இன்சுலினை கணக்காய் சுரக்க செய்யும் என்று கூறியுள்ளது. இதனை Inhaled Insulin Therapy என அழைப்பர். இன்சுலினுக்கு நிகரான பவுடர் மிகவிரைவில் பாவனைக்கு வரவுள்ளது. நீரிழிவு வகை 2 உள்ளவர்களுக்கு Islettranplant மூலம் இன்சுலின் சுரக்கப்பண்ணவும் நீரிழிவு வகை 1 உள்ளவர்களுக்காக செயற்கை கணையத் தினை (Artificial Pancreas) பொருத்தி இன்சுலின் சுரக்க செய்யவும் முறையே அல்பேட்டா பல்கலைக்கழககத்திலும் இங்கிலாந்து லீசெஸ்ரர் ( Leicester) பல்கலைக்கழத்திலும் ஆய்வு செய்யப் பட்டுள்ளன. கனடிய நீரிழிவு நிறுவனம் (CDA) நீரிழிவுக்காக ஒரு பட்டயம் (Charter) தயாரித்து வெளியிட்டுள்ளது. அதில் நீரிழிவு உள்ளவர்களது கடமை, பொறுப்பு, உரிமை, பராமரிப்போர் பொறுப்புகள் பற்றி கூறப்பட்டுள்ளன. நீரிழிவு காப்புத் திட்டம் - Diabetes Prevention Program (DPP) மூலம் பல வேலைத் திட்டங்கள் உள்ளன. நாய் பூனை என்பனவற்றிற்கும் இந்நோய்வருவதாக அறியப்பட்டுள்ளது. கனடாவில் மட்டும் 21,000 மருத்துவ உதவியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களது கோரிக்கை உடற்பருமன் குறியீடு Body Mars Index (BMI) நல்ல சத்துள்ள உணவு, உடற்பயிற்சியை கூட்டல், இரத்தத்தில் சீனி சத்தினை குறைத்தல் என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என்பதாகும்.

உலக மதிப்பீட்டில் 2013 இல் 382 மில்லியன் மக்கள் நீரிழிவுடன் உள்ளனர். ஆண்கள் பெண்களை சமமாக பாதிக்கும் இந்நோய் வயோதிபர்களில் 8.3 வீதத்தினரை பாதித்துள்ளது. உலகில் மனித இறப்புக் களில் இந்நோய் எட்டாம் இடத்தில் உள்ளது. உலக ரீதியில் 548 பில்லியன் டொலர் வருடாவருடம் செலவு செய்யப்படுகின்றது.

உலகில் நீரிழிவை கட்டுப்படுத்துவதில் முன்னணி நாடாக கனடா உள்ளது. நீரிழிவு பற்றிய ஆராய்ச்சி நிர்வாக திறமை வருமுன்னரே நீரிழிவு நோயை தடுப்பதில் திறமை என்பனவற்றிலும் முன்னணியில் உள்ளது. நீரிழிவு வகை 1ஐ விட வகை இரண்டினை சுலபமாக கட்டுப்படுத்த முடியும். இந்நோய் திடீரென மரணத்தை ஏற்படுத்தாது என்றும் கொல்லாமல் கொல்லும் நோயாக இது உள்ளது. எதிர்கால ஆய்வுகள் புதிய வழிகளை கண்டுபிடிக்கும் என்ற நம்பிக்கையில் இந்நோயாளிகள் வாழ்ந்து வருகின்றனர்.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

# ....பிடித்தவர்கள்

25ஆம் பக்கத்தொடர்ச்சி

என்ற வித்தியாதரன் குரலைக் கொஞ்சம் உயர்த்தி 'இன்னொண்டு, இது ஒண்டும் புதிய முறை இல்லை. முந்தின காலத்திலை இந்த கிப்னரைஸ் முறையை எங்கடை ஆக்களும் பாவிச்சு இருக்கினம். ஆனால் அது கிப்னரைஸ் முறை எண்டு தெரியாது. பேய் துரத்திக் குணப்படுத்திறது சொல்லிறதெல்லாம் இதுதான். நான் சொன்னேனே, அந்த இரண்டாவது முறை அதுதான். ஆனால் என்ன கிப்னரைஸ்தான் அது எண்டு எங்கடை ஆக்களுக்குத் தெரியிறேலை. முந்தின காலங்களிலை ஒப்பரேசனுகளுக்கும் இந்த கிப்னரைஸ் முறையைத்தான் பாவிச்சவையாம். அதுகளெல்லாம் புதிய புதிய மருத்துவ முறைகள் வந்ததாலை மறைஞ்சு போச்சுது. இப்ப திரும்பி வருகுது. அவ்வளவுதான்.'

இன்னமும் பல விளக்கங்கள் கூறி இறுதியில், புதன் கிழமை சிவாவை அறிதுயில் நிலைக்குக் கொண்டு செல்லலாமெனச் சம்மதித்து விட்டார்கள், வித்தியாதரனும் சிவாவுடன் ஸ்ரீபனின் வீட்டுக்கு வருவதாகக் கூறியிருந்தார்.

பொதுவாக வித்தியாதரன் இப்படியான சிகிச்சை இடங்களுக்கு போவதுமில்லை, நேரத்தைச் செலவழிப்பதுமில்லை. ஆனால், சிவாவின் விடயம் அவருக்குச் சவாலாக இருந்தது என்பதைவிட ஆச்சரியமாக இருந்தது. அதனால் என்ன என்பதை அறிவதற்காக அங்கு செல்வதற்கு உத்தேசித்து இருந்தார்.

தானொரு புதிய அனுபவத்தைப் பெறப் போகிறேன் என்பதை அப்போது வித்தியா தரன் அறிந்திருக்க நியாயமில்லைத் தான்.

# நினைவுகள் எஸ்.எஸ். ராஜேந்திரன்

## இலட்சிய நடிகர் *(1928 - 2014)*

நடிகர் விஜய் 'கத்தி' திரைப்படத்தில் தாமிரபரணி நதி தண்ணீரை 'கொகோகோலா' குளிர்பான நிறுவனம் எடுப்பதால் விவசாயிகள் பாதிக்கப்படுவது பற்றி ஆவேசமாக வசனம் பேசுகிறார். ஆனால், இதே நடிகர் விஜய்தான் தொலைக்காட்சி விளம்பரங்களில் 'கொகோகோலா' குடிக்கச் சொல்லி விளம்பரம் செய்கிறார். எவ்வளவு நகைப்புக்குரிய முரண் இது. 'நடிப்பு அவர் தொழில நடிப்பைதான் பார்க்க வேண்டும். இப்படி குறை கண்டுபிடிப்பது சரியல்ல' என்று இன்று பலர் இதற்கு சமாதானம் பேசுகிறார்கள். ஆனால், இதேபோல் நடிப்பைத் தொழிலாகக் கொண்ட ஒருவர்தான், பெரியாரின் கொள்கை மீதுகொண்ட ஈடுபாட்டால் எட்டு வயதில் இருந்தே கோவிலுக்கு செல்லாததுடன், பெரும் பணம் சம்பளத்துடன் புராணப் படங்களில் நடிக்க வாய்ப்புகள் வந்தபோது நடிக்க மறுத்துவிட்டதுடன் கடைசிவரை அதில் உறுதியாகவும் இருந்தார். அவர் சமீபத்தில் காலமான நடிகர் எஸ்.எஸ்.ஆர். இன்றைய ரசிகர்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத செய்தியாகத்தான் இருக்கும். ஆனால், எஸ்.எஸ்.ஆர். அப்படித்தான் இருநதார். அதனால்தான் அவர் லட்சிய நடிகர்!

எஸ்.எஸ்.ஆர். ஜனவரி 1928 அன்று பிறந்தவர். இவரது தந்தை பெயர் சூரிய நாராயண தேவர் கல்வி அதிகாரியாக பணியாற்றியவர். தாயார் ஆதிலட்சுமி. ஊர் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகில் உள்ள சேடப்பட்டி கிராமம். ஊர்ப்பெயரையும் அப்பா பெயரையும் சேர்த்து சேடபட்டி சூரியநாராயண தேவர் இராஜேந்திரன் ஆகி சுருக்கமாக சே.சூ. இராசேந்திரன் என அறியப்பட்டார். இதுவே பின்னாட்களில் எஸ்.எஸ். ராஜேந்திரன் அல்லது எஸ்.எஸ். ஆர். என ஆனது. எஸ்.எஸ்.ஆருடன் பிறந்தவர் பாப்பம்மாள் என்ற ஒரு சகோதரி. எப்படியாவது தனது மகனை தன்னைப்போல அரசாங்க அதிகாரியாக ஆக்கிவிடவேண்டும் என்பதுதான் எஸ்.எஸ்.ஆர். தந்தையின் லட்சியமாக இருந்தது. ஆனால், சிறு வயதிலேயே எஸ்.எஸ்.ஆர். வாழ்க்கைப் பயணம் நடிப்புப் பாதையில் திரும்பியது. எஸ்.எஸ்.ஆர்., ஐந்தாவது வகுப்பு முடித்த நிலையில் ஆறாவது வகுப்பில் சேர ஒரு வயது குறைவாக இருந்தால், ஒரு ஆண்டு வீட்டில் சும்மா இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது தந்தையின் நண்பரின் வேண்டுகோளால், பத்தாவது வயதில், புளியமா நகரில் பாய்ஸ் கம்பெனி நாடகத்தில் நடிப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்டார். 'அபிமன்யு' நாடகத்தில் நடித்தார். அதன் பின்னர் மீண்டும் பள்ளிப் படிப்பை தொடர்ந்தார். ஆனாலும், நடிப்பு நோக்கிதான் அவரது இயல்பான ஆர்வம் இருந்தது. எனவே, அவ்வப்போது பள்ளியில் நாடகங்கள் போட்டு வந்தார். 1937இல் எம்.கே.தியாகராஜ பாகவதர் நடித்த 'சிந்தாமணி' சக்கை போடு போட்டது. எஸ்.எஸ்.ஆர். மனதில் அப்படம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. 'சிந்தாமணி' கதையை இயக்கி அதில் எஸ்.எஸ்.ஆர். கதாநாயகனாக நடித்தார். அதற்கு அவருக்கு முதல் பரிசு கிடைத்தது. இந்த நாடகத்தை நடத்திய ஆசிரியர், நீ அழகாக இருக்கிறாய். நடிப்பும் நன்றாக வருகிறது. எனவே, சினிமா உலகிற்கு நீ சென்றால் புகழ் பெறமுடியும்' என்று கூறியதுடன், 'நீ இனி படிக்க வேண்டாம். நடிக்கப்போ' என்று கூறி, நாடக கம்பெனியில் சேர தன் செலவில் மதுரைக்கு அனுப்பி வைத்தார். மதுரைக்கு சென்ற எஸ்.எஸ்.ஆர்., தி.க. சண்முகம்



சகோதரர்களின் 'ஸ்ரீ பால ஷண்முகானந்த சபா'வில் துணை நடிகராக சேர்ந்தார். அங்கு 'சிவலீலா' நாடகத்தில் காவலாளி வேடமே கிடைத்தது. அதன் பிறகு 'மகாபாரதம்' நாடகத்தில் சகாதேவனாக நடிக்கத் தொடங்கினார். (இதில், திரெளபதியாக (பெண் வேடத்தில்) நடித்தவர், பின்னாட்களில் இயக்குநராக புகழ்பெற்ற ஏ.பி.நாகராஜன்.)

சிறுசிறு வேடங்களில் நாடகங்களில் நடித்து வந்த எஸ்.எஸ்.ஆர். நாளடைவில் கதாநாயகனாக உயர்ந்தார். ஆனாலும் சினிமாவில் நடிக்கவேண்டும் என்ற ஆசை எஸ்.எஸ். ஆருக்கு ஏற்பட்டது. எனவே, டி.கே.எஸ். நாடக கம்பெனியில் இருந்து விலகி, சினிமா வாய்ப்பு தேடி சென்னைக்கு வந்தார். வந்ததும் 'அபிமன்யு' படத்தில் அபிமன்யுவாக நடிக்க எஸ்.எஸ்.ஆருக்கு வாய்ப்பு கிடைத்தது. 'மேக்கப் டெஸ்ட்'கூட முடிந்துவிட்டது. இந்நிலையில் இதற்கு, 'எஸ்.எஸ். ஆர். எங்கள் நாடகக் குழுவில் இன்னும் 7 மாதம் நடிக்க ஒப்பந்தம் உள்ளது' என்று, டி.கே.எஸ். நாடக குழுவினர் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால், 'அபிமன்யு' படத்திலிருந்து எஸ்.எஸ்.ஆர். விலக நேரிட்டது. இதனால் 'அபிமன்யு' படத்தில் எஸ்.எம்.குமரேசன் நடித்தார். அதில் அர்ச்சுனனாக எம்.ஜி.ஆர். நடித்தார். இப்படி நடிப்பு வாய்ப்பு தள்ளிப்போக எஸ்.எஸ்.ஆரின் திரையுலக அவதாரம் பின்னணி பாடகராக அமைந்தது. சேலம் மூர்த்தி பிக்சர்சின் 'ஆண்டாள்' படத்தில் ஜி. ராமநாதனின் இசையமைப்பில் எஸ்.எஸ்.ஆர். 'இன்ப உலகிலே மன்மதன் பூங்கனை' என்ற பாடலை பாடினார். தொடர்ந்து நடிப்பு வாய்ப்பு தேடி முயற்சி செய்ததன் பலனாக, 1947ஆம் ஆண்டில் 'பைத்தியக்காரன்' என்ற திரைப்படத்தில் ஒரு சிறிய பாத்திரத்தின் மூலம் நடிகரானார். எம்.ஜி.ஆரும் இத்திரைப்படத்தில் ஒரு சில காட்சிகளில் தோன்றி நடித்திருந்தார். இதன் பின்னரும் நீண்ட நாட்கள் நடிக்க வாய்ப்பின்றி இருந்த எஸ்.எஸ்.ஆருக்கு 'பராசக்தி' (1952) ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இதில் சிவாஜிகணேசனின் அண்ணன் 'ஞானசேகரன்' வேடத்தில் எஸ்.எஸ்.ஆர். நடித்தார். 1952 தீபாவளியில் வெளிவந்த 'பராசக்தி' தமிழ் திரைப்பட உலகில் மறுமலர்ச்சி ஏற்படச் செய்ததுடன், அதில் இடம்பெற்ற அனைவருடைய வாழ்க்கையிலும் திருப்பத்தை ஏற்படுத்தியது. 'பராசக்தி' படத்துக்கு கதை, வசனம் எழுதிய மு. கருணாநிதியுடன் கிடைத்த நட்பு அதன் பின்னர் கருணாநிதியின் 'அம்மையப்பன்' திரைப்படத்தில் கதாநாயகனாக நடிக்கும் வாய்ப்பை எஸ்.எஸ்.ஆருக்குப் பெற்றுத் தந்தது. குறிப்பாக, சிவாஜிகணேசனைப் போல் தெளிவாகவும் உணர்ச்சியுடனும் வசனம் பேசும் ஆற்றல் ராஜேந்திரனுக்கு இருந்தது கருணாநிதியை கவர்ந்திருந்தது. 'அம்மையப்பன்' படத்தை இயக்கியவர் பீம்சிங். இதில் எஸ்.எஸ்.ஆர். ஜோடியாக ஜி. சகுந்தலா நடித்தார். ஆனால், 'அம்மையப்பன்' பெரிதாக ஓடவில்லை. எனவே, மீண்டும் சிறு சிறு பாத்திரங்களிலேயே எஸ்.எஸ்.ஆர். நடித்து வந்தார். எம்.ஆர். ராதாவின் 'ரத்தக்கண்ணீர்', முரசொலிமாறன் திரைக்கதை - வசனத்தில் ஏவி.எம். தயாரித்த 'குலதெய்வம்' (1956), மீண்டும் சிவாஜியுடன் இணைந்து நடித்த 'ரங்கோன்ராதா' (1956) என பல வெற்றிப் படங்களில் எஸ்.எஸ்.ஆர். இருந்தார்.

1957 தீபாவளி அன்று வெளியான 'முதலாளி' திரைப்படம் எஸ்.எஸ்.ஆருக்கு இரண்டாவது திருப்புமுனையாக அமைந்தது. இதில் எஸ்.எஸ். ராஜேந்திரன் ஜோடியாக தேவிகா நடித்தார். 'முக்தா' சீனிவாசன், இப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானார். குறைந்த முதலீட்டில் தயாரிக்கப்பட்ட 'முதலாளி', தீபாவளிக்கு வெளிவந்த பெரிய படங்களையெல்லாம் ஓரம்கட்டிவிட்டு, முதல் இடத்தைப் பெற்றது. எஸ்.எஸ்.ராஜேந்திரன் நட்சத்திர அந்தஸ்து பெற்றார். இப்படத்தில், தேவிகா ஏரிக்கரையில் நடந்து செல்ல, 'ஏரிக்கரையின் மேலே போறவளே பெண் மயிலே' என்று பாடியபடி (குரல்: டி.எம்.எஸ்) எஸ்.எஸ். ராஜேந்திரன் பின் தொடர்வார். இந்த பாடலும் காட்சி அமைப்பும் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தது.

தீபாவளிக்கு 2 மாதங்கள் கழித்து, பொங்கலுக்கு வெளிவந்த 'தை பிறந்தால் வழி பிறக்கும்' (1958) எஸ்.எஸ்.ஆருக்கு மற்றொரு வெற்றிப் படமாக அமைந்தது. இதில் அப்போது மலையாள திரைப்பட உலகில் முன்னணி நடிகராக இருந்த பிரேம்நசீர், எஸ்.எஸ்.ஆருக்கு அடுத்த வேடத்தில் நடித்திருந்தார். இப்படத்தில் இடம்பெற்ற 'அமுதும் தேனும் எதற்கு', 'ஆசையே அலைபோல' பாடல்கள் இன்றும் ரசிகர்களின் தமிழ் திரைப்படப் பாடல்களாக உள்ளன. இசை: கே.வி. மகாதேவன். புலவர் ஏ.கே.வேலன் இந்தப் படத்தை இயக்கி தயாரித்திருந்தார். குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்ட இப்படம், எல்லோரும் வியக்கும் வகையில் பெரிய வெற்றிப் படமாக அமைந்தது. இதன் மூலம் கிடைத்த லாபத்தில் தன் தந்தை பெயரால் 'அருணாசலம் ஸ்டூடியோ'வை ஏ.கே. வேலன் தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

'முதலாளி', 'தை பிறந்தால் வழி பிறக்கும்' வெற்றிகளைத் தொடர்ந்து எஸ்.எஸ்.ஆருக்கு ஏராளமான வாய்ப்புகள் குவிந்தன. கவிஞர் கண்ணதாசனின் திரைக்கதை, வசனம் தயாரிப்பில் மருதுபாண்டியர் வரலாறு 'சிவகங்கை சீமை' என்ற பெயரில் திரைப் படமாக எடுக்கப்பட்டது. அதில் 'முத்தழகு' என்ற தளபதி வேடத்தில் எஸ்.எஸ்.ஆர். நடித்தார். இப்படத்தில், 'இறுதியான இந்த தன்மானப் போரில் நான் இறப்பது நிச்சயம். ஆகவே, நம்குல வழக்கப்படி உயிரோடு வாய்க்கரிசி போட்டு என்னை வழியனுப்பி வை' என்று தனது மனைவியாக நடித்த குமாரி கமலாவிடம் எஸ்.எஸ்.ஆர். பேசும் வசனம் அனைவரது மனதையும் உருக்கும் வகையில் அமைந்தது. தொடர்ந்து 1950கள், 60களில் தமிழ்த் திரையுலகில் புகழ்பெற்று விளங்கிய எஸ்.எஸ். ராஜேந்திரன் 75 படங்களுக்கு மேல் நடித்துள்ளார். இதில் 'பூம்புகார்', 'மறக்க முடியுமா' போன்றவை பெரிய வெற்றிப்படங்கள். தனது மகன் மருதுபாண்டியன் பெயரில் படக்கம்பெனியை ஆரம்பித்த எஸ்.எஸ்.ஆர். 'இரட்டை மனிதன்' என்ற படத்தை எடுத்தார். படத்திற்கான கதை, வசனத்தையும் அவரே எழுதினார். கே. சங்கர் இயக்கினார். பிறகு, 'எஸ்.எஸ்.ஆர். பிக்சர்ஸ்' என்ற கம்பெனியை தொடங்கி அதன் மூலம் 'தங்கரத்தினம்' (1960) படத்தை எடுத்தார். இந்தப் படத்தில் கதாநாயகனாக நடித்ததுடன் இயக்கவும் செய்தார். இந்தப் படத்தில்தான், முதன் முதலில் தி.மு.கழகக் கொடி காண்பிக்கப்பட்டது. விஜயகுமாரி, எம்.என். ராஜம், பிரேம் நசீர் ஆகியோரும் இதில் நடித்தனர். சாதி ஒழிப்பை மையமாக வைத்து எடுக்கப்பட்ட இந்தப் படம் வெற்றிப்படமானது. 'தங்க ரத்தினம்' தவிர 'மணிமகுடம்', 'அல்லி' ஆகிய படங்களையும் இயக்கியுள்ளார் எஸ்.எஸ்.ஆர். 'அல்லி' படத்தில் இரட்டை வேடத்தில் நடித்திருந்தார்.

முதல் படத்தில் கிடைத்த நட்பின் தொடர்ச்சியாக எம்.ஜி.ஆரின் இறுதி காலம் வரைக்கும் அவருடன் சிறந்த நட்பினைப் பேணி வந்தார் எஸ்.எஸ்.ஆர். எம்.ஜி.ஆர். இரண்டு வேடங்களில் நடித்த 'ராஜா தேசிங்கு' (1960), 'காஞ்சித் தலைவன்' படங்களில் எஸ்.எஸ்.ஆர். முக்கிய வேடத்தில் நடித்தார். மேலும் பல படங்களில் எம்.ஜி.ஆருடன் இணைந்து நடித்துள்ளார். சிவாஜி கணேசனுடனும் இணைந்து நடித்துள்ளார். 'பராசக்தி'க்குப் பிறகு 'மனோகரா' 'பணம்', 'ரங்கோன்ராதா', 'தெய்வப் பிறவி', 'ஆலயமணி', 'பச்சை விளக்கு', 'கைகொடுத்த தெய்வம்', 'பழனி', 'சாந்தி', 'எதிரொலி', 'தெய்வப்பிறவி' உட்பட அதிக படங்களில் சிவாஜிகணேசனுடன் நடித்துள்ளார். இவற்றில் முக்கியமானது 'மனோகரா'. 'பராசக்தி'க்குப் பிறகு சிவாஜி கணேசன் - கருணாநிதி கூட்டணியில் அமைந்த மகத்தான வெற்றிப் படம் இது. இதில் சிவாஜி கணேசனின் உயிர்த்தோழனாக ராஜேந்திரன் நடித்தார்.

நடிகர் சங்க தலைவராகவும் எஸ்.எஸ்.ஆர். ஒரு முறை பதவி வகித்துள்ளார். காலம் மாறியது, வயதும் ஏறியது. ரஜினி, கமல் என புதிய நடிகர்கள் வந்து திரையை ஆக்கிர மிக்கத் தொடங்கினர். இந்நிலையில் சில காலம் திரையுலகைவிட்டு ஒதுங்கியிருந்தார் எஸ்.எஸ். ஆர். பிறகு நீண்ட இடைவெளிக்குப் பிறகு சின்னத்திரை தொடர்களில் தோன்றினார். 1980களில் மோகன் பிரபலமாக இருந்த நேரத்தில் அவரது 'அன்பின் முகவரி' படத்தில் கௌரவ வேடத்தில் நடித்தார் எஸ்.எஸ்.ஆர். பின்னர் விஜயகாந்துடன் 'தர்மா', சரத்குமாருடன் 'மூவேந்தர்', சூரியாவுடன் 'ஸ்ரீ', நெப்போலியனுடன் 'ராஜாளி', சிலம்பரசனுடன் 'தம்' படங்களில் எஸ்.எஸ். ஆர். நடித்துள்ளார். 2003ஆம் ஆண்டு வெளியான 'தம்' படம்தான் எஸ்.எஸ்.ஆர். நடித்த கடைசிப் படம். மீண்டும் நாடக உலகுக்குத் திரும்பிய எஸ்.எஸ்.ஆர்., இந்திரா காந்தியை பிரதமர் பதவியை துறக்கச் செய்த எஸ்.எஸ்.ஆர். அரசியல் வாழ்க்கை, எஸ்.எஸ்.ஆர். நடிகை விஜயகுமாரி காதல் உட்பட இன்னும் பல அடுத்த இதழில்.








வாழ்ந்தவர் கோடி மறந்தவர் கோடி
மக்கள் மனதில் நிற்பவர் யார்?
மாபெரும் வீரர் மானம் காத்தோர்
மக்கள் மனதில் நிற்கின்றார்...
27 நவம்பர் மாவீரர் நாள்.



ஐ பொட் அகிலாண்டேஸ்வரியின் முகம் அமாவாசை நிலவு போல கறுத்திருந்தது. தனக்கு தெரிந்தவர்கள், தமிழர்கள் வெல்ல வேண்டுமென்று ஆர்வம் கொண்டிருந்தாலும், லைசென்ஸ் புதுப்பிக்காமல் 4 வருடங்கள் வைத்திருக்கிறா பதிந்த விலாசம் மொன்றியல். வதியும் இடம் விற்பி. ஹெல்த் காட் வேறு விலாசம். இடம் மாறித் திரிவதில் சிற்றிசன் காட் எங்கேயென்றே தெரியாது…



இப்போ அதிகம் நிற்பது உலகர் குழாமுடன்தான் லெக்சனுக்கு வாக்கில்லாமலே வரிந்து கட்டிக்கொண்டு முழு மனதோடு இரவு பகலாக தமிழர்கள் வெல்ல வேண்டும் என்ற வெறியும் ஆர்வமும் ஐபொட் அகிலாண்டேஸ்வரிக்கு வேலை செய்யும் இடங்களில் வேற்று நாட்டவர் தமிழர்களைக் பற்றி தப்பாகவும் தவறாகவும் கதைக்கும்போது அவர்களின் வாயடைக்க செய்யவேண்டும் என்பது தான் அவவின் ஆசை.



கால் நூற்றாண்டுகளில் தமிழர்களிடையே எத்தனை மாற்றம்?
கனடாவில் பிறந்து வளர்ந்து முத்தமிழோடு கலை கலாசாரம் பேணுவதில் தமிழ் சிறுவர்கள் மாணவர்கள் இளைஞர்கள் முன்னணியில் நிற்கிறார்கள். கால்நூற்றாண்டைக் கொண்டாடும் பல ஊர் மன்றங்கள், பழைய மாணவர் சங்கங்கள் தமிழில் விழா நடத்துவதும் கனேடியக் கலைஞர்களை ஊக்கப்படுத்தி பாராட்டுவதும் பெருமைக்குரியது.

தமிழ் என்ற சொல்லைப் பாவித்து கொண்டாடும் தமிழ் விழாக்களை தமிழிலை நடத்துங்கோ என சில வருடங்களுக்கு முன் ரூபிக்கு செக்கண்ட்புளோர் செல்லம்மா பேசியது
உலகர் வீட்டில் பெரும் பிரச்சினையை உருவாக்கியது.

தமிழர்கள் படிப்பது, நல்ல வேலை செய்வது, அரசியலிலும் பங்கெடுப்பது சந்தோசமான விடயம். ஆனால் எங்கெங்கே யார் யாருக்கு வோட் போடுவது என்று செக்கண்ட்புளோர் செல்லம்மாவுக்கு இன்னும் தெளிவில்லை.
யார் யாருக்கு தான் வாக்களித்ததென்று

ரூபி ஏன் தமிழ் ஒழுங்காகப் படிக்கவில்லையென பிராங்பேட் பேரம்பலத்திடம் உலகர் கேட்டபொழுது...

இனிமேல் தமிழ் படிச்சு என்ன செய்யப் போயினம் எனக்கேட்ட
பிராங்பேட் பேரம்பலம் (ரூபியின் டடி)

பிராங்பேட் பேரம்பலம் கூட தமிழ் கனடாவிலை வளரவேணுமெண்டால் தமிழ் ஆக்களுக்கு வோட்பண்ணி அனுப்பவேணும் என தனது செல்போன் பற்றரியை மாறி மாறி சார்ஜ் செய்து லெக்சன் கன்வெஸிங் செய்துகொண்டிருந்தார்.

தமிழ் கலை கலாச்சாரம் சமயம் பண்பாடென்பது
கறிக்கு கருவேப்பிலை பாவிப்பது போல சிலருக்கு பழகிப் போய்விட்டது.



ரொறொன்ரோ மாநகரசபை தேர்தல் முடிந்து இன்னும் முதலாவது அமர்வு கூட நடைபெறவில்லை.
சட்டம் தன் கடமையை செய்யும் என்பது... தேர்தலில் வென்றாலென்ன தோற்றால் என்ன வீதிகளில், பொதுஇடங்களில் காலதாமதமாக, அகற்றப்படாத பதாதைகளுக்கு தண்டப்பணம் வசூலிக்கப்படவுள்ளது.

சட்டம் தன் கடமையை செய்யும்!



இலங்கையின் மலையகப்பகுதியில் கொஸ்லாந்தைப் பகுதில் மண்சரிவு ஏற்பட்டதில் பல குடும்பங்கள் முற்றாக மண்ணால் மூடப்பட்டு உயிரிழந்துள்ளனர். மீட்புப்பணிகள் நடந்தாலும் எந்த வெளிநாட்டு உதவியும் தேவையில்லையென ஜனாதிபதி அறித்துள்ளார்.



பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை வடபகுதியில் அழிக்கும்போது உந்த அறிக்கையை விடுத்திருக்கலாம்.

பல நாடுகளில் ஆயுதப்பிச்சையும் இராணுவப்பிச்சையும் பெற்று தமிழர்கள் உயிரழிப்பு இன்னும் கணக்கிடப்படவில்லை.



கனேடிய சரித்திரத்தில் கறை படிந்தது போல தலை நகரில்
நாடாளுமன்றம் கூடும் நேரத்தில்
நினைவுச் சின்னத்திற்கு காவலில் நின்ற இராணுவ வீரன்
சிறில்லோ துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டார்.
சின்னம் காத்தவர் உடலில் சன்னம் பாய்ந்தது.

பிறந்த மண்ணுக்காக மரணித்தவர்களை மக்கள் மறப்பதில்லை.
அவர்கள் மனதை விட்டு மறைவதுமில்லை.



அரச மரியாதையுடன் இறுதி ஊர்வலம்.
கனேடியப் புதல்வன் என சில ஆங்கிலப் பத்திரிகைகள் தலையங்கம் தீட்டின.



தேர்தல் ஆரவாரம் ஒருபுறம் கந்தசஸ்டி ஒருபுறம்
அதற்கும் மேலாக
கத்தி படத்தை தியேட்டரில் பார்க்க ஒரு கூட்டம்.




கோவிலில் லிங்கத்தைப் பார்க்க நேரமில்லை ரஜனியின்
லிங்கா எப்போ வெளியாகும் என ஒரு கூட்டம்



ரஜனியின் லிங்கா றிலீசாகும்போது எப்படி விக்கிரம்
ஐ படத்தை வெளியிடுவார் என ஒரு கூட்டம்.



நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுதே நீங்கிடாத துன்பம் பெருகுதே

2011 ஆம் ஆண்டு போதை வஸ்து கடத்திய குற்றத்திற்காக 5 இந்திய மீனவர்களுக்கும் 3 இலங்கையர்களுக்கும் இலங்கை நீதி மன்றம் மரண தண்டணை விதித்துள்ளது

ஞாபகம் இருக்கிறதா? நவம்பர் 1....15.



01. நேர மாற்றம்.

02. விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நினைவுதினம் (1967-2007)

02. அறிஞர் பெர்னாட்சா நினைவுதினம் (1950)



07. திருமுருக கிருபானந்தவாரியார் நினைவுதினம்.
ஆன்மீகவாதி (1906 – 1993)

10. நடராஜா ரவிராஜ் - நாடாளுமன்ற உறுப்பினர், தமிழர் தேசிய கூட்டமைப்பு நினைவுதினம். (1962..2007)

11. 1933 யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டது.
(1983 இல் அரச உதவியுடன் அரசபடைகளால் எரிக்கப்பட்டது)



11. REMEMBERANCE DAY.....

13. உலகவலைப் பின்னல் ஆரம்பித்த நாள். (1990)



14. உலக நீரிழிவு நாள்.

14. ஐப்பசி கடைசி வெள்ளி.

நான் வாசித்தது
நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே. அனுப்புங்கள்
*Vlambaram@sympatio.ca*
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!


யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361


உங்கள் பிள்ளைகளின் முன்னேற்றமான எதிர்காலம் இங்கு ஆரம்பமாகிறது
கணித வகுப்புகள், ஆங்கில வகுப்புகள், பிரஞ்சு வகுப்புகள், பாடசாலை வீட்டுவேலை வகுப்புகள்.
NETKRAM
GIVING THE GIFT OF EDUCATION
ADVANCE AND NEW
MATH CLASSES
For Grade 1 - 12
INDIVIDUAL APPROACH FOR EACH STUDENT
(ADVANCE EXPLANATION)
தனிப்பட்ட முறையிலும் வகுப்புகள் நடத்தப்படும்
SPECIAL KIDS COMPUTER CLASS
> PROGRAMING LOGIC
> SKILL BUILDING ACTIVITIES
ADVANCE CLASSES
UML
PHP
ASP.NET
ASP
JAVA
C++, C#
VISUALBASIC.NET
DATABASES
PC-TECHNICIAN
A+ CERTIFICATION
OFFICE 2010/2007
WORD
EXCEL
POWERPOINT
ACCESS
OUTLOOK
Microsoft Office Specialist (MOS) Certification
INTERNET PROGRAMMING ( I )
HTML
CSS
XML
INTERNET PROGRAMMING ( II )
Javascript
Server Side Web Development
Internet Webmaster Certification
JOB TRAINING FOR QUALIFIED STUDENTS
FRENCH & ENGLISH READING CLASSES
HOME WORK CLASSES
Math
English
French
Other Subjects
GRADE 1 TO GRADE 6
ENGLISH AND FRENCH MEDIUM
மாதாந்தத் தேர்வுகள் கணினி மூலம் கற்பிக்கப்படும்
உயர்தர வகுப்புகள்
Math for HIGH SCHOOL
French for HIGH SCHOOL
English for HIGH SCHOOL
எமது உயர்வகுப்பு மாணவர்கள் அதி உயர் புள்ளிகள் பெற்று (Honor) சித்தியடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது
சிறந்த முறையில் வடிவமைக்கப்பெற்ற பாடநெறி முறைகளும், வழிநடத்தலும் அதி உயர் புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு தொழிற் பயிற்சியளிக்கப்படும்
COMPUTER
மின்கணினியில் பிரச்சனையா? சிறந்த முறையில் திருத்தி அமைத்து கொடுக்கப்படும்
-REPAIR -SALES
-UPGRADE
-SERVICES
opening hours
Mon - Thu : 4:00 PM - 9:00 PM
Sat - Sun : 9:00 AM - 5:00 PM
www.netkram.com
Contact : 905 - 471 - 1230
30 New Delhi Drive, Unit 68
Markham and 14th Avenue


வாகன விபத்து
MOTOR VEHICLE ACCIDENT
SKT PARALEGAL SERVICE
CRIMINAL MATTERS
SUMMARY
416.803.5296
Kalakalappu Theesan
கலகலப்பு தீசன்
SK THEESAN
TRAFFIC TICKETS
LICENSED PARALEGAL
sktheesan@gmail.com
MOTOR VEHICLE ACCIDENT
SERIOUSLY INJURED ?
ACCIDENT BENEFITS
PERSONAL INJURY
TRAFFIC TICKETS
DON'T
MISS YOUR TRIAL DATE
LOSE YOUR POINTS
CRIMINAL CONVICTION
PERMANENT RESIDENT
CITIZENSHIP
SPONSORSHIP
CRIME
CRIMINAL CHARGES ?
EXPERIENCED LAWYERS AVAILABLE


"Let me help you make the right choice"
Schuren Sriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393


BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL
Vany Jeganmohan
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca
HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6962
GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2


"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell
RE/MAX
All Stars Realty Inc.
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit
கவலை வேண்டாம்
Guaranteed Result


For All Your Real Estate Needs
BUY OR SELL
Terrence Thambyrajah
Sales Representative
Dir : 647-709-1202
Bus: 905-201-9977
Fax: 905-201-9229
E-Mail: terrence.thambyrajah@gmail.com
HomeLife/Future Realty Inc.,Brokerage*
*Independently owned and Operated


Canada Trust வங்கியில் அனைத்து
Mortgage கடன் வசதிகள் பெற்றுக்கொள்ள
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692
1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Low Mortgage Rates


அகத்தின் அழகு முகப்பில் தெரியும்......
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com


Free Real Estate Class - Call: 416.321.6969
RealEstate / Mortgage / Commercial Investments
AUTO BODY SHOP + BUSINESS FOR SALE
DANFORTH & MAIN
Price : $1.49 Million
HARWOOD & ROSSLAND
Bedroom : 3
Washroom: 3
Walk-out bsmt
Price : $489,900
MARKHAM & FINCH
Profitable knit wear Business + Building
Sales Over 700k
Price : $865,00
MEADOWVALE & ELLESMERE
Bedroom : 4 + 3
Washroom: 5
Price : $725,00
BRIMLEY & EGLINTON
CONVENIENCE STORE FOR SALE
Price: $650,900
Lease: $2600
KENNEDY & HWY 401
Bedroom : 2
Washroom: 2
Price : $299,900
900 Sq.ft
MORTGAGE ALLIANCE
RE/MAX Dynasty Realty Inc.
A. Anton Jeeva B.Eng
Principal Mortgage / RealEstate Broker
Ranked among the top 1% of all Realtors in the GTA
Mortgage Rates Starting From 2.5%
Dir: 416.575.5055
Remax Dynasty Realty Inc., Brokerage 8 Shadlock St, Unit #7 Markham, ON L3S 3K9


THE TRUSTED MORTGAGE AGENT
"Solution For Ever Mortgage"
MORTGAGE ALLIANCE
The Guardian
•I will arrange your 1st Mortgage with 5% down.
•Need a 2nd Mortgage???
"When banks say no We say yes"
@ Interest rate starting from 6.99%+.
Thayalan Gobalakrishnan
(M12001612)
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Contact: 416.575.3211
E-Mail: thaya.gobal@gmail.com
*Some Terms & Conditions May Apply


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969
* INDEPENDENTLY OWNED AND OPERATED